

# அகளங்கன்
# இசை நடனப் பாடல்கள்

அகளங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகளங்கன்

# இசை நடனப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகளங்கன்

# இசை நடனப் பாடல்கள்

## அகளங்கன்

வெளியீடு :

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் - 44

2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பெயர் | :- | **அகளங்கன் இசை நடனப் பாடல்கள்** |
| வகை | :- | பாடல் |
| எழுதியவர் | :- | **அகளங்கன் (நா.தர்மராஜா)** |
| முகவரி | :- | 90, திருநாவற்குளம், வவுனியா |
| பதிப்புரிமை | :- | திருமதி பூரணேஸ்வரி தர்மராஜா B.A (Hons) |
| வெளியீடு | :- | வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்<br>90, திருநாவற்குளம், வவுனியா |
| முதலாம் பதிப்பு | :- | 2021 டிசம்பர் 04 |
| அச்சுப்பதிப்பு | :- | வாணி கணினிப் பதிப்பகம்.<br>இல 85, கந்தசுவாமி கோவில்வீதி,<br>வவுனியா 024- 2223658 |
| விலை | :- | ரூபா 1000/= |
| ISBN | :- | 978-624-6141-00-4 |

---

| | | |
|---|---|---|
| Name | :- | **Agalangan Isai Nadanap Padalgal** |
| Type | :- | Lyrics |
| Author | :- | **Agalangan (N.Tharmarajah)** |
| Address | :- | 90, Thirunavatkulam Vavuniya. |
| Copyrights | :- | Mrs. Pooraneswary Tharmarajah B.A(Hons) |
| Published by | :- | Circle of Arts and Literary friends Vavuniya.<br>90, Thirunavatkulam, Vavuniya. |
| First Edition | :- | 2021 December 04 |
| Printer | :- | Vaani Computer Printing Center.<br>No 85, Kanthasamy Kovil Road,<br>Vavuniya. 024 2223658 |
| Price | :- | Rs 1000/= |
| ISBN | :- | 978-624-6141-00-4 |
| Email | :- | akalankan04@gmail.com |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பல நாட்டிய நாடகப் பாடல்களையும்,

இசை நடனப் பாடல்களையும்

இசையமைத்துப் பாடிய

சகோதரி

அமரர்.கலாபூஷணம் திருமதி தேவிமனோகரி நாகேஸ்பரன்

அவர்களுக்கு

இந்நூல்

காணிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழ்த்து

இசைத்திட இனிதாகும் எங்கள் பெருமை - தமிழ்
இன்பமோ சொல்லினிலே சொல்லல் அருமை
திசைதோறும் எங்கள்மொழி செய்யும் புதுமை - இது
தேவர்க்கும் கடவுளர்க்கும் என்றும் இனிமை.

(இசைத்.... )

பக்தியின் மொழி தமிழாம்
பரவசந் தரும் புதிராம்
நித்தியம் வளம் பெருகும்
நிகரிலா மொழி தமிழாம்.

கம்பனும் வள்ளு வரும்
கவிஇளங் கோவுந் தந்த
செம்மை மிகு கவிதை
சிந்தை தனை நிறைக்கும். (இசைத்.....)

ஔவையின் அறி வுரைகள்
அருண கிரிப் புகழ்கள்
செவ்வை மிகு தமிழில்
சேக்கிழார் தரும் கவிகள்

மூவர் தமிழ் அமுதும்
முடி மன்னர் ஆதரவும்
தேவர் களும் பருகும்
திருவா சகப் பொலிவும் (இசைத்....)

நல்லூர் நா வலரும்
நல்ல விபு லானந்தரும்
பல்லோர் புகழ்ந் தேத்தும்
பாரதி வள்ள லாரும்

குமர குரு பரரும்
குரு தாயு மானவரும்
உமறுப் புல வரொடு
உயர் வீர மாமுனிவர்.
(இசைத்....)

இசையமைப்பு : திரு.சோ.ஜெயச்சந்திரா

பாடல் : அகளங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| வெளியீட்டுரை | 11 |
| இந் நூலாசிரியர் | 12 |
| இந் நூலாசிரியரின் நூல்கள் | 14 |
| சிறப்புரை | 16 |
| அனுபவப் பகிர்வு | 21 |
| முன்னுரை | 25 |
| 1. சித்தி விநாயகனை.... | 33 |
| 2. செல்வ விநாயகர் | 34 |
| 3. கூழாங்கேணி வன்னியப் பிள்ளையார் | 35 |
| 4. சிவதாண்டவம் | 37 |
| 5. தாண்டவம் | 40 |
| 6. சாஸ்திரி கூழாங்குளம் | 43 |
| 7. என்னையும் சேர்த்துக்கொள்வாரா | 44 |
| 8. வற்றாப்பளை கண்ணகை அம்மன் | 45 |
| 9. நயினை நாக பூஷணி அம்மா | 46 |
| 10. பிரண்டாவின் பேரொளியே.... | 48 |
| 11. எண்ணி எண்ணி ஏங்குகிறேன்.... | 49 |
| 12. நல்லையிலே கண்டேனே .... | 50 |
| 13. காரைநகர் வயல் வெளியில்.... | 52 |
| 14. கலை வாணியே .... | 54 |
| 15. பாடுவாய் மகளே தமிழ்ப் பாட்டு.... | 55 |
| 16. தமிழே நம் உயிராகும் .... | 57 |
| 17. தமிழா தமிழா பெருமைகொள்.... | 58 |
| 18. திங்களுக்கு மூத்த தமிழ் .... | 59 |
| 19. எங்கள் தமிழ் | 61 |
| 20. தமிழ் வாழுமே தமிழ் வாழுமே | 62 |
| 21. வீரத் தாலாட்டு | 64 |
| 22. ஏன்பெருமை கொள்ளுகிறோம் | 65 |
| 23. சிந்திய இரத்தத்தில்.... | 67 |
| 24. குயில் கூவும் வசந்தங்கள் .... | 68 |
| 25. ஈழநாடு எங்கள் நாடு .... | 69 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 26. | ஆளுவது மட்டுமல்ல அரசியல் | 73 |
| 27. | வன்னித் திருநாடே.... | 74 |
| 28. | பண்டார வன்னியன் | 75 |
| 29. | பார்புகழும் வன்னி மண் | 81 |
| 30. | அவனியில் சிறந்த பம்பைமடு | 83 |
| 31. | அந்த நாளிலே .... | 85 |
| 32. | அப்பாவைப் போலே | 87 |
| 33. | அத்தனை பிறவியிலும் | 88 |
| 34. | நட்புக்கு இணையாய் .... | 89 |
| 35. | எதிர்காலம் நாசமாகும் | 90 |
| 36. | குடியைக் கெடுக்கும் குடி.... | 91 |
| 37. | குடியைக் கெடுக்கும் குடி.... நடனம் | 92 |
| 38. | குடும்பம் ஒரு கோயில் | 95 |
| 39. | ஊனம் என்று சொல்கிறார்கள்.... | 96 |
| 40. | பிரதேச தொழில்சார் கிராமியப் பாடல் | 98 |
| 41. | என்ன விதியோ என்ன சதியோ | 102 |
| 42. | கடலே கடலே கதறி அழு .... | 103 |
| 43. | கோரக் கொடுங் கடலே.... | 104 |
| 44. | சின்னஞ் சிறிய பிஞ்சு | 105 |
| 45. | சமத்துவமாய் புதிய தோர் உலகம் | 106 |
| 46. | வளரும் சின்ன ராஜாக்கள் | 107 |
| 47. | சிறகு முளைக்கும் பறவைகள் | 109 |
| 48. | சிரிக்கும் முல்லைகள் | 111 |
| 49. | வசந்தமே வசந்தமே.... | 112 |
| 50. | நாளை இந்த நிலைமாறும் | 113 |
| 51. | நாளெல்லாம் திருவிழா .... | 114 |
| 52. | தினம் தினம் புது உறவு வரும்.... | 118 |
| 53. | உள்ளம் பேசும் வார்த்தை .... | 121 |
| 54. | சிற்பிகள் சமுதாய சிற்பிகள் | 122 |
| 55. | விழி திறக்கும் - சமாதானம் | 123 |
| 56. | சூழல் பாதுகாப்பு | 125 |
| 57. | நம்புங்கள் உண்மை நம்புங்கள் | 127 |
| 58. | எங்கள் வரமே பனைமரமே | 128 |
| 59. | மூடிக்கிடக்குதடா மண்ணுக்குள்ளே | 131 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. உலகே இடுகுழிப் பெரும் பள்ளம் 133
61. மண் பார்த்த உழவன் 134
62. பொங்கற் பாட்டு 135
63. உலகம் எங்கள் பின்னால் வரும் 137
64. கிராமிய நடனம் 140
65. நீராடற் பாட்டு 141
66. விவேகானந்தர் நாமம் பாடிடுவோம் 143
67. வீரத் துறவியைப் போற்றுவோம்.... 144
68. சங்கவியே சாம்பவியே.... 146
69. நம்தனம் என இது நன்மை மிகுந்தது. 148
70. சின்னச் சின்னச் சிமிழே .... 151
71. கரகாட்டப் பாடல் 153
72. இராமனின் வழியே .... 154
73. அன்பே உலகின் மகா சக்தி .... 156
74. நல்லிணக்கப் பாடல் 157
75. சாதி பேதம் இல்லாத .... 158
76. என்ன கொடுமையடா தமிழா.... 159
77. இயற்கையை நேசி .... 160
78. என்ன கொடுமை இது நாட்டிலே .... 161
79. உழுபவன் பசியால் .... 162
80. குதூகலப் பாட்டு 163
81. ஆதிக் குடிகள் நடனம் 165
82. நாடுவிட்டு நாடுசெல்ல வில்லையம்மா .... 167
83. வவுனியா பிரதேச சமகால வாழ்நிலை 169
84. வயலும் வாழ்வும் 172
85. ஒற்றுமையே எங்கள் .... 174
86. சாரணியர் பாட்டு 175
87. வசந்தத்தினை விதைப்போம் 176
88. புது வருடப் பிறப்பு 177
89. வாள் நடனம் 178
90. போர்க்களம் 182
91. தீபங்கள் ஏற்றிடுவோம்.... 185
92. காவடி நடனப் பாட்டு 187
93. கும்மி நடனம் 188



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94. கோலாடுவோம்.... 189
95. கண்ணன் நடனம் 190
96. பெண்கள் நேற்று இன்று நாளை 194
97. பெண் சக்தி....- நடனம் 196
98. பொல்லாங்கு செய்யுங் கண்ணன்.... 199
99. மங்கல மாலைகள்....-வரவேற்பு நடனம் 200
100. மாவிலைத் தோரணம் கட்டுங்கடி.... 201
101. வாசலைக் கூட்டுவோம்.... 202
102. அன்பு மிகுந்து வரவேற்போம் 203
103. வருக வருக இங்கு வருகவே.... 204
104. வாருங்கள் வாருங்கள்.... 205
105. வருக வருகவென வரவேற்போம்.... 206
106. கோலக் குறவள்ளி .... 127
107. குறவன் குறத்தி நடனம் 210
108. கிட்டக் கிட்ட வந்து கண்ணன்.... 213
109. அன்றொரு நாளிலே தோழி .... 214
110. அமுதகானமே .... 216
111. காவியம் புகழும் காலத்தில் .... 217
112. கூவுது குயில் ஒன்று .... 218
113. பொன் மாலை நேரம் .... 219
114. தோல்வி அடைந்துவிட்டேன். 220
115. கண்ணின் மணி றாஜாவே 221
116. வா நிலவே வான் நிலவே.... 222
117. கிழக்கென்று நினைத்தேன் .... 223
118. பசும்புல்லில் வேள்வி நடக்கும் 224
119. பாலை மணல்ப் பாழ்வெளியில்.... 225
120. தனிமை நெருப்பு 226
121. சகலரும் சமமென உலகமைப்போம் 227
122. திருக்குறள் நடனம் 228
123. மானுடம் வாழ்க 234
124. புதுக்குளம் மகா வித்தியாலயம் 242
125. வித்தியா விநாயகர் 243
126. பக்தர்களைக் காத்தருளும் பம்பைமடு வைரவா 244



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியீட்டுரை

கொரோனாக் கொடுநோயின் காரணத்தினால் எமது வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் செயற்பாடுகள் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து முற்றாகத் தடைப்பட்டன.

1997 மாசி மாத முழுநிலா அன்று தொடங்கி இதுவரை 219 முழு நிலாக் கருத்தாடல் நிகழ்வுகளைச் செய்து முடித்திருக்கிறோம். 43 நூல்களையும், மாருதம் என்ற பெயரிலான எமது சஞ்சிகையின் 19 இதழ்களையும் வெளியிட்டுள்ளோம். 22ஆண்டு விழாக்களையும் சிறப்பாகச் செய்துள்ளோம்.

எமது வட்டத்தின் தலைவர் தமிழறிஞர் தமிழ்மணி அகளங்கன் எழுதிய "அகளங்கன் இசை நடனப் பாடல்கள்" தொகுப்பு நூலை 44 ஆவது நூலாக வெளியிடுவதில் வட்டம் பெருமை கொள்கிறது.

வட்டத்தின் பல்வேறு செயற்பாடுகளால் வவுனியாவில் கலை இலக்கிய ஆர்வம் இளைஞர்கள் மத்தியில் பெரிய அளவில் வளர்ந்துள்ளது. தமிழினதும், சமூகத்தினதும் வளர்ச்சியில் பங்கு கொண்டு வாழும் மாணவர்கள், இளைஞர்கள், மூத்தோர்கள், பலர் கௌரவிக்கப்பட்டு உற்சாகப் படுத்தப்பட்டுள்ளார்கள்.

எமது வட்டம் ஒழுங்கு செய்யும் பல்வகைத் தன்மையான கலை இலக்கியப் பணிகள் சரியான முறையில் சமூகத்திற்குச் சென்றடைவதற்கு கலாநிதி அகளங்கனின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. அகளங்கனின் பல்துறை எழுத்துப் பணி அடுத்த தலைமுறை எழுத்தாளர்களுக்கு ஆதர்சமாக இருந்து வருகிறது

மரபு இலக்கியம், கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, இசைப் பாடல்கள், சிறுவர் இலக்கியம், முதலான பல்வேறு கலை இலக்கிய வடிவங்களுூடாக சமூக அக்கறையுடன் தீர்க்க தரிசனம் மிக்க படைப்புக்களை வெளியிட்டு வைக்கும் இவரது தமிழ்ப்பணியும், இலக்கியப் பணியும் பாராட்டத் தக்கன.

இந்த ஆண்டில் நாம் வெளியிடும் முதல் நூலாக இவரது இந்த நூலை வெயிட்டு வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

**கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்.
ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
செயலாளர், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந் நூலாசிரியர்

சொந்தப்பெயர் : நாகலிங்கம் தர்மராஜா
புனைபெயர் : அகளங்கன்
பிறந்த இடம் : இலங்கையின் வடக்கு மாகாணத்திலுள்ள பம்பைமடு என்னும் கிராமம்.
பிறந்த திகதி : 04.12.1953
முகவரி : 90, திருநாவற்குளம், வவுனியா
Email : akalankan 04@gmail.com
தொழில்நிலை : ஓய்வுநிலை ஆசிரியர்
பொது ஈடுபாடு : தமிழ், சைவ, சமூக முன்னேற்றத்துறை,
கலை இலக்கிய ஈடுபாடு : தமிழிலக்கியம், சைவசமயம், சமூகம் சார்ந்த ஐந்நூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகள். கவிதை, நாடகம், புனைகதை, சிறுவர் இலக்கியம், பேச்சு, புராண படனம்,
நூல் வெளியீடு : ஐம்பதிற்கும் மேற்பட்ட பல்துறைசார் நூல்கள், 25க்கும் மேற்பட்ட சிறப்பு மலர்களின் ஆசிரியர்

**பெற்ற பட்டங்களில் சில**

காவிய மாமணி, கவிமாமணி, திருநெறிய தமிழ் வேந்தர், பல்கலை எழில், புராண படன புகழ் தகை, புராண படன வித்தகர், விநாயகர் புராண வித்தகர், இலக்கியச் சுடர், சிவனருட் செல்வர். வாகீச கலாநிதி, செஞ்சொற் செல்வர், வித்தியா சுரபி, முத்தமிழ்ச் சுரபி, செந்தமிழ்க் கொண்டல், சைவத் தமிழியற் கோ, முத்தமிழ்க் கலைச் சுடர், தமிழியல் வித்தகர், செம்பணிச் சிகரம், செந்தமிழ்ப் பாரிவேள், கலாபூஷணம், தமிழ் மணி, கலை மாமணி, கலாநிதி

**பெற்ற கௌரவங்களில் சில**
**இலங்கையில்**

- ஆளுநர் விருது (வடக்கு - கிழக்கு மாகாணம்)
- நாவலர் விருது (மன்னார் அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியம்)
- கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருது. (நாடகம் - யாழ் இலக்கிய வட்டம்)
- முத்தமிழறிஞர் சொக்கன் விருது (முத்தமிழ் - யாழ் இலக்கிய வட்டம்)
- பாரதி விருது (கவிதை - மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கிய மன்றம்)
- நுழைபுலம் ஆய்வு விருது (ஆய்வு - கொழும்பு கம்பன் கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாழ்நாள் சாதனையாளர் விருது (எழுத்து - கல்வியமைச்சு கொழும்பு)
- வாழ்நாள் சாதனையாளர் விருது (இரா உதயணன், இலங்கை, இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்)
- ஐ.பி.சி (I.B.C) வானொலி தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ் ஆளுமைக்கான விருது

**இந்தியாவில்**

- விபுலானந்தர் படைப்பிலக்கிய விருது - முற்றத்துக் கரடி சிறுகதைத் தொகுப்பு (தமிழ் நாடு எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழக தமிழ்ப் பேராயம்)
- தமிழ் நாடு திருப்பூர் விருது - முற்றத்துக் கரடி சிறுகதைத் தொகுப்பு
- தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற அறந்தை நாராயணன் விருது - கங்கையின் மைந்தன் (நாடகத் தொகுப்பு)
- தமிழ் நாடு திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழக விருது.
- புதுச்சேரி (பாண்டிச்சேரி) குழந்தைகள் கலை இலக்கிய வளர்ச்சிக் கழக விருது.

**நூல்களுக்காகப் பெற்ற விருதுகள்**

- தேசிய சாகித்திய மண்டல விருது - இரண்டு நூல்கள்.
- தேசிய சாகித்திய மண்டல சான்றிதழ் - மூன்று நூல்கள்
- வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு - இரண்டு நூல்கள்.
- வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு - ஆறு நூல்கள்.
- கொழும்பு தமிழ்ச்சங்கம் - ஒரு நூல்
- எழுத்தாளர் ஊக்குவிப்புமைய தமிழியல் விருது - நான்கு நூல்கள்.
- இலங்கை இலக்கியப் பேரவை விருது - ஒரு நூல்
- இலங்கை இலக்கியப் பேரவை சிறப்புச் சான்றிதழ் - இரண்டு நூல்கள்.
- கொடகே தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ் - ஒரு நூல்
- இரா உதயணன் இலக்கிய விருது - ஒரு நூல்

பாடத்திட்டத்தில்

**இலங்கை கல்வி அமைச்சின் பாடத்திட்டத்தில்**

- குழந்தையென எனது மனம் குதூகலிக்கும் - மரபுக்கவிதை க.பொ.த.சாதாரண தரம், தமிழ்மொழி
- சேற்று வயற் காட்டினிலே - இசைப்பாடல் - க.பொ.த.உயர்தரம், சங்கீதம்
- ஔவையாரும் நெல்லிக்கனியும் - நாடகம் ஐந்தாம் ஆண்டு தமிழ்

**கிழக்கு மாகாண முன்பள்ளி பாடத்திட்டத்தில்**

- அம்புலிமாமா - குழந்தைப் பாடல்

**டாக்டர் ஓ.கே.குண நாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந் நூலாசிரியரின் நூல்கள்

1) “செல்” “வா” என்று ஆணையிடாய் (அஞ்சலிக் கவிதை-1977)
2) சேரர் வழியில் வீரர் காவியம் (குறுங்காவியம்,-1982)
3) சமவெளி மலைகள் (அகளங்கன்.சு.முரளிதரன் கவிதைகள்-1985)
4) வாலி (ஆய்வு நூல்.மூன்று பதிப்புகள்.1987, 1989, 2006- இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த இலக்கிய நூலுக்கான சான்றிதழ்- 1987)
5) இலக்கியத் தேறல் (கட்டுரைகள்-1988)
6) நளவெண்பா (கதை-1989)
7) அன்றில் பறவைகள் (நாடகங்கள், 1992-தேசிய சாகித்திய மண்டலப் பரிசு- 1992)
8) முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் (வரலாறு-1992)
9) இலக்கியச் சிமிழ் (கட்டுரைகள் - இருபதிப்புக்கள் - 1992, 1993)
10) தென்றலும் தெம்மாங்கும் (கவிதைகள்-1993)
11) பன்னிரு திருமுறை அறிமுகம் - இரு பதிப்புகள் (சமயம் - 1994, 2021)
12) மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் (ஆய்வு-1994)
13) இலக்கிய நாடகங்கள். (நாடகங்கள்,-1994, வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு, கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசு -1994)
14) ஆத்தி சூடி (விளக்கவுரை-1995)
15) கொன்றை வேந்தன் (விளக்கவுரை-1996)
16) அகளங்கன் கவிதைகள் (கவிதைகள்-1996, வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு - 1996)
17) வாக்குண்டாம் (மூதுரை - விளக்கவுரை-1997)
18) சிவபுராணம் (பொருளுரை-1997)
19) செந்தமிழும் நாப்பழக்கம் (பேச்சுக்கள்- மூன்று பதிப்புக்கள் 1997, 2015, 2017)
20) நாமறிந்த நாவலர் (சிறு குறிப்புக்கள்- இரு பதிப்புக்கள், 1997, 2008.)
21) நல்வழி (பொழிப்புரை -விளக்கவுரை-1998)
22) இசைப்பாமாலை (இசைப் பாடல்கள்-1998)
23) கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு (ஆய்வு-1999)
24) இலக்கியச் சரம் (கட்டுரைகள்- 2000)
25) வெற்றி வேற்கை (நறுந்தொகை - உரை இரு பதிப்புக்கள் 2000, 2015)
26) கூவாத குயில்கள் (நாடகங்கள்-2001)
27) திருவெம்பாவை உரை (சமயம் இரு பதிப்புக்கள் - 2002, 2018)
28) பாரதப் போரில் மீறல்கள் (கட்டுரை-2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29) சுட்டிக் குருவிகள் (மழலைப் பாடல்கள்-2003)
30) சின்னச் சிட்டுக்கள் (சிறுவர் பாடல்கள்-2005)
31) நறுந் தமிழ் (கட்டுரைகள்-2006)
32) பாரதியாரும் பாஞ்சாலி சபதமும் (ஆய்வு-2007)
33) பத்தினித் தெய்வம்(நாட்டிய நாடகங்கள்-2008-வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு 2008)
34) வேரும் விழுதும் (கட்டுரைகள்-2008, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு 2008)
35) கங்கையின் மைந்தன் (நாடகங்கள் - 2009, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றப் பரிசு, தமிழியல் விருது, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ், இலங்கை இலக்கியப்பேரவை விருது-.2009)
36) பந்து அடிப்போம் (சிறுவர் பாடல்கள்-2010)
37) சிரிக்க விடுங்கள் (சிறுவர் பாடல்கள்-2010)
38) சகல கலா வல்லிமாலை-(உரையுடன்-2011)
39) அலைக்குமிழ் (நாவல்-2011, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ். கொடகே தேசிய சாகித்திய சிறப்புச் சான்றிதழ். இலங்கை இலக்கியப் பேரவையின் சிறப்புச் சான்றிதழ். தமிழியல் விருது-2011)
40) சின்னஞ் சிறிய சிறகுகள். (குழந்தைப் பாடல்-2012, தேசிய சாகித்திய மண்டலப் பரிசு, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு, தமிழியல் விருது.-2012.)
41) கம்பனில் நான். (கட்டுரைகள். 2013.)
42) முற்றத்துக் கரடி (சிறுகதைகள் - 2014 - தமிழ்நாடு S.R.M. பல்கலைக்கழக தமிழ்ப் பேராய சர்வதேச விருது, தமிழ்நாடு, திருப்பூர், கவிஞர் சுகந்தி சுப்பிரமணியம் நினைவுப் பரிசு - 2014)
43) தமிழ்த் தூது. வண. பிதா. தனிநாயகம் அடிகளார். (சிறு குறிப்புக்கள் -2014)
44) வன்னிப் பிரதேச வயற் பண்பாடு.( ஆய்வு- 2014, வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசு, தமிழியல் விருது-2014, கொழும்புக் கம்பன் கழக நுழைபுலம் ஆய்வுவிருது - 2017)
45) ஞானப்பழம் (பாநாடகம் - 2017, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு)
46) ஆனைகட்டிய அரியாத்தை (நாடகம் -2017)
47) சிறுவர் சிந்தனைக் கதைகள் - 2017
48) சங்கமும் தமிழரும் (ஆய்வு - 2018, வவுனியூர் இரா உதயணன் இலங்கை இலண்டன் இலக்கிய நிறுவகப் பரிசு)
49) எங்கள் காடு (சிறுவர் நாடகம் - 2019, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ்)
50) அகளங்கன் இசை நடனப் பாடல்கள் - (பாடல்கள் - 2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புரை

**நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம் M.F.A**
(ஆசிரிய ஆலோசகர் நடனம், வவுனியா தெற்கு வலயம்.
தலைவர், நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி)

எமது நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் போஷகராக எமது கல்லூரியின் வெற்றிப் பயணத்திற்கு வழி காட்டிவரும் தமிழ்மணி அகளங்கன் ஐயா அவர்களுடனான எனது நடனப் பயணம் இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்துவிட்டது.

தமிழ் மொழித் திறன் போட்டிகளுக்காக எனது வேண்டுகோளுக் கிணங்க இவர் எழுதிய பல நாட்டிய நாடகங்களிற்கு நான் நடன அமைப்புச் செய்து தயாரித்திருக்கிறேன். அவற்றில் மூன்று நாட்டிய நாடகங்கள் தேசிய மட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளன. ஒரு நாட்டிய நாடகம் இரண்டாம் இடம் பெற்றுள்ளது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு 2007 ஆம் ஆண்டில் நடத்திய ஒருமணி நேர காவியக் கதா நாட்டிய நாடகப் போட்டியில் இவரது **பத்தினித் தெய்வம்** நாட்டிய நாடகம் முதலிடம் பெற்றதை மறக்க முடியாது. இது சிலப்பதிகாரத்தின் சுருக்கமான நாட்டிய நாடகமாக இருந்தது. இந்நாட்டிய நாடகம் பல அரங்குகளைக் கண்டு பலரதும் பாராட்டுக்களைப் பெற்றது.

இதே ஆண்டில் தமிழ் மொழித்திறன் போட்டிக்காக இவர் எழுதித் தந்த **கங்குலும் பகல்பட வந்தான்** என்ற நாட்டிய நாடகம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றது. இது கம்ப இராமாயணத்தில் வரும் அசோகவனக் காட்சியாக அமைந்தது. இந்த இரண்டு நாட்டிய நாடகங்களையும் வடிவமைத்து தயாரித்து நட்டுவாங்கம் செய்த பெருமையில் இன்றும் நான் மனமகிழ்வு கொள்கிறேன்.

"கங்குலும் பகல்பட வந்தான்" என்ற நாட்டிய நாடகத்தை **கற்பின் கனலி** என்ற பெயரில் பின்பு பல நிகழ்ச்சிகளில் மேடையேற்றினோம். அகளங்கன் ஐயா அவர்கள் பத்தினித் தெய்வம், கற்பின் கனலி ஆகிய இந்த இரண்டு நாட்டிய நாடகங்களையும் **பத்தினித் தெய்வம்** என்ற பெயரில் நூலாக்கி 2008 ஆம் ஆண்டில் வெளியிட்டார். அந்த நூல் வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசைப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டு நாட்டிய நாடகங்களிலும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவிகள் பங்குபற்றினர். அப்போது நானும் அகளங்கன் ஐயா அவர்களும் அப்பாடசாலையில் ஆசிரியப் பணி புரிந்துகொண்டிருந்தோம். அக்காலத்தில் வேறுபல நாட்டிய நாடகங்களையும் இவரிடம் பெற்று வேறு பல போட்டிகளில் பங்கு பற்றி தேசிய மட்ட முதலிடம் உட்பட பல வெற்றிகளைக் கண்டோம்.

எமது நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மூலம் இவரது பல நாட்டிய நாடகங்களுக்கும், நடனப் பாடல்களுக்கும் நாட்டிய வடிவம் கொடுத்து, தயாரித்து, நட்டுவாங்கம் செய்து மத்திய கலாசார அமைச்சு,தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் முதலானவை ஆண்டுதோறும் நடத்திய நாட்டிய நாடகப் போட்டிகள், நடனப் போட்டிகள் பலவற்றில் முதலாம் இடங்கள் உட்பட பல பரிசுகளைப் பெற்றோம்.

பிரதேச, மாவட்ட, மாகாண கலை இலக்கியப் பெரு விழாக்களிலும், வேறு விழாக்கள் பலவற்றிலும் இவரது நாட்டிய நாடகங்களையும், பாடல்களுக்கான நடனங்களையும் மேடையேற்றிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளோம். பல போட்டிகளில் பரிசுகளையும் பெற்றோம்.

கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக வவுனியா மாவட்டத்தில் பரத நாட்டியத்துறையில் நாம் சாதனை படைப்பதற்கும், பரத நாட்டிய வளர்ச்சியில் முன்னணிக் கல்லூரியாகப் பங்கு கொள்வதற்கும் எமது நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரிக்கு உறுதுணையாக இருப்பவர் அகளங்கன் ஐயா அவர்கள்.

என்னிடம் பரத நாட்டியம் பயின்ற மாணவர்களின் அரங்கேற்ற நிகழ்வுகளுக்கு அகளங்கன் ஐயா அவர்களே பெரும்பாலும் தலைமை வகித்து நிகழ்வுகளைச் சிறப்புற நடத்தி உதவியிருக்கிறார். இவரது நாட்டியப்பாடல்கள் பலவற்றுக்கு எமது மாணவர்கள் பலர் அரங்கேற்ற நிகழ்வுகளில் நடனம் ஆடியுள்ளனர். வேறு நிகழ்வுகளிலும் ஆடியுள்ளனர்.

நாம் நாட்டிய நாடகங்களையும், நாட்டியப் பாடல்களையும் கேட்டவுடன் எங் களின் தேவைக்குத் தகுந்தபடி உடனடியாக எழுதித் தந்து எம்மை உற்சாகப்படுத்தி வருபவர் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பாடல்களை நாட்டிய உலகில் பல்வேறு வகைப் பாடல்களாக வகைப்படுத்தலாம்.

1. பரத நாட்டியப் பாடல்கள் 2. கிராமிய நடனப் பாடல்கள்
3. நாட்டிய நாடகப் பாடல்கள் 4. தெய்வீகப் பாடல்கள் .

இவரது நாட்டியப் பாடல்களை நாம் கருத்து அடிப்படையில் ஆழ்ந்து நோக்கினால்

1. தத்துவப் பாடல்கள் 2. சிறுவர் அபிநயப் பாடல்கள்
3. பக்திப் பாடல்கள் 4. சிருங்கார ரசம் ததும்பும் பாடல்கள்
5. சமூக சிந்தனைப் பாடல்கள் 6. கிராமியப் பாடல்கள்
6. பண்பாடு, மொழி, நாடு, தொழில்,மகிழ்ச்சி, துயரம் சார்ந்த பாடல்கள்

எனப் பல வடிவங்களில் நமது கண்ணோட்டத்தைச் செலுத்தலாம். அகளங்கன் ஐயா அவர்கள் ஏராளமான நாட்டியப் பாடல்களை எழுதியுள்ளார். அவற்றில் சிலவற்றைத்தான் நாம் நாட்டிய வடிவத்தில் கொண்டுவந்துள்ளோம். இவரது நாட்டியப் பாடல்களில் உள்ள சிறப்பு அம்சங்களாக

1. கொடுக்கப்படும் தலைப்பிற்கேற்ப எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடியவகையில் எளிமையான சொற்களால் கூர்மையான கருத்துக் களை இலக்கிய நயம் பயக்கும் வகையில் பாடலாக்கித் தருதல்,
2. பாடல்களை எதோ ஒரு தாள நடைச் சந்தத்திற்குள் எழுதித் தரல்
3. சொல்லப்பட வேண்டிய கருத்துக்களை மனதில் ஆழமாகப் பதியக் கூடிய வகையில் கவித்துவத்தோடு சொல்லுதல்
4. எந்த உணர்வு பாடலில் வெளிப்படுத்தப்பட வேண்டுமோ அந்த உணர்வின் உச்சத்தைப் பாடலில் புனைந்து தரல்.

இக்காரணங்களால் இவரது நாட்டியப் பாடல்களுக்கு இசை அமைப்பதும் நாட்டிய அமைப்புச் செய்வதும் மிக எளிதானதாக இருக்கின்றது. ஒரு கலைஞனின் உள்ளக் கண்ணாடியை அபிநயம் மூலம் இலகுவாக வெளிப்படுத்தக் கூடியவகையில் இவரது பாடல்கள் அமைந்திருப்பது சிறப்பு அம்சமாகும்.

இவரது பாடல்களுக்கு நடன அமைப்புக்களைச் செய்யும் போது எம்மை யறியாமலேயே மெய் மறந்து செய்யக்கூடிய உணர்வு ஏற்படும். காலத்தின் பதிவு கருதி இவர் எழுதிய பாடல்களில் உள்ள உணர்வுகள் சிலவேளைகளில் நாட்டிய ஆக்கங்களில் உச்சத்தன்மைக்குக் கொண்டு சென்று விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமி எனப்படும் ஆழிப்பேரலையின் அவலம் சார்ந்த பாடல்கள், அகதிகளாகிப் படும் அவலம் நாட்டிய நாடகப் பாடல்கள், சமாதானம் நாட்டிய நாடகப் பாடல்கள், சிரிக்க விடுங்கள் சிறுவர் பாடல் முதலான பல பாடல்களை உதாரணங்களாகச் சொல்லலாம்.

இவற்றுக்கு நாட்டிய வடிவம் கொடுக்கும் போது நாட்டியம் உயிர்த்துடிப்பாக அமைந்தது.. பாடல், இசை, பின்னணி இசை, ஆடல் அனைத்தும் ரசிகர்களை சபையிலே கட்டிப் போட்டுவிட்டன.

பக்திப் பாடல்களில் கீர்த்தனை வடிவமான பாடல்கள் பலவற்றை இவர் ஆக்கியுள்ளார். இவற்றிலே இந்த உலகத்தையே வியக்க வைத்த பாடல் சிவதாண்டவப் பாடல்,

"தாண்டவம் தாண்டவம் சிவ தாண்டவம் ஆடினார்.....

எனத் தொடங்கும் இப்பாடலில் சிவபெருமானது ஐந்தொழில்களையும் தத்ரூபமாகவும், சிவபெருமானது அழகுக் கோலத்தையும் சித்திரித்து அழகாக வெளிப்படுத்தியிருந்தார்.

நவ ரஸங்களில் வீர ரஸம், ரௌத்ர ரஸம், மேலோங்க உணர்ச்சி வேகமாகக் காணப்பட்ட இந்தக் கீர்த்தனை வடிவம் நாட்டிய அமைப்பு, இசையமைப்பு என்பவற்றில் சிகரத்தைத் தொட்டது எனலாம்.

திக்குக் குலுங்கிட திசைகள் நடுங்கிட
அக்கினி நாயகன் ஆடிடும் தாண்டவம்

என வரும் பாடல் வரிகளும், சிவபெருமானின் அழகுக் கோலத்தைச் சொல்லும்

கங்கை சடை முடி, திங்களும் ஆட
கணங்களும் ஆட
கனக சபை தனிலே

என வரும் பாடல் வரிகளும் ஆடலும் சிறப்பாக அமைந்து யாவரையும் பரவசத்தில் ஆழ்த்தின. உண்மையில் சிவ தாண்டவத்தை தத்ரூபமாக வெளிக்காட்டிய நிகழ்வாக இந்நடன நிகழ்வு அமைந்தது.

இப்பாடலின் இசையும் நாட்டியமும் யாவரையும் பெரு வியப்பில் ஆழ்த்தின. இப்பாடலுக்கு நாட்டிய வடிவம் கொடுத்து நட்டுவாங்கம் செய்தது எனக்குப் பெரும் திருப்தியையும் பெரும் மகிழ்வையும் கொடுத்தது. இசையமைத்துப் பாடிய இசைமைந்தன் சிவமைந்தன் அவர்களுக்கும் எனது நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகவி பாரதியாரின் சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா... "போல அமைந்து அதைவிடவும் உச்சத்தைத் தொட்ட பாடல் வாத்சல்ய பாவம் மேலோங்க தாய் பிள்ளை உறவை நெஞ்சத்தை நெகிழ வைக்கும் படி அகளங்கன் ஐயா அவர்கள் எழுதிய சின்னச் சின்னச் சிமிழே பாடல்

சின்னச் சின்னச் சிமிழே வண்ண வண்ணக் கனவே
செந்த மிழே என்னுயிரே வா வா வா...

எனத் தொடரும் இப்பாடலின் கவிநயம் மிகச் சிறப்பாக உள்ளது. இப்பாடலில் வரும்

எந்தப் பூவும் உன்னைப் போலச் சிரித்த தில்லையே
எந்த மயிலும் உன்னைப் போல சிலிர்த்த தில்லையே
எந்தக் குழலும் உன்னைப் போல ஒலித்த தில்லையே – நீ
எந்தக் குறும்பு செய்தாலும் மனம் சலித்த தில்லையே

என்ற சரணப் பகுதிக்கு அபிநயம் செய்யும் போது மிக மிக அற்புதமாக இருந்தது, இதில் வரும் சொற் பிரயோகங்கள் மிக மிக எளிய நடையில் சந்தத்தோடு அமைந்துள்ளன..

இவ்வாறாக அகளங்கன் ஐயா அவர்களின் நாட்டியப் பாடல்கள் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். "என்னையும் சேர்த்துக் கொள்வாரா....", "அன்றொரு நாளிலே தோழி....", "எண்ணி எண்ணி ஏங்குகிறேன் எழில் வேலா" முதலான இவரது பல பாடல்களுக்கு எனது மாணவிகள் தமது நாட்டிய அரங்கேற்றங்களில் ஆடியிருக்கிறார்கள்.

இலக்கிய வளம், சொல் வளம் , பொருள் வளம், கவிவளம், இசை வளம், ஆடல் வளம் என்பவற்றில் சற்றும் குறைவில்லாததாக இவரது நாட்டியப் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

அகளங்கன் ஐயா அவர்களின் பணி பாடலை எழுதித் தருவதோடு மட்டும் முடிந்து விடுவதில்லை. பாடலை சொற்பிழை இல்லாமல் சரியான உச்சரிப்போடு பாடச் செய்வார். பாடலின் நாட்டிய ஆக்கத்தைப் பார்த்து திருத்தங்களைச் சொல்வதோடு சிறப்புக்களைப் பாராட்டவும் செய்வார். இவரது பாடல்கள் நாட்டிய உலகில் சாதனை படைத்தவை என்றே சொல்லலாம்.

எழுதவேண்டியவை நிறையவே இருக்கின்றன. வார்த்தைகள்தான் குறைவாக இருக்கின்றன. கவிஞர் அகளங்கன் ஐயா அவர்களின் பாடல்கள் நாட்டிய உலகில் என்றும் நிலைத்திருக்கும். நிலையான கலை இன்பத்தைத் தந்துகொண்டேயிருக்கும்.

வாழ்க தமிழ். வளர்க கலை.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவப் பகிர்வு

"சிதம்பரம் இசைமைந்தன்"
**நயினை பத்மநாதன் சிவமைந்தன்.**
**M.A,M.Phil(Music)**
(இசைத்துறை விரிவுரையாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)

### கருத்துச் செறிவுள்ள கற்பனை வளங் கொண்ட கவித்துவம் மிக்க பாடல்கள்

1995 இல் இடம் பெற்ற யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்குச் சென்றோம். பின் 1996 நடுப் பகுதியில் வவுனியா நகருக்குள் சென்றோம்.

அன்றைய போர்க்காலச் சூழலில் வவுனியா நகர் ஏராளமான மக்களைத் தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டது. வதிவிட அனுமதி பெற்றே வெளி மாவட்டத்தினர் உள் நுழையவோ வசிக்கவோ முடியும் என்ற நிலை. அவ்வாறான நெருக்கடியும் இராணுவக் கெடுபிடியும், நிறைந்த சூழலாக வவுனியாச் சூழல் அமைந்திருந்தது.

எமது கல்வி, கலைச் செயற்பாடுகளில் அதிக அக்கறை கொண்ட எமது தந்தையாரின் துணிச்சலான முடிவால் வவுனியாவில் தங்கிவிட்டோம்.

நான் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது திரு.பொன் சுந்தரலிங்கம் ஆசிரியர் அவர்களின் மாணவனாக இளங்கலைஞர் மன்றத்தில் எனது கலைச் செயற்பாட்டைத் தொடங்கியிருந்தேன்.

வவுனியாவில், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா இந்துமாமன்றம், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் என்பவை இசை மற்றும் கலைத்துறைகளில் மாணவர்களுக்கு அரிய சேவைகளை ஆற்றிக் கொண்டிருந்தன.

வவுனியா இந்து மாமன்றம் ஆன்மீகப் பௌர்ணமி விழாக்களை மாதம் தோறும் நடத்திவந்தது. அமரர் சிவநெறிப் புரவலர் சி.ஏ. இராமஸ்வாமி ஐயா அவர்களின் தலைமையில் இந்துமாமன்றம் சிறப்பாக இயங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த காலம் அது. அந்த நிகழ்வுகள் யாவற்றிலும் பாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

எனது சகோதரி தர்மினி பத்மநாதன் மூலம் எனக்கு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் அறிமுகம் கிடைத்தது. இந்த அமைப்பின் முக்கியஸ்தர்களான கலாநிதி தமிழ்மணி அகளங்கன், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், கலாநிதி ந. இரவீந்திரன் ஆகியோரைச் சந்தித்துப் பழக முடிந்தது.

அன்று எனக்கு வழிகாட்டியாக இருந்தவர் அகளங்கன் ஐயா அவர்கள். இவர் அந்த மண்ணிலிருந்து ஓயாது உழைத்துவரும் இலக்கிய, சமய, சமுதாயப் போராளியாக விளங்கினார்.

தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாகத் திகழும் இவர் தமிழ்மொழிமீது மிகுந்த பற்றுக் கொண்டவர். கலை இலக்கியச் செயற்பாடுகள், சொற்பொழிவுகள், ஆன்மீக ஈடுபாடுகள், சமூகச் செயற்பாடுகள் என பல வகைகளிலும் இன்றும் ஓயாது செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு பெருந்தகையாகவே நான் இவரைப் பார்க்கிறேன்.

மாணவர்களைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தவும், தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத்தி வழிப்படுத்தவும் எப்போதும் முன் நிற்பார். எதனையும் வெளிப்படையாகச் சொல்லி மாற்றங்களுக்குட்படுத்தக்கூடிய ஆளுமையும் மிக்கவர்.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் என்றால் அது தமிழ்மணி அகளங்கன் என்றே சொல்லத்தக்க வகையில் இன்றும் தலைமைதாங்கி நடத்திக் கொண்டுவருகிறார். வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஊடாக பல கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், பல்துறைப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமையும் இவரைச் சாரும் என்றால் அது மிகையில்லை.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் மாதந்தோறும் நடத்திய பல பௌர்ணமிக் கருத்தரங்குகளில் கலந்துகொண்டுள்ளேன். எனது இசை அரங்கேற்றமும் அங்குதான் நிகழ்ந்தது. தமிழ் மணி அகளங்கன் ஐயா அவர்கள் எமது குடும்பத்தினர் யாவராலும் மதிக்கப்படுகின்ற ஒருவராகவே இன்றுவரை திகழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பாடல்கள் பலவற்றை நான் சிறுவனாக இருந்தபோதே பாடியுள்ளேன். இப்பொழுது திருமதி சூரிய யாழினி வீரசிங்கம் அவர்களின் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் நடன அரங்கேற்றங்களின்போது அகளங்கன் ஐயா அவர்களின் பாடல்களுக்கு இசையமைத்துப் பாடிவருகின்றேன்.

குறிப்பாக இவரது "தாண்டவம்" எனத் தொடங்கும் பாடல் அற்புதமானது. "சின்னச் சின்னச் சிமிழே", "என்னையும் சேர்த்துக் கொள்வாரா" முதலான இவரது சிறந்த பாடல்களுக்கு இசையமைத்துப் பாடிப் பெரும் வரவேற்பைப் பெற்றேன்.

இவரது பாடல்கள் மிகவும் எளிமையானவை. இரசனை மிக்கவை. கருத்துச் செறிவுள்ளவை. கற்பனை வளம் கொண்டவை. கவித்துவம் மிக்கவை. தட்டுத் தடங்கலில்லாத ஓசை நயம் பொருந்தியவை. இசையமைக்க இலகுவானவை. இசையமைத்துப் பாடும்போது சிறார்கள் முதல் பெரியோர்கள் வரை மிக உணர்வு பூர்வமாக உள்வாங்கிக் கொள்ளக் கூடியவை.

பல அரங்கேற்ற நிகழ்வுகளில் எனது இசையமைப்பில் நான் பாடிய அகளங்கன் ஐயா அவர்களின் பாடல்களும், திருமதி சூரிய யாழினி வீரசிங்கம் அவர்களின் நடன அமைப்போடு, கூடிய நடனங்களும் மிக மிகச் சிறப்பாக அமைந்து பலரதும் பாராட்டுக்களைப் பெற்றன.

எனது தந்தையார் (அமரர் பத்மநாதன்) அகளங்கன் ஐயா அவர்களை மிகவும் நேசித்த ஒருவர். அகளங்கன் ஐயாவின் பாடல்களைப் பாடிப் பார் என்று நான் சிறுவனாக இருந்த காலத்திலேயே அவர் எனக்குச் சொல்லுவார். இப்போதுதான் அது பெருமளவுக்குக் கைகூடி வருகிறது.

நான் படித்த பாடசாலையைவிட வவுனியா இந்து மாமன்றமும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமுமே நான் எனது திறமையை வளர்க்கவும் வெளிப்படுத்தவும் அதிக வாய்ப்புக்களை வழங்கின என்று சொல்லலாம்.

எனது சகோதரி சாந்தினி பத்மநாதன்(வாய்ப் பாட்டு), சகோதரன் பத்ம நாதன் ரங்கநாதன்(மிருதங்கம்), ஆகியோரின் கர்நாடக சங்கீத, மிருதங்க அரங்கேற்றங்கள் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்திலேதான் நிகழ்ந்தன. இவற்றுக்கெல்லாம் தமிழ் மணி அகளங்கன் ஐயா அவர்களே தலைமை வகித்து நடத்தி முடித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தமிழ் நாடு சென்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துவிட்டுத் திரும்பிய சமயம். அப்போது வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் தலைவராக மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராசா அவர்கள் பணியாற்றினார்.

அப்போது வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மூலம் கந்தசஸ்டிகால திருப்புகழ் இசைவிழா ஒன்றை அகளங்கன் ஐயா அவர்கள் ஏற்பாடுசெய்து என்னைப் பாடவைத்து என்னைப் பலருக்கும் அறிமுகம் செய்து பெருமைப்படுத்தினார்.

அமரர் கலாபூஷணம் - திருமதி தேவிமனோகரி நாகேஸ்பரன் அவர்களது நினைவாக வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும், வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திவருகின்ற மார்கழி இசைவிழா நிகழ்வுகளில் முதல் நிகழ்வில் எனக்குப் பாட வாய்ப்பளித்து ஊக்குவித்திருக்கிறார்.

அகளங்கன் ஐயா அவர்களின் இந்த இசை நடனப் பாடல்களின் தொகுப்பு மிகச் சிறந்ததொரு பாடற் தொகுப்பாக வெளிவருகின்றது. இது இசை நடன உலகுக்கும் தமிழ்ப் பாடல் உலகுக்கும் அரும் பொக்கிசமாகத் திகழப் போகிறது என்பதில் ஐயமில்லை.

ஐயா அவர்களின் பணியை வாழ்த்துகிறேன். புலமையைப் பாராட்டுகிறேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

எனது ஐம்பதாவது நூலாகவும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் நாற்பத்தி நாலாவது நூலாகவும் எனது "அகளங்கன் இசை நடனப் பாடல்கள்" நூல் வெளிவருவது மகிழ்ச்சியளிக்கிறது.

எனது நூல் வெளியீட்டுப் பணிகளுக்கு ஆதரவு தந்த அனைத்துப் பெரியோர்களுக்கும் நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது "இசைப் பாமாலை" நூலில் எனது நாற்பது இசை நடனப் பாடல்களும் "அகளங்கன் கவிதைகள்" என்ற எனது கவிதைத் தொகுப்பு நூலில் பதின் மூன்று இசை நடனப் பாடல்களும் வெளிவந்துள்ளன.

"சுட்டிக் குருவிகள்", "சின்னச் சிட்டுக்கள்", "சிரிக்கவிடுங்கள்", "பந்து அடிப்போம்", "சின்னஞ் சிறிய சிறகுகள்" ஆகிய எனது ஐந்து நூல்கள், மழலைப் பாடல், சிறுவர் பாடல் நூல்களாக வெளிவந்துள்ளன. அவற்றில் வெளிவந்த இசை நடனப் பாடல்களைத் தவிர்த்து இந்நூலை ஆக்கியுள்ளேன்.

சில பாடல்களின் கீழ் இசையமைத்தவர், நடன அமைப்புச் செய்தவர், பாடியவர் பற்றிய விபரங்களைப் பதிவு செய்துள்ளேன். முழுமையாகப் பதிவு செய்ய முடியாமைக்கு மனம் வருந்துகிறேன்.

### இசைப் பயணம்

எனது இசைப்பாடல் எழுதும் பயணம் 1977 இல் ஆரம்பமானது. நான் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக (அப்போது வளாகம்) மாணவனாக இருந்த காலத்தில் தமிழ் மன்றத்தின் தலைவராக இருந்தேன். அப்போது நான் எழுதிய தமிழ் மன்றக் கீதம்தான் எனது முதலாவது பாடல். இப்பாடலுக்கு அப்போது அங்கு எனக்கு அடுத்த இளைய தொகுதி மாணவியாக இருந்த செல்வி சு.இராஜலக்சுமி இசையமைத்தார். அவருக்கு என் நன்றி.

அக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப்பீட மாணவனாக இருந்த திரு.உமாகாந்தன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சில பாடல்களை எழுதினேன். அவர் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களுக்கு இசையமைத்தார். அப்போது பேராதனைப் பல்கலைக் கழகக் குறிஞ்சிக் குமரன் பற்றி எழுதித் தரும்படி கேட்டு என்னிடம் பாடல்களைப் பெற்று அங்கே ஒரு நிகழ்வில் அரங்கேற்றினார்.

அப்பாடல்களை அவரது சக மாணவனாக இருந்த திரு மாணிக்கராஜா அவர்கள் அங்கு பாடி பலரதும் பாராட்டுக்களைப் பெற்றார். தொடர்ந்து எனது பாடல்கள் சிலவற்றை இசையமைத்து தனது கச்சேரிகளில் பயன்படுத்தினார். அவர்களுக்கு எனது நன்றி.

1978 பிற் பகுதியில் நான் எழுதிய கிராமியப் பாடலான "சேற்று வயற் காட்டினிலே நாற்றுநட வந்த பெண்ணே" என்ற பாடல் இலங்கை வானொலியின் மெல்லிசைப் பாடலுக்காக எழுதப்பட்டது.

பேராசிரியர் நா.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் இந்தப் பாடலை அவரது நண்பரான அப்போது இலங்கை வானொலியில் பணியாற்றிக் கொண்டிருந்த திரு.அருணா செல்லத்துரை அவர்களுக்கு அனுப்பி வைத்தார்.

தமிழ்த் திரைப்பட பிரபல இசையமைப்பாளர் திரு.T.K. ராம மூர்த்தி அவர்களின் இசையமைப்பில் அப்பாடல் 1979இல் வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்று எனக்கு அங்கீகாரத்தையும் பிரபலத்தையும் புகழையும் கொடுத்தது. இப்பாடல் க.பொ.த. உயர்தரத்திற்கான சங்கீத பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு இன்று மாணவர்களால் பாடப்பட்டு வருகிறது.

இப்பாடலை திரு.T.கிருஷ்ணன் அவர்களின் ஆரம்ப ஒலியோடு திரு.S.பத்மலிங்கம், திருமதி.ஜெகதேவி விக்னேஸ்வரன் ஆகியோர் அருமையாகப் பாடினர். இவர்கள் யாவருக்கும் எனது நன்றி..

தொடர்ந்து பல மெல்லிசைப் பாடல்களை இலங்கை வானொலி ஒலிபரப்பியது. T.V.பிச்சையப்பா, M.முத்துசாமி முதலானோரின் இசை யமைப்பில் சுஜாத்தா அத்தநாயக்கா, ஸ்ரனி சிவானந்தன் முதலானோர் பாடினர். அவர்களுக்கும் எனது நன்றி.

1982 இல் வவுனியாவில் பிரமாண்டமாக நடைபெற்ற பண்டார வன்னியன் விழாவில் எனது பண்டார வன்னியன் பற்றிய சில பாடல்களை தமிழகத்திலிருந்து வந்திருந்த பாடகி குமாரி பிறேமிளா அவர்கள் இசையமைத்துப் பாடினார்கள். அவர்களுக்கும் நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் எனது பாடல்களை முதன் முதல் இசையமைத்துப் பாடியவர்கள் கலாபூஷணம் திரு.கந்தையா கனகேஸ்வரன், கலாபூஷணம் திருமதி. விமலலோஜினி கனகேஸ்வரன் தம்பதிகள். இவர்களது மகள் துகாரதி அவர்கள் தமிழ்த்தினப் போட்டிகளில் எனது பாடல்களைப் பாடியிருக்கிறார். அவர்களுக்கும் நன்றி.

எனது பாடல்களுக்கு இசையமைத்தவர்களில் அமரர் கலாபூஷணம் தேவிமனோகரி நாகேஸ்பரன் அவர்கள் மிக முக்கியமானவர். இவர் எனது பல நாட்டிய நாடகப் பாடல்களுக்கும். நடனப் பாடல்களுக்கும். மெல்லிசைப் பாடல்களுக்கும், கீதங்களுக்கும் இசையமைத்துள்ளார். பல பாடல்களைப் பாடியுமுள்ளார்.

கலாசூரி. திருமதி அருந்ததி ஶ்ரீரங்கநாதன், கலாபூஷணம் திருமதி.வதனி ஶ்ரீதரன், திரு.சோ.ஜெயச்சந்திரா, திருமதி வேல்விழி சூரியகுமாரன், திரு.ஜே.ஜஸ்டின். திரு.கந்தப்பு ஜெயந்தன், கலாநிதி திருமதி அருந்ததி இரவீந்திரன், சிதம்பரம் இசைமைந்தன் நயினை. பத்மநாதன் சிவமைந்தன், திரு.சிவநாதன் பிரதீபன். திரு.எஸ்.சிந்துஜன், திரு.பா.கேதீஸ்வரன்.

இசைக் கலைமணி திருமதி லலிதகுமாரி சிவபாலன், திரு.அகிலன் சிவானந்தன் (அவுஸ்ரேலியா), திரு.எல்.ஷிவனேஷ் (தமிழ் நாடு), முதலான பலர் எனது பாடல்களுக்கு இசை வடிவம் கொடுத்து காற்றிலும் ரசிகர்களின் உள்ளங்களிலும் கலந்திருக்கின்றனர். இவர்களுக்கும் எனது பாடல்களைப் பாடியோருக்கும் பக்கவாத்தியக் கலைஞர்களுக்கும் எனது நன்றி.

வன்னி ஓடை, வன்னி அருவி, வன்னி ஊற்று, TRAIN, சிறகுகள், இதயத்தின் ஓசை, வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய நூற்றாண்டு விழா நினைவு வெளியீடான எங்கள் பள்ளிக்கு நூற்றாண்டு, குணகரவை கழாங்கேணி வன்னியப் பிள்ளையார் பக்திப் பாமாலை, பிரிஷ்பேர்ன் ஶ்ரீ செல்வ விநாயகர் கோவில் தெய்வீக இசைப் பாமாலை, முதலான பெயர்களில் வெளிவந்த ஒலி நாடாக்கள், இறுவட்டுக்களில் எனது பாடல்கள் வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்மார்க் பிரண்டா ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தினரால் வெளியிடப்பட்ட "டென்மார்க் பிரண்டா ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மன் பாடல்கள்" என்ற பெயரில் தமிழ் நாடு இசையமைப்பாளர் திரு. எல்.ஷிவனேஷ் அவர்களால் இசையமைக்கப்பட்டு திரு.புஸ்பவனம் குப்புசாமி, திரு.வீரமணி ராஜு முதலான தமிழ்நாட்டுப் பாடகர்கள் பாடிய பன்னிரண்டு பாடல்கள் கொண்ட தனி இறுவட்டும்,

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் என்னோடு சக ஆசிரியர்களாக இருந்த கலாபூஷணம் திருமதி தேவி மனோகரி நாகேஸ்பரன் அவர்களால் இசையமைக்கப்பட்டு, ஆசிரியை கஜரதி பாண்டித்துரை அவர்களால் உருவாக்கப்பட்டு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தினால் வெளியிடப்பட்ட அப்பாடசாலை மாணவர்கள் பாடிய சிறுவர் பாடல்கள் இறுவட்டும் முழுதாக எனது பாடல்களைக் கொண்ட இறுவட்டுக்களாக வெளிவந்துள்ளன.

இவற்றுக்குக் காரணமாக இருந்த அனைவருக்கும் மற்றும் எனது இசைப் பாடல்களை வெளியிட்ட சஞ்சிகைகள் மலர்கள் பத்திரிகைகளுக்கும் எனது நன்றி.

எனது வித்தியா விநாயகர் பாடலை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய காலைப் பிரார்த்தனை வேளையில் பாட ஏற்பாடு செய்த முன்னாள் அதிபர் அமரர் சி.உலகநாதன் அவர்களுக்கும் தொடர்ந்து பாட அனுமதித்துவரும் அதிபர்களுக்கும் எனது நன்றி.

அகில இலங்கை தமிழ்மொழித் தின திறனாய்வு, பாவோதல் போட்டிகளுக்கு எனது கவிதைகளையும், பாடல்களையும் பயன்படுத்திய தமிழ்த்தினப் போட்டிக் குழுவினர்களுக்கு எனது நன்றி.

**நடனம்**

1992 இலிருந்து நடனப் பாடல்களை எழுதி வருகிறேன். எனது நம்பியாரூரர் நாட்டிய நாடகத்தைத் தயாரித்த கலாபூஷணம் திருமதி துவாரகா கேதீஸ்வரன் அவர்களே எனது பாடல்களுக்கு நடன வடிவத்தை முதன் முதல் கொடுத்தவர். அவருக்கு எனது நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிருத்திய வாணி" திருமதி சூரியயாழினி வீரசிங்கம் அவர்கள் எனது பல நாட்டிய நாடகங்களைத் தயாரித்தார். பல பாடல்களுக்கு நடன வடிவம் கொடுத்தார். எனது நடனப் பாடல் பயணத்தில் இவரின் பங்கு அளப்பரியது. இவருக்கு நன்றி.

செல்வி.சண்முகப்பிரியா குலேந்திரன், திருமதி.கிருபாகரி யோகராஜா, திருமதி துஷ்யந்தி வேலுப்பிள்ளை, அமரர் திருமதி.விஜயலக்சுமி ஜேக்கப், திருமதி கருணரூபினி குணநிதி, கலாநிதி நா.செந்தூரச்செல்வன் முதலான பலர் எனது பாடல்களுக்கு நடன வடிவம் கொடுத்துள்ளனர். அவர்களுக்கும் நன்றி.

எனது எழுத்துருவாகிய நாட்டிய நாடகங்களில் நடனம் ஆடியோர், பாடல்களுக்கு நடனம் ஆடியோர், அணிசேர் கலைஞர்கள், அரங்கேற்றங்களில் ஆடியோர் அனைவருக்கும் நன்றி. எனது நாட்டிய நாடகங்களைத் தயாரித்த பாடசாலைகளுக்கும் நன்றி.

**நன்றி**

எனது நூல்களை வெளியிட்ட அகில இலங்கை கம்பன் கழகம், யாழ் ஸ்ரீ லங்கா புத்தகசாலை, வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம், வவுனியா இந்துமாமன்றம், மட்டக்களப்பு உதயம் வெளியீட்டகம், சவுத் ஏசியன் புக்ஸ் (தமிழ்நாடு), எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், யாழ் இலக்கிய வட்டம், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், சேமமடு பொத்தகசாலை பத்மம் பதிப்பகம், குமரன் புத்தகசாலை இலக்கியன் வெளியீட்டகம், ஆகியவற்றுக்கு எனது நன்றி.

எனது நூல் வெளியீடுகளுடன் தொடர்புற்ற கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ், புலவர் ஈழத்துச் சிவானந்தன், வவுனியா முத்தமிழ்க் கலாமன்ற தலைவர். கலாநிதி ச.அருளானந்தம் (கேணிப் பித்தன்) செயலாளர் கலாபூஷணம் பொ.மாணிக்கவாசகம், வவுனியா இந்துமாமன்ற தலைவர் அமரர் சி.ஏ.இராமஸ்வாமி, செயலாளர் இறைபணிச் செம்மல் வை.செ.தேவராசா, திரு.சிவதாசன், தேசிய கலை இலக்கியப் பேரவை உறுப்பினரும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட அமைப்பாளர்களில் ஒருவருமாகிய கலாநிதி ந.இரவீந்திரன், திரு.பாலாஜி (தமிழ்நாடு) யாழ் இலக்கிய வட்டத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் செங்கை ஆழியான், செயலாளர் திரு.நயினை கி.கிருபானந்தா, திரு.சத.பூ.பத்மசீலன், திரு.க.குமரன். ஆகியோருக்கு நன்றி.

எனது கலை இலக்கியப் பயணத்திற்கு உற்சாக மூட்டிய சிரித்திரன் ஆசிரியர்.அமரர் சி.சிவஞான சுந்தரம் (சுந்தர்) பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, கலாகீர்த்தி உடுவை சி.தில்லை நடராஜா, கவிஞர் சு.முரளிதரன், காப்பியக் கோ டாக்டர் ஜின்னா ஷரிபுதீன், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் முன்னாள் கௌரவ தலைவரும் எனது மூத்த சகோதரருமாகிய மக்கள்சேவை மாமணி நா.சேனாதிராசா, வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் சு.வீரசிங்கம், வவுனியா ஸ்ரீகந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபையின் முன்னாள் கௌரவ செயலாளர் அமரர் க.ந.பாலச்சந்திரன், அருட்கலை வாரிதி ஸ்தபதி சு.சண்முகவடிவேல், கலாபூஷணம் க.ஐயம்பிள்ளை, கலாபூஷணம் திருமதி.புவனநாயகி ஐயம்பிள்ளை

மற்றும் எனது சகோதரர்கள் திரு.வில்வராசா, திரு.நடராசா, அமரர் யோகராசா ஆகியோருக்கும், சகோதரிகள் திருமதி கமலாவதி சுரேந்திரநாதன், திருமதி புனிதவதி சிவதாசன் ஆகியோருக்கும் நன்றி.

எனது ஆக்கங்களை பாடத்திட்டத்தில் சேர்த்து உற்சாகப்படுத்திய வ/ தெற்கு வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி.க.நிறைமதி, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு.சிவப்பிரகாசம் ரூபன்ஆகியோருக்கும், பாடத்திட்டக் குழுவினருக்கும் நன்றி.

எனது இந்த நூலாக்கச் செலவினைத் தந்துதவிய பிரபல எழுத்தாளர் வவுனியூர் இரா. உதயணன் (லண்டன்) அவர்களுக்கு மிகுந்த நன்றி. இவர் எனது "முற்றத்துக் கரடி" சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டுச் செலவு முழுவதையும் தானே பொறுப்பேற்று அந்நூல் வெளிவரக் காரணமாக இருந்தவர். என்பதை மீண்டும் நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

நான் க.பொ.த. உயர்தரக் கல்வியை யாழ்பாணம் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கற்ற காலத்தில் என்னோடு ஒன்றாகப் படித்த எனது நண்பர்கள் திரு.செல்வசுந்தரம் இரவிச்செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நியூசிலாந்து), திரு.ஐயாத்துரை குலவீரசிங்கம் (லண்டன்), திரு. செல்வரத்தினம் மகேஸ்வரன் (அவுஸ்ரேலியா), திரு.ஜெரால்ட் ஜெயராஜ் (லண்டன்), திரு.த.ஆனந்தபாஸ்கரன் (நியூசிலாந்து), ஆகியோரும் ஏனைய நண்பர்களும் எனது நூலாக்கங்களுக்கு உதவ முன்வந்துள்ளனர். அவர்களுக்கும் எனது நன்றி.

இந் நூலாக்கத்தில் எழுத்துப் பிழைகளைத் திருத்தி உதவிய எனது மூத்த சகோதரர் திரு. நா. தியாகராஜா அவர்களுக்கும் அனுபவப் பகிர்வு உரை வழங்கிய "சிதம்பரம் இசைமைந்தன் நயினை பத்மநாதன் சிவமைந்தன் அவர்களுக்கும் நன்றி.

இந் நூலாக்கத்திற்கு வேண்டிய பல தகவல்களைத் தந்து நல்லதொரு சிறப்புரையையும் தந்த "நிருத்தியவாணி" திருமதி சூரியயாழினி வீரசிங்கம் அவர்களுக்கும் நன்றி.

எனது இசைப் பாடற் பயணத்தில் பங்கு கொண்டு உற்சாகப் படுத்தியவரும் இந் நூலை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட வெளியீடாகக் கொண்டுவர உறுதுணையாக இருந்ததோடு வெளியீட்டுரையையும் பின் பக்கக் குறிப்புரையையும் தந்துதவிய வட்டத்தின் செயலாளரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில மொழித்துறை மூத்த விரிவுரையாளருமாகிய கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் அவர்களுக்கும் நன்றி.

எனது பல நூல்களை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் மூலம் வெளியிட்டவரும் நான் எழுத்துத் துறையில் சோர்வுறும் பொழுதெல்லாம் என்னை உற்சாகப்படுத்தி வருபவரும் எனது எழுத்தாள நண்பருமாகிய டாக்டர் ஓ.கே.குணநாதன் அவர்களுக்கு நன்றி.

எனது பல்கலைக் கழக நண்பரும் இன்றுவரை என் அருகில் வாழ்ந்துகொண்டு எனக்கு ஆலோசனை வழங்கிவருபவருமாகிய திரு.செ.சண்முகநாதன் அவர்களுக்கும் நன்றி.

எனது நூலாக்கப் பணிக்கு உறுதுணையாக இருக்கும் எனது மகன் அநபாயன், மகள் திருமதி அநிந்திதை கேசவராஜன், மருமகள் திருமதி.நித்தியா அநபாயன், மருமகன் திரு.தி.கேசவராஜன் ஆகியோருக்கும் என் நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஆக்கங்கள் யாவும் வெளிவர மூலகாரணமாக இருந்து உற்சாகப்படுத்தி உதவிவரும் எனது தம்பி திரு.க.குமாரகுலசிங்கம் (கந்தையா சிங்கம்) அவர்களுக்கும் என் நன்றி.

எனது முதல் ரசிகையாகவும் முதல் திறனாய்வாளராகவும் இருப்பதோடு இந்நூலாக்கத்தின் சகல வேலைகளிலும் ஒத்துழைத்த எனது துணைவிக்கும் எனது நன்றி.

தாய்ப்பாலோடு தமிழ்ப்பாலையும் எனக்கு ஊட்டிய என் தாய் நல்லம்மா அவர்களையும், எனக்குத் தமிழறிவோடு கவிதை இரசனையையும் ஏற்படுத்திய என் தந்தை சேனாதிராசா நாகலிங்கம் அவர்களையும் இதயத்தில் வைத்துப் பூசிக்கிறேன்.

தெய்வங்களாகிவிட்ட அவர்களின் நல்லருளுடனும், நல்லாசிகளுடனும் இந்நூலை உங்கள் கைகளில் தவழவிடுகிறேன்.

முத்தமிழாகவும் அமைந்த இந்நூல் தமிழ்த்தாய்க்குச் சிறு கண்ணாடி வளையலாகவாவது அமையுமாக இருந்தால் மகிழ்ச்சி. இந் நூலைப் பயன்படுத்துவது உங்கள் பொறுப்பு.

எதிர்காலத்தில் இந்நூலிலுள்ள பாடல்களுக்கு இசையமைக்கப் போகிறவர்களுக்கும், பாடப் போகிறவர்களுக்கும், நடன அமைப்புச் செய்யப் போகிறவர்களுக்கும், ஆடப் போகிறவர்களுக்கும், ஆய்வு செய்யப் போகிறவர்களுக்கும், அங்கீகரிக்கப் போகிறவர்களுக்கும், இரசிக்கப் போகிறவர்களுக்கும், எனது இதயபூர்வமான நன்றி.

இந்நூலை அழகாக அச்சிட்டுத் தந்த வாணி கணினிப் பதிப்பகத்தாருக்கும், நூல் வடிவமைப்பு அட்டைப்பட வடிவமைப்பு ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்து தந்த செல்வி. ஜெ.திவ்யா அவர்களுக்கும் எனது நன்றி.

உங்கள் ஆதரவில் எனது கலைப் பயணம் தொடரும்.

அன்புடன்
அகளங்கன்

"தமிழ் அதர்" 04.12.2021
90, திருநாவற்குளம்,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சித்தி விநாயகனைச் சிந்தைதனில்...

**பல்லவி**

சித்தி விநா யகனைச் சிந்தை தனில் நினைந்தால்
நித்தியம் வெற்றி வரும் நிச்சயமே

**அநுபல்லவி**

புத்தி தரும் கடவுள் சக்தி தரும் கடவுள்
பக்தி யுடன் பணிந்தால் சித்தி தரும் எங்கள்

(சித்தி விநாயகனை....)

**சரணம்**

கவுரி அம்மை பாலன் கங்கா தரன் குமாரன்
புவனி யுள்ளோர் புகழும் புண்ணியத் திருச் சொரூபன்
வவுனியா குடி யிருப்பில் வளந் தரும் குளத்தருகில்
அவனி யுள்ளோர் போற்ற அமர்ந்த அதி தீரன்

(சித்தி விநாயகனை....)

தாமரை மலர்கள் நாளும் சாமரை வீசி வர
தங்க நிறக் கதிர்கள் தாள் பணிந்தே வணங்க
தவளையும் மீனினமும் தேன் உண்ணும் வண்டு களும்
கவலையில் லாமல் நாளும் களிப்பொடு பூசை செய்யும்

(சித்தி விநாயகனை....)

நீரலை கரைக்கு வரும் நினைவலை மனத்தில் எழும்
பேரலை யாகி வரும் பெருமலை கருணை தரும்
சூரலை வாயில் வென்ற சுந்தரன் சகோ தரனே
ஊரலை யாமற் காக்கும் ஓங்காரப் பெரு மலையே

(சித்தி விநாயகனை....)

கருணை மழை பொழியும் கற்பகக் கரு முகிலே
அருளினை வாரி அருள் ஆனந்தப் பெரும் பொருளே
தருணம் இது அல்லவோ தயாபரன் நீ அல்லவோ
தாயினும் மேலாம் சர்வ சித்தி விநா யகனே

(சித்தி விநாயகனை....)

ஆனந்த நடம் புரியும் அற்புதக் கண பதியே
ஆயிரம் கோடி சூர்ய ஒளிதரும் அருள் நிதியே
நாமிந்த மேடை தன்னில் நடமிட அருள் புரியே
நற்றவத் தோர் பணியும் நர்த்தன கண பதியே

(சித்தி விநாயகனை....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## செல்வ விநாயகர்

**[பிறிஷ் பேர்ன் - அவுஸ்திரேலியா]**

**பல்லவி**

செல்வ விநாயகரைச் சிந்தைதனில் நினைத்தால்
செல்வ மெல்லாம் வருமே - பிறிஷ் பேர்ன்

**அனுபல்லவி**

அவுஸ்ரேலியா மண்ணில் குயின்ஸ்லாந்து மாநிலத்தில்
பிறிஷ்பேர்ன் நகரத்திலே வீற்றிருக்கும் எங்கள்
(செல்வ....)

**சரணம்**

தாய்தந்தை உலகமென்றே தரணிக்கு உணர்த்தியவன்
நோய்நொடி இன்றியெம்மை நெடுங்காலம் வாழவைப்பான்
வாழ்க்கையில் வசந்தம்வர வடிவினில் இளமைவர
வாக்குவல் லமையும்தர வல்ல கணபதியாம்
(செல்வ....)

அசுரர்களை அழித்து அமரர்களைக் காத்து
ஆலமரத் தடியில் அமர்ந்த பெருங்கடவுள்
பாரதப் பெருங்கதையைப் பாரறியச் செய்த
பரமசிவன் மைந்தன் பார்பதி தவப்புதல்வன்
(செல்வ....)

அவ்வைக்கு அருள்செய்த ஆனைமுகக் கடவுள்
இம்மைக்கும் ஏழேழு பிறவிக்கும் துணையாவான்
துன்பங்களைப் போக்கி இன்பங்களைத் தேக்கி
அன்பர்களைக் காத்து அருள்புரியும் பிரிஷ்பேர்ன்
(செல்வ....)

தம்பிக்கு மணஞ்செய்ய யானைவடிவில் வந்தோன்
நம்பிக்கை கொண்டவர்க்கு ஞானவடிவம் கொள்வோன்
தடைகள் எல்லாந்தகர்த்து தன்னம்பிக்கை கொடுத்து
இடையூறு களைப்போக்கி இன்பந்தரும் பிரிஷ்பேர்ன்
(செல்வ....)

இசையமைப்பு : திருமதி லலிதகுமாரி சிவபாலன் (கோண்டாவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கூழாங்கேணி வன்னியப் பிள்ளையார்.

பிள்ளையார் எங்கள் பிள்ளையார்.
கூழாங் கேணியில் கோயில்கொண் டிருக்கின்ற
பிள்ளையார்
வன்னியப் பிள்ளையார்.

(பிள்ளையார்......)

தாராள மனங்கொண்ட ஏராளர் வாழ்கின்ற
கூழாங் கேணியில் கோயில்கொண் டிருக்கின்ற
பிள்ளையார்
வன்னியப் பிள்ளையார்.

(கூழாங் கேணியில்....)

வன்னி மரத்தின்கீழ் கல்லாய் அமர்ந்தவர்
வளமான கோவிலில் வடிவாய் இருக்கின்ற
பிள்ளையார்.
வன்னியப் பிள்ளையார்.

(கூழாங்கேணியில்....)

கீழைக் கரவையில் அம்மனும் தானுமாய்
ஊழைக் கரைக்கின்ற உத்தம வித்தகப்
பிள்ளையார்.
வன்னியப் பிள்ளையார்.

(கூழாங் கேணியில்....)

அடுப்பு நாச்சியார் அருளோடு துணைவர
கொடுப்பு குறையாத கோமள யாமளப்
பிள்ளையார்.
வன்னியப்பிள்ளையார்.

(கூழாங் கேணியில்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

வெள்ளைக் குருமணல் விரிந்த பனந்தோப்பில்
அள்ளக் குறையாத அருளோடு இருக்கின்ற
பிள்ளையார்.
வன்னியப் பிள்ளையார்.

(சுழாங்கேணியில்...)

கண்ணகை அம்மனும் காத்தருள் செய்திட
எண்ணமெல் லாம்நிறைந் திங்கெழுந் தருளிய
பிள்ளையார்
வன்னியப் பிள்ளையார்.

(சுழாங்கேணியில்...)

அத்துளு அம்மன்தன் ஆலயப் பூசையை
இத்தலத் தேவைத்துச் செய்திட ஏற்றிட்ட
பிள்ளையார்
வன்னியப் பிள்ளையார்.

(சுழாங் கேணியில்...)

இசையமைத்துப் பாடியவர் : செல்வி ஸியானி சோதிலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிவ தாண்டவம்

[நடனம்]

தாண்டவம் - தாண்டவம் - தாண்டவம்.

ஆதியும் அந்தமும் இல்லா ஜோதி
ஆடிடும் தாண்டவம் ஆனந்தமே
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே

(தாண்டவம்.......)

(வேறு)

உலகருள் காரணர் உமையொரு பாகர்
மலஇருள் போக்கிடும் மாமலை வாசர்
ஆடிடும் தாண்டவம் ஆனந்தமே
ஆனந்தம் - ஆனந்தம்....ஆனந்தமே!

திக்குக் குலுங்கிட திசைகள் நடுங்கிட
அக்கினி நாயகன் ஆடிடும் தாண்டவம்
ஆனந்த பரவச நிலைதருமே
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே!

ஐந்தொழில் புரிந்திட ஆண்டவன் ஆடுதல்
பஞ்ச கிருத்திய தாண்டவமே
படைத்தல் காத்தல் அழித்தல்
அருளல் மறைத்தல் என்னும்

(ஐந்தொழில்....)

வேறு

வெந்தொழில் அசுரரின் திரிபுரம் எரித்திட
அந்தர நாதன் முதலினோர் வேண்ட
சுந்தரச் சிவனார் தேரினில் சென்று
சிரிப்பால் முப்புரம் எரித்த தாண்டவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

கொடுகொட்டி என்னும் தாண்டவம் - அதுவே
திரிபுர தகனமாம் தாண்டவம்

( தாண்டவம்...)

(வேறு)

சர்வ சங்கார உருத்திர மூர்த்தியாய்
சர்வ பிரபஞ்ச உயிர்களி னோடும்
எட்டுத் திக்கும் நடு நடுங்கிட
கட்டுச் சடையும் தகதக வென்றிட
கட்டழல் வீசிட கதிர்களும் கூசிட....

(வேறு)

அட்ட நாகங்களும் அட்டமா மலைகளும்
அட்ட கஜங்களும் அழிந்தொழிந் திறந்திட
ஆண்டவன் ஆடுதல் அற்புதம்! அற்புதம்! அற்புதமே !
அதுவே.... சர்வ சங்கார தாண்டவமே!

(தாண்டவம்...)

வேறு

அசுரரின் இரத்தம் குடித்த காளியின்
அகோரம் தணிக்க ஆண்டவன் ஆடிய
அற்புதம் ஊர்த்துவ தாண்டவமே

பதஞ்சலி வியாக்கிர பாத முனிவர்கள்
பணிந்திடப் பரமன் ஆடிய தாண்டவம்
முனி.... தாண்டவம்.... முனிதாண்டவம்

(தாண்டவம்.......)

வேறு

தாருக வனத்து முனிவர்கள் செருக்கைத்
தவிடு பொடியாய் ஆக்கிய பரமன்
பாம்புகள் நடுங்கிப் பணிந்திடச் செய்து
பாம்பணிந் தாடிய கௌரி தாண்டவம்

(தாண்டவம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

செருக்கொடு நின்ற இயமனை அழித்துச்
சிவனார் ஆடிய சங்கார தாண்டவம்
இயம சங்கார தாண்டவம்....

(தாண்டவம்....)

**வேறு**

அகோர தாண்டவம். பிரளய தாண்டவம்
அனவர தம்புரி அனவரத தாண்டவம்
அற்புதத் தாண்டவம் ஆச்சர்யத் தாண்டவம்
ஆனந்தத் தாண்டவம் ஆனந்தமே

(தாண்டவம்....)

இசையமைப்பு : கலாபூஷணம் திருமதி.தேவி மனோகரி நாகேஸ்பரன்
ஆடியவர் : செல்வன் அ.சுஜேந்திரா (அரங்கேற்றம்)
நடன அமைப்பு : நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தாண்டவம் சிவ தாண்டவம்...

[நடனம்]

இராகம் :- ரேவதி தாளம் :- ஆதி

### பல்லவி

தாண்டவம் தாண்டவம் சிவதாண்டவம்
ஆடினார் அய்யன் ஆடினார்
ஆதியும் அந்தமும் இல்லா ஜோதி
கனகசபையில் ஆனந்தத் தாண்டவம்
ஆடினார் அய்யன் ஆடினார்
(தாண்டவம்.....)

### ஜதி அமைப்பு

தரித்த தணதண தணத்த ஜொணு ஜொணு
ஜொணுத்,த திமிதிமி திமித்த கிடதக - 2

தரித்த தனதா தனத், த ஜொணுதா
ஜொணுத்,த திமிதா திமித், த கிடதா

தரித்த தனத்த ஜொணுத்த திமித்த (திஸ்ரஜதி)
த,த், தித், தித், தா தக்கிடத் தரிகிட தொம்
த,த், தித், தித், தா தக்கிடத் தரிகிட தொம்

### அனுபல்லவி

திக்குக் குலுங்கிடத் திசைகள் நடுங்கிட
அக்கினி நாயகன் ஆடிடும் தாண்டவம்

### ஜதி அமைப்பு

தரிகிடதொம் தரிகிடதொம்
தரிகிடதொம் தரிகிடதொம்
தரிகிடதொம் தரிகிடதொம்
தரிகிடதொம் தரிகிடதொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம்**

சர்வ சங்கார உருத்திர மூர்த்தியாய்
சர்வ பிரபஞ்ச உயிர்களி னோடும்

**ஜதி அமைப்பு**

தோம் தத்தோம் தத்தோம்
தொம் தொம்தொம் தொம் தொம் - 2

எட்டுத் திக்கும் நடு நடுங்கிட
கட்டுச் சடையும் தகதக வென்றிட
கட்டுடல் வீசிட கதிரொளி பாய்ந்திட
அக்கினி நாயகன் ஆடிடும் ஊழித்தாண்டவம்

**ஜதி அமைப்பு**

தகதகிட தகதகிட தகதகிட தத்தாம்
தகதகிட தகதகிட தகதகிட தத்தாம்
தகதகிட தகதகிட தகதகிட தத்தாம்
தகதகிட தகதகிட தகதகிட தத்தாம்

**வேறு**

இராகம் :- ஹம்சானந்தி

கங்கை சடாமுடி திங்களும் ஆட
கணங்களும் ஆட கனக சபைதனிலே

மங்கள பைரவி மதிநிறைந் தாடிட
மாலும் அயனும்லய தாளங்கள் போடிட

தங்கு தோமென நந்தியும் கூட
நாரதர் யாழிசை மீட்டியும் பாட
துங்க விழியாட குண்டலமும் ஆட
செங்கம லர்ப்பதம் தூக்கியும் ஆட

படைத்தல் காத்தல்.... அழித்தல் - அருளல் மறைத்தல்
சிவதாண்டவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பஞ்ச ஜதிநடை

தகிட தகிட தகிட தகிட
தகிட தகிட தகிட தகிட
தகிட தகிட தகிட தகிட
தகிட தகிட தகிட தகிட

தகதிமி தகதிமி தகதிமி தகதிமி
தகதிமி தகதிமி தகதிமி தகதிமி
தகதிமி தகதிமி தகதிமி தகதிமி
தகதிமி தகதிமி தகதிமி தகதிமி

தகதகிட தகதகிட தகதகிட தகதகிட
தகதகிட தகதகிட தகதகிட தகதகிட
தகதகிட தகதகிட தகதகிட தகதகிட
தகதகிட தகதகிட தகதகிட தகதகிட

தகிடதகதிமி தகிடதகதிமி தகிடதகதிமி தகிடதகதிமி
தகிடதகதிமி தகிடதகதிமி தகிடதகதிமி தகிடதகதிமி
தகிடதகதிமி தகிடதகதிமி தகிடதகதிமி தகிடதகதிமி
தகிடதகதிமி தகிடதகதிமி தகிடதகதிமி தகிடதகதிமி

தகதிமி தகதகிட தகதிமி தகதகிட
தகதிமி தகதகிட தகதிமி தகதகிட

சுபம்

குறிப்பு : சிவதாண்டவம் பாடலின் ஜதிகளுடன் கூடிய சுருக்க வடிவம்.

இசையமைப்பு :- "சிதம்பரம் இசைமைந்தன்" நயினை பத்மநாதன் சிவமைந்தன்
ஆடியவர் :- திருமதி.தனுசா சிவமைந்தன் (அரங்கேற்றம்)
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சாஸ்திரி கூழாங்குளம் சிவபுர சுந்தரேசர்

### பல்லவி

சிவபுர சுந்தர ஈஸ்வரரே - எங்கள்
தீவினை நீக்கி அருள் ஈந்தருளே

(சிவபுர சுந்தர........)

### அனுபல்லவி

வன்னியில் பழம் பெருமை வாய்ந்தவரே - அன்று
வளம்மிகு தமிழ் மொழியை ஆய்ந்தவரே

(சிவபுர சுந்தர....)

### சரணம்

மான்மயில் நடமாடும் வன்னியிலே - நல்ல
மனமுடை அடியவர்கள் சென்னியிலே
தான்முனஞ் செய்தவினை விதிவரைந்த - கொடுந்
தண்டனை தனைப்போக்கும் ஈஸ்வரரே

(சிவபுர சுந்தர....)

சிவபுரமாம் பதியில் அமர்ந்தவரே - நல்ல
சிவபுர சுந்தர ஈஸ்வரரே
சிவபுர சுந்தர ஈஸ்வரியாம் - அன்னை
சேர்ந்தருள் பாலிக்க அமர்ந்தவரே

(சிவபுர சுந்தர....)

வில்வமும் கொன்றையும்நல் வேம்புகளும் - தெரு
வீதிகள் மைதானம் அரங்கமுமாய்
நல்லிடம் சேர்ந்தமர்ந்து திகழ்பவரே - என்றும்
நம்புமடி யார்கள்வினை தீர்ப்பவரே

(சிவபுர சுந்தர....)

தீர்த்தக்குளம் இயல்பாய் அமைந்திருக்க....நல்ல
திருவீதி பெருந்தெருவாய் சேர்ந்திருக்க
நேர்த்திக் கடன்என்று வருமடியார் - மனம்
நிறைவுற அருள்புரியும் பரம்பொருளே

(சிவபுர சுந்தர....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## என்னையும் சேர்த்துக் கொள்வாரா...

[நடனம்]

**பல்லவி**

என்னையும் சேர்த்துக் கொள்வாரா - வன்னி
எழில்மிகும் கோயில் குளத்துறை ஈசர். (என்னையும்....)

**அனுபல்லவி**

தென்னையும் மாவும் வாழை பலாவும்
சேர்ந்தமைந் திடும்பதி வாழ்ந்திடும் வாசர் (என்னையும்....)

**சரணம்**

அகிலாண் டேஸ்வரி அருகுறை ஈசர்
அகிலாண் டேஸ்வரர் அவரெந்தன் நேசர்
மகிமையி னாலெந்தன் மனதினை ஈர்ந்தவர்
மாபெரும் மழவிடை ஊர்தியாய் ஊர்ந்தவர் (என்னையும்....)

செந்நெலும் தேனும் திவ்விய பாலும்
கன்னலும் சேர்ந்தெனக் கவிபுனைந் தேத்தினேன்
இன்னலும் சோகமும் எனக்கென்னுந் துணையா
ஈசரே என்மனம் இலக்கில்லாக் கணையா (என்னையும்....)

விண்ணையும் மண்ணையும் விளங்கிட வைப்பவர்
வீணையின் நரம்பிலே விரலசைத் திருப்பவர்
கண்ணையும் மனத்தையும் கவர்ந்தவர் என்றே
காதலில் மூழ்கினேன் கரையறி யேனே (என்னையும்....)

செங்கையில் தீயினை ஏந்திட்ட கடவுள்
திரிபுரம் எரித்திடச் சிரித்திட்ட கடவுள்
மங்கையோர் பாகமாய் மதியொடு சடையில்
கங்கையும் தரித்தவர் காமனை எரித்தவர் (என்னையும்....)

நெஞ்சினில் தீயை எரியவிட் டாரே
நினைவிலா தென்னைத் தனியவிட் டாரே
அஞ்சிநான் அவரைச் சரணடைந் தேனே
ஆருயிர் அவர்க்கென அருகடைந் தேனே (என்னையும்....)

இசையமைப்பு :- "சிதம்பரம் இசைமைந்தன்" நயினை பத்மநாதன் சிவமைந்தன்

ஆடியவர் :- செல்வி சுபாஜினி இராம கவுண்டர் (அரங்கேற்றம்)

நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வற்றாப்பளை கண்ணகை அம்மன்

வற்றாப் பளையில் எழில்
வற்றாக் கருணை பொழி
வாழ்வே கண்ணகை அம்மனே - எங்கள்
வாழ்வை வளப்படுத்தும் அன்னையே

(வற்றாப்பளையில்)

முல்லை நகரில் நல்ல
முள்ளிய வளையில் கடல்
முன்னே அமர்ந்திருக்கும் அம்மனே - மதுரை
மூதூர் தனையெரித்த அன்னையே

(வற்றாப்பளையில்....)

பாடும் கடல் அலைகள்
பாதம் பணிந்திட நம்
பாவம் வினையகற்றும் பெத்தாச்சியே - உன்
பக்தர்களே அதற்கு அத்தாட்சியே

(வற்றாப்பளையில்....)

நீரில் விளக் கெரிக்கும்
நீங்காப் புகழ் படைத்து
நினைவில் நிலவும் எங்கள் அம்மனே - கோடி
நிலவின் எழில்படைத்த அன்னையே

(வற்றாப்பளையில்....)

பத்தாம் பளை யாக
வற்றாப் பளை யமர்ந்து
பெத்தாச்சி யான எங்கள் அன்னையே - மண்ணின்
பேறே வற்றாப்பளை அம்மனே

(வற்றாப்பளையில்....)

தொல்லை வினைகள் அற
தொடரும் அருளைப் பெற
தொழுதேன் உனது பாதம் அம்மனே - இந்தத்
தொழிலே எமதுபணி அன்னையே

(வற்றாப்பளையில்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நயினை நாகபூஷணி அம்மா

(நடனம்)

### பல்லவி

நயினை யிலே குடியிருக்கும் நாக பூஷணி அம்மா
நம்பி யவர் குலங் காக்கும் நாக பூஷணி அம்மா

(நயினை...)

### அநுபல்லவி

உயிரி னிலே உறைந்திருக்கும் உத்த மியே தாயே
ஊரெ ல்லாங் கொண்டாடும் சக்தி நீயே தாயே

(நயினை...)

### சரணம்

புளியந்தீவு நாகேஸ்வரர் ஆலயத்தி லிருந்து
பூசைசெய்ய நாகபாம்பு பூவைக் கொண்டுவந்து
வழிபாடு செய்யதினம் மகிழ்ந்தவளே தாயே
மாதேவன் சக்திஎன்னும் மாதரசி நீயே

(நயினை...)

கருடன்வந்து வழிமறிக்கக் கலங்கியதே நாகம்
கடல்வணிகர் தீர்த்துவைக்கக் கருடன்சொன்ன உபாயம்
பொருளனைத்தும் கோயில்கட்டக் கொடுத்திடுவீர் என்ன
பெரியதொரு கோவிலங்கு எழுந்ததந்த நாளில்

அழகான கோபுரமும் ஆலயமும் உனக்கு
அலங்காரத் தேருமென அமைந்ததம்மா தாயே
வளமான வன்னிமரம் தலவிருட்சம் ஆக
வாய்த்ததம்மா கங்காதர புஷ்கரணி தீர்த்தம்

(நயினை...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணையாத நெருப்போடு அடியவர்க்கு நாளும்
அன்னமதை அளித்தருளும் அமுதசுரபி கொண்டாய்
இணையாக இன்னொருவர் இல்லாத தாயே
இலங்கையிலே பழமைபெற்ற எங்கள்அன்னை தாயே

கடல்நடுவே அமைந்திருக்கும் நயினையிலே வாழும்
காலகாலன் தேவிஎம்மைக் காத்தருள வாரும்
உடலோடு உயிருருக உள்ளமெல்லாம் நடுங்க
உன்னைஎண்ணி வழிபட்டோம் உள்ளக்குறை தீரும்

கடல்அலைகள் தாலாட்ட கண்வளரும் தாயே
கதிரவன்தன் ஒளியூட்ட கண்விழித்து அருள்வாய்
உடல்பொருளோ டாவிஎல்லாம் உன்வசமே அம்மா
உலகாளும் நயினைஸ்ரீ நாகபூஷணித் தாயே

(நயினை...)

இசையமைப்பு : திரு.பிரதீபன் சிவநாதன்
ஆடியவர்கள் : செல்விகள் ஹம்சினி வன்னியசிங்கம், யதுஷாலினி வீரசிங்கம்,
பவிஷாலினி வீரசிங்கம் (அரங்கேற்றம்)
நடன அமைப்பு : நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பிரண்டாவின் பேரொளியே...

பிரண்டாவின் பேரொளியே அபிராமி - எங்கள்
பேதைமையைப் போக்கிடுவாய் அபிராமி
திரண்டசையும் விழியழகி அபிராமி - இந்தத்
தேசமெல்லாம் வாழவைப்பாய் அபிராமி
(பிராண்டாவின்....)

உலகீன்ற நாயகியே அபிராமி - எங்கள்
உயிரான உமையவளே அபிராமி
நிலவீன்ற நாயகியே அபிராமி - கடவூர்
நித்திலமே பொற்குவையே அபிராமி
(பிராண்டாவின்....)

துன்பமெல்லாம் தீர்ப்பவளே அபிராமி - மனத்
தூய்மையினைத் தருபவளே அபிராமி
கன்மமெல்லாம் போக்கிடுவாய் அபிராமி - எம்மைக்
கண்திறந்து பார்த்திடம்மா அபிராமி
(பிராண்டாவின்....)

குங்குமத்தில் குடியிருக்கும் அபிராமி - எங்கள்
குலவிளக் கானவளே அபிராமி
இங்குனக்கு என்னகுறை அபிராமி - எங்கள்
இதயத்தில் வந்துஉறை அபிராமி
(பிராண்டாவின்....)

பூப்பறித்துப் பூசைசெய்வோம் அபிராமி - உன்னைப்
பொன்னாலே அலங்கரிப்போம் அபிராமி
பாப்புனைந்து பாடிடுவோம் அபிராமி - உந்தன்
பாதமலர் சூடிடுவோம் அபிராமி
(பிராண்டாவின்....)

டென்மார்க்கின் பிரண்டாவிலே கோவில்கொண்டாய் - எங்கள்
தென்னாட்டின் பெருநிதியே அபிராமி
என்னாட்டு மக்களுக்கும் அருள்தருவாய் - உன்னை
எண்ணிநாம் வணங்குகிறோம் அபிராமி
(பிராண்டாவின்....)

இசையமைப்பு : எல்.ஷிவனேஷ் (தமிழ் நாடு)
பாடியவர் : கனகராஜ் (தமிழ் நாடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## எண்ணி எண்ணி ஏங்குகிறேன் எழில்வேலா

[நடனம்]

**பல்லவி**

எண்ணி எண்ணி ஏங்குகிறேன் எழில்வேலா - எந்தன்
எண்ணமெல்லாம் நீ நிறைந்தாய் எழில் வேலா
(எண்ணி எண்ணி ......)

**அனுபல்லவி**

வண்ண மயில் வாகனனே வடிவேலா - எங்கள்
வன்னி மண்ணின் காவலனே வயலூரா
(எண்ணி எண்ணி ......)

**சரணம்**

கோல வண்ண நாயகனே குறவள்ளி காதலனே
கோயில் கொண்டாய் நகர் நடுவே கோமளனே - உன்னை
கும்பிடவே பேறு பெற்றோம் குருபரனே
(எண்ணி எண்ணி ......)

எந்த வினை ஆனாலும் வந்தவினை தீர்த்தருளும்
கந்த னுனைக் கால் பிடித்தோம் கண்திறவாய் - வவுனியா
கந்த சுவாமிப் பெருமானே காத்தருள்வாய்
(எண்ணி எண்ணி ......)

கால கண்டன் நீலகண்டன் கைலைமலை சூலதண்டன்
பால கன்தன் பாதம் எங்கள் பக்கத்துணை - வேலன்
பக்கத் துணை யானால்ஏன் வேறுதுணை
(எண்ணி எண்ணி ......)

பாலி னது நிறத்தியொடு பச்சைப்பசுங் கொடியுடனே
வேலை ஒரு கையில் ஏந்தும் வேலையா - உன்னை
விட்டு நெஞ்சம் நினைப்பதொரு வேலையா
(எண்ணி எண்ணி ......)

இசையமைப்பு :- திரு.எஸ்.சிந்துஜன்
ஆடியவர் :- செல்வி கிருஷ்ரிகா ஞானவேல் (அரங்கேற்றம்)
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி.சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நல்லையிலே கண்டேனே...

[நடனம்]

### பல்லவி

நல்லை யிலே கண்டேனே நான் மயங்கி நின்றேனே
எல்லை இல்லாப் பேரழகன் என் மனதை வென்றானே

### அனுபல்லவி

தில்லை நட ராஜன் மகன்
திரு முருகன் மால் மருகன்
தொல்லை அசு ரர் தொலைத்த
தோகை மயில் வேலனை நான்

(நல்லையிலே....)

### சரணம்

தோகை மயில் ஏறி வந்தான்
தோகை யர்கள் சேர வந்தான்
வேலைக் கையில் ஏந்தி வந்தான்
விழி இரண்டைக் கவர்ந்து கொண்டான்

காலைக் கதிர் ஒளி யினைப்போல்
கண்க ளுக்கு விருந் தளித்து
வாலை எந்தன் இத யத்தையே
வள்ளல் அவன் கவர்ந் தானே

அலங் காரக் கந்தன் அவன்
அழகினில் நான் மயங்கி விட்டேன்
குலங் காக்கும் குமரன் தாளைக்
கும்பிட்டு அடி பணி ந்தேன்

யாழ் நகரின் நடு வினிலே
நல்லூ ராம் பதி யினிலே
வாழு கின்ற வேலன் அவன்
வாலை என்னைச் சேர்ப் பானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்று தனில் விளை யாடும்
குமரன் திரு வடி வழகைக்
கண்டு நான் காதல் கொண்டேன்
கன்னித் தன்மை இழந்து விட்டேன்

அன்று வந்து போன அவன்
ஆழ நெஞ்சில் பதிந்து விட்டான்
என்று அவன் வரு வானோ
ஏங்கும் என்னை நினைப் பானோ

வள்ளி துயர் தீர்த்த வனாம்
வல்லி கரம் சேர்த்த வனாம்
எள்ளி நகை யாட என்னை
ஏன் தவிக்க விட்டு விட்டான்

புள்ளி மயில் வர வில்லையோ
பூசை முறை சரி இல்லையோ
அள்ளி என்னை அணைத் தெடுக்க
ஆசை இன்னும் வர வில்லையோ

கன்று போல் கலங்கி மனம்
கண் ணீரில் கரை கிறதே
இன்றும் அவன் வரு வானோ
என் துயரம் தீர்ப் பானோ

கண் ணீரில் நான் மிதந்தால்
கரை அறி யா திருந்தால்
எண் ணாமல் இருப் பானோ
என்னைக் கரை சேர்க் கானோ

துன்ப வினை தீர்க்க வந்து
இன்ப வினை தந்து விட்டான்
அன்பன் அவன் முருகன் எனை
அணைத் தெடுத்துச் சேர்த்துக் கொண்டான்

(நல்லையிலே....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## காரைநகர் வயல் வெளியில்...

(நடனம்)

**பல்லவி**

காரை நகர் வயல் வெளியில்
கதிர் பொறுக்கும் மா மயிலே
ஆரை எண்ணி ஆடு கின்றாய்
அங்கு மிங்கும் தேடு கின்றாய்

(காரை....)

**அநுபல்லவி**

ஊரை யெல்லாம் காத் தருளும்
உத்த மராம் சுந்த ரேசர்
பாரை ஆள உதித்த மகன்
பழக இனிய முருக னையா

(காரை....)

(சரணம்)

மழை முகில் கண்டல்லவோ
மனம் மகிழ்ந் தாடிடுவாய்
மாமயிலே இன்று உந்தன்
மனதுக் கென்ன குதூகலமோ

விசாகத்திலே உதித்து எங்கள்
வினைகள் தீர்க்க வந்தவனை
உசாவி நின்று தேடினையோ
உள்ளம் மகிழ்ந் தாடினையோ

(காரை....)

திக்க ரையிலே இருக்கும்
திரு முருகன் வருவானேல்
அக்க றையோ டவனிடத்தில்
அடிய வனென் துயரஞ்சொல்வாய்

சக்க ரைபருப்பு நல்ல
சாதம் பழம் நான்தருவேன்
எக்கு றையு மில்லாமல்
என்று முன்னைக் காத்திடுவேன்

(காரை....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்க ரையிலே இருக்கும்
திரு முருகன் என்மேலே
அக் கறையில் லாதிருந்தால்
எக்க ரையை நானடைவேன்

எக்கு றையும் இல்லாமல்
இங்கு நின்று ஆடுகிறாய்
இக் குறையை முருகனிடம்
எடுத்துச் சொல்வாய் மாமயிலே

(காரை....)

மாங் கனிக்காய் உலகைவலம்
வந்த முரு கேசனிடம்
ஏங்கி நிற்கும் என்னிலையை
எடுத்துச் சொல்வாய் மாமயிலே

சூரரை வதைத்த எங்கள்
சுப்ர மண்ய வீரனிடம்
தோகை எந்தன் துயரைச்சொல்வாய்
துள்ளி ஆடும் மாமயிலே

(காரை....)

ஈழத்துச் சிதம் பரமாய்
இருக்கும் காரைச் சிவத்தலத்தில்
ஊழைவெல்ல நடன மிடும்
உத்தமனார் கோயில் கொண்டார்

சௌந்தராம் பிகை சமேத
சுந்தரேசர் அருட் புதல்வன்
சௌந்தரியம் யாவும் தரும்
சக்திவேலன் குறை தீர்ப்பான்.

(காரை....)

இசையமைப்பு : திரு.அகிலன் சிவானந்தன்
ஆடியவர் : செல்வி நிதுசா சதானந்தம்
நடன அமைப்பு : ராதிகா சிவாநந்தன்
(அரங்கேற்றம் – மெல்பேர்ன் அவுஸ்திரேலியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கலைவாணியே....

### பல்லவி

கலை வாணியே - சகல
கலை ஞானம் கவி யாவும்
தருவாய் நீயே

### அனுபல்லவி

அலை போலே அசைந் தாடும்
கலை ஆடை அதன் மேலே
விலை ஏதும் இலை ஆகும்
கலை ஞான நகை ஆடும்

(கலைவாணியே....)

### சரணம்

சிலம் புகள் ஒலிக் கின்ற
சுரத் துக்கு நான் பாடிப்
புலம் பிட நீ வாராய்
புக ழெலாம் நீ தாராய்

(கலைவாணியே....)

வீணை யின் நாத ஒலி
விர லசை வுகளை நான்
காண வும் கேட்டுக் கவி
பாட வும் எனைப் பாராய்

(கலைவாணியே....)

ஏடு என் இதய மென
எழுதி என் னைப் பார்த்து
பாடு என் றருள் செய்வாய்
பாரை எல்லாம் வெல் வாய்

(கலைவாணியே....)

மயில் போலக் குயில் போல
மனம் போல நான் பாடி
ஒயி லாக நான் ஆடி
உன்னை நாளும் துதி பாட

(கலைவாணியே....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடுவாய் மகளே தமிழ்ப் பாட்டு...

பாடுவாய் மகளே தமிழ்ப் பாட்டு - இந்தப்
பாரினை அதனால் மகிழ் வூட்டு
காடுகள் மலைகள் நதியை எல்லாம் - தமிழ்க்
கானத்தி னாலே சிலிர்ப் பூட்டு

(பாடுவாய்...)

அகத்தின் பெருமைக்கு ஒரு பாட்டு - இந்த
அகிலத்தை அதனால் அழ கூட்டு
புறத்தின் பெருமைக்கும் ஒரு பாட்டு - இந்தப்
பூமியை அதனால் வியப் பூட்டு

(பாடுவாய்...)

வள்ளுவன் குறளிலே ஒரு பாட்டு - இந்த
வையத்தை அதனால் அறி வூட்டு
உள்ளுவ தெல்லாம் உயர் வுள்ளல் - என்ற
உத்தமக் கருத்தினால் உயர் வூட்டு

(பாடுவாய்...)

கம்பனின் திறமைக்கு ஒரு பாட்டு - இந்தக்
காசினி அறியட்டும் அதைக் கேட்டு
அம்புவி புகழ்ந்திட வாய்ப் பூட்டு - தமிழை
அறியா திழிப்போர்க்கு வாய்ப் பூட்டு

(பாடுவாய்...)

நற்றமிழ்ச் சிலம்பிலே ஒரு பாட்டு - இந்த
நானிலம் முழுதையும் செழிப் பூட்டு
பற்றிலாத் தமிழர்க்கும் ஒரு பாட்டு - தமிழ்
பாடியே பெருமையை நிலை நாட்டு

(பாடுவாய்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

திருமுறை திவ்ய பிரபந் தம் - சந்தத்
திருப்புகழ் தன்னிலே ஒரு பாட்டு
ஒருமுறை ஆவது நீ பாடு - இந்த
உலகிற்கு அவற்றை நினை வூட்டு

(பாடுவாய்....)

பாரதி பாடலில் ஒரு பாட்டு - இந்தப்
பாரினை அதனால் வலு வூட்டு
சாரதி உலகுக்கு அவன் என்றே - ஒரு
சத்தியம் செய்யட்டும் உன் பாட்டு.

(பாடுவாய்....)

ஔவையின் தமிழிலே ஒரு பாட்டு - இந்த
அவனிக்கு ஒழுக்கத்தின் வழி காட்டு
செம்மொழி ஆகிய தமிழ் மொழியே - எந்த
தேசத்தும் மொழிமுதல் எனக் காட்டு

(பாடுவாய்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழே நம் உயிராகும்

தமிழே நம் விழியாகும். தமிழே நம் மொழியாகும்
தமிழே நம் உயிராகும் என்போம் - செந்
தமிழே நம் பொருளாகும் தமிழே நம் புகழாகும்
தமிழே நம் உணர்வாகும் என்போம்.

(தமிழே....)

(வேறு)

திங் களுக்கு மூத்த தமிழ்
செம் மொழியாய் வாய்த்த தமிழ்
எங்களுக்கு உயிராகும் இன்பத் தமிழ் - எங்கள்
இதயத்தின் துடிப்பாகும் இனிய தமிழ்

சங் கத்திலே வளர்ந்த தமிழ்
சந் தத்திலே உயர்ந்த தமிழ்
அங் கத்திலே பரந்ததமிழ் அமிழ்தாகும் - எங்கள்
அன் னையென ஆனதமிழ் அழகாகும்

(தமிழே....)

(வேறு)

சங் கொலித்து முழக்குவோம்
தரணி எங்கும் பரப்புவோம்
எங்கள் தமிழ் மொழியை - இதய
மூச்சில் நிரப்புவோம்

திங் களுக்கும் உணர்த்துவோம்
செங் கதிர்க்கும் விளக்குவோம்
எங்கள் தமிழ் மொழியை - அண்டம்
எல்லாம் பரப்புவோம்

(தமிழே....)

(வேறு)

காற்று உலகில் உள்ளவரை
கடலும் வானும் உள்ளவரை
ஆற்ற லோடு வாழ்க - என்று
அன்னை தமிழை வாழ்த்துவோம்

போற்றும் உலகம் உள்ளவரை
புவியும் உயிரும் உள்ளவரை
ஏற்றம் மிக்க தமிழை - நம்
இதயம் என்றே போற்றுவோம்.

(தமிழே....)

இசையமைத்துப் பாடியவர் : இசை இளவரசன் கந்தப்பு ஜெயந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழா தமிழா பெருமை கொள்....

[நடனம்]

பல்லவி

தமிழா தமிழா பெருமைகொள் - திருக்
குறளால் உலகத் தலைமை கொள்

அனுபல்லவி

தமிழே உலகின் தாய் மொழி - இதைத்
தரணி முழுவதும் நீ மொழி

(தமிழா...)

சரணம்

வையகம் முழுதுக்கும் நெறி தந்த - திரு
வள்ளுவன் உலகத் தலை மகன்
பொய்யில்லை உண்மை புரிந்து கொள் - நீ
பூமியில் தமிழனாய் நிமிர்ந்து நில்

(தமிழா....)

முப்பால் எனவே குறள் மொழிந்தான் - உலகம்
முழுமைக்கும் ஏற்ற வழி திறந்தான்
எப்பால் இவன்போல் எவன் பிறந்தான் - இதை
ஏன்நீ மறந்தாய் எழு தமிழா

(தமிழா....)

உலகுக்கு இன்னொரு சூ ரியன் - அறிவு
ஊட்டியே காத்திடும் வள்ளு வன்
நிலவுக்கு அறிமுகம் தேவை யோ - உலகம்
நிலைபெற வேறுநூல் தேவை யோ

(தமிழா....)

வள்ளுவன் தன்னைப் போற்று வோம் - தமிழ்
மறையென எங்கும் சாற்று வோம்
அள்ளக் குறையா அமுத மாம் - குறளை
அள்ளி அள்ளியே பருகு வோம்

(தமிழா...)

இசையமைப்பு :- திரு.சிவநாதன் பிரதீபன்

நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திங்களுக்கு மூத்த தமிழ்

தமிழே நந் தமிழே உன் தரம் சொல்லவா - செந்
தமி ழான புல வோரின் புகழ் சொல்லவா
அமிழ் தான மொழி யாகி அர சோச்சினாய் - மிக
அரி தான பல பாடல் அரங் கேற்றினாய்

(தமிழே .....)

**வேறு**

சங்கத் திலே வளர்ந்த வளே
சத்தியம் போல் உயர்ந்த வளே
அங்கத் திலே உயி ரெனவே அமைந்தவளே - எங்கள்
அர னாரின் கவிதை யிலே சமைந்தவளே

(தமிழே .....)

திங்க ளுக்கும் மூத்த வளே
செங்க திர்போல் வாய்த்த வளே
தென்ற லுக்குத் தோழி யென அமைந்தவளே - உன்பின்
சென்ற வர்கள் தோற்ற தில்லைச் செழுந்தமிழே

(தமிழே .....)

**வேறு**

பொதிகை மலை யிருந்த
அகத்தியர் செய்து தந்த
பொன்போலும் இலக்கணமாம் ஆடை கொண்டாய் - புலவோர்
போற்றுதொல் காப்பியம்நன் நூலுங் கண்டாய்

பள்ளுப் பிரபந் தங்கள்
பரணி கலம் பகங்கள்
தெள்ளு தமிழில் தந்தார் புலவர்களே - அவை
தெவிட்டா அமுத மென்றார் தேவர்களே

(தமிழே .....)

திருக் குறள் போல ஒரு
கருத் துக் கரு வூலம்
செகத் தினில் இல்லை இல்லை இல்லை யம்மா - இந்த
தேசத் துக் கவிதைக் கது எல்லை யம்மா

(தமிழே .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்ப னொடு வள்ளு வனும்
காவி யஞ்செய் இளங் கோவும்
நம்ப முடி யாத படி கவிதை தந்தார் - இந்த
நானி லத்தோர் அவை களையே அமுத மென்றார்

(தமிழே .....)

**வேறு**

நெருப்பையும் எரிக்கும் நீரையும் நனைக்கும்
பொருப்பினில் பிறந்திட்ட எங்கள் தமிழ்
செருப்புகல் மறத்தையும் திருக்குறள் அறத்தையும்
விருப்பினொடு தந்திட்டது எங்கள் தமிழ்

(தமிழே .....)

**வேறு**

திருப்புகழ் எனும் புகழ்க் கவிதையொடு தேவார
திருவாச கந்தந்தது எங்கள் தமிழ்
விரும்புமுறை நடை நாவல் சிறுகதை புதுக்கவிதை
வீறாப்பாய்த் தந்ததமிழ் எங்கள் தமிழ்

அரும்புகழ்த் தேம் பாவணியும் அழகுமிகு சீறாவும்
அரியநடை யில்தந்தது எங்கள் தமிழ்
இரும்புமனம் உருகிடவும் இளகிடவும் பக்தியிசை
ஏற்றமொடு தந்ததமிழ் எங்கள் தமிழ்

(தமிழே .....)

**வேறு**

அகமும் புறமும் தந்து
அறமும் மறமும் தந்து
இகமும் பரமும் தந்த தமிழே!
உறவும் உலகும் நீயே
உணர்வும் உயிரும் நீயே
உனையே புகழ்ந்து ஏற்றிப் போற்றினோம் - எங்கள்
உயிரே உந்தன் பெருமை சாற்றினோம்

(தமிழே .....)

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் தமிழ்

### பல்லவி

நெருப்பினில் எரியாது நீரினில் அமிழாது
விருப்பினில் நாம்பேசும் எங்கள் தமிழ் - இது
விண்ணோர்க்கும் அமுதான விந்தைத் தமிழ்

(நெருப்பினில்...)

### அநுபல்லவி

பொருப்பினில் உருவாகி புலவர்க்கு உயிராகி
திருக்குற ளாற்பொலிந்த எங்கள் தமிழ் - தெய்வத்
திருப்புக ழால்நிறைந்த தெய்வத் தமிழ்

(நெருப்பினில்....)

### சரணம்

சங்கத் திருப்பாட்டு சர்க்கரையாய் இனித்திடுமே
சம்பந்தர் தேவாரம் சாவையும் தடுத்திடுமே
திங்கள்நிகர் காவியங்கள் திசையெல்லாம் பரந்திடுமே
திருமுறை பாசுரத்தால் தீமையெல்லாம் பறந்திடுமே

(நெருப்பினில்....)

பரணி உலாவென்றும் பாவையொடு கோவையென்றும்
தரணி புகழ்பனுவல்த் தமிழெங்கள் உயிராமே
அறனில் பலகவிதை அருளில் பலகவிதை
திறனில் பலகவிதை தீந்தமிழ்க் கவிதைகளாம்

(நெருப்பினில்....)

### வேறு

அகத்தியர் முதலாக வீரமா முனிவர் வரை
அகம்புறம் எனத்தந்த இலக்கணம் பலவாகும்
செகத்தியல் பொருளெல்லாம் சிறப்புடன் பாடிவைத்த
செந்தமிழை நாம்மறவோம் செந்தேனாய் நுகர்ந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

இயலிசை நாடகங்கள் இன்பந்தரும் உரைநடைகள்
மயல்மிகு மனத்தையெல்லாம் மாற்றிநல் ஏற்றந்தரும்
வள்ளுவர் இளங்கோவும் வளம்மிகு கம்பனுமே
வடித்தவை படித்தவர்கள் வாழ்வாங்கு வாழவல்லார்

**வேறு**

சொல்லரும் அருளாளர் சேக்கிழார் மூவரொடு
நல்லமணி வாசகனார் நம்கச்சி நாவலனார்
எல்லையில்லாப் புகழ்சேர்த்த எம்புலவன் பாரதியும்
பல்லோரும் புகழ்விபுலா னந்தர்வீர மாமுனிவர்

உமறுவும் கவிமணியும் பாரதி தாசனொடு
ஊரெல்லாம் புகழ் கண்ண தாசனென
உயர்ந்தோர் வளர்த்ததமிழ் உயிரோடு கலந்ததமிழ்
உலகுக்கு வழிகாட்டும் உண்மைத் தமிழ்

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் வாழுமே - தமிழ் வாழுமே

**பல்லவி**

தமிழ் வாழும் தமிழ் வாழும் தமிழ் வாழுமே
தரை வானும் கடல் நீரும் உள நாள்வரை
(தமிழ் வாழும்....)

**அனுபல்லவி**

உயிர் வாழும் உல கெங்கும் தமிழ் வாழுமே
உணர் வோடு உயி ரோடு தமிழ் வாழுமே
(தமிழ் வாழும்....)

**சரணம்**

உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்களே - எங்கள்
ஊனோடும் உயிரோடும் தமிழ் உள்ளதே
கலகங்கள் மோதல்கள் இல் லாமலே - நாங்கள்
களிப்போடும் சிறப்போடும் தழைத் தோங்குவோம்
(தமிழ் வாழும்....)

உலகத்தின் முதல்மொழியும் தமிழே அன்றோ - மிக
உயர்வான செம்மொழியும் தமிழே அன்றோ
பலகற்றும் தமிழ்கல்லாத் தமிழன் என்றே - இந்தப்
பார்மீது ஒருதமிழன் இருப்ப துண்டோ
(தமிழ் வாழும்....)

தமிழ்நாக ரீகமதே உயர் வானது - எங்கள்
தமிழ்ப்பாரம் பரியமதே சிறப்பானது
அமிழ்தான தமிழ் தானே வளமானது - இதை
அறியாதார் வாழ் வென்றும் புதிரானது
( தமிழ் வாழும்....)

தமிழேநம் தாய்மொழியாம், தாயின் தாய்க்கும் - இன்பத்
தமிழேதான் தாய்மொழியாம் எல்லா மொழிக்கும்
தமிழேதான் தாய்மொழியாம். தமிழே தாயே - உயிர்த்
தமிழேஉன் தாள் பணிந்தோம் வாழ்க வாழ்க
(தமிழ் வாழும்....)

❉❉❉❉❉❉❉❉❉❉❉❉❉❉



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரத் தாலாட்டு

செந் தமிழர் பூமி யிலே
வந் தரும்பும் மா மலரே
செங்கரும்புத் தீஞ் சுவையே ஆரிரரோ - எங்கள்
செல்வமே கண் வளராய் ஆராரோ

( செந்தமிழர்....)

முன் னாளில் தமிழர் குலம்
முடி கொண்டு ஆண்ட தெல்லாம்
இன் னாளில் கற்பனையோ ஆரிரரோ - இனிமேல்
உன் னாலே மெய்த்திடுமோ ஆராரோ

(செந்தமிழர்....)

வில் புலி மீன் எழுதி
வீரர் கள் ஆண்ட தமிழ்
வீழ்ச்சி அடைவ தில்லை ஆரிரரோ - மாற்றார்
சூழ்ச்சி பலிப்ப தில்லை ஆராரோ

(செந்தமிழர்....)

இலட் சியம் அற்ற வரை
இனத் தையே விற்ப வரை
இலக்கியம் துரோகி என்னும் ஆரிரரோ - அவரை
அலட்சியம் செய்து விடு ஆராரோ

(செந்தமிழர்....)

செல்லும் வழி தனை மறிக்கும்
தீண்டா மைக் கொடுமை களை
செல்லமே உடைத் தெறிவாய் ஆரிரரோ - தெய்வத்
திருக்குறள் வழி நடப்பாய் ஆராரோ

(செந்தமிழர்....)

✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் பெருமை கொள்ளுகிறோம்

நாம் தமிழர் என்பதிலே பெருமை கொள்கிறோம் - நாம்
ஏன் பெருமை கொள்ளுகிறோம் எண்ணிப் பார்த்தோமா
நம் மொழியால் நம்கலையால் நம்முன் னோர்களால் - நம்
பண்பாட்டு விழுமியத்தால் பெருமை கொள்கிறோம்.

(நாம்தமிழர்....)

காவி யங்கள் இலக்கியங்கள் கவிதைகள் என்றும் - பெரும்
கணக்கில் லாமற் தந்தமொழி எம்மொழி என்றும்
தாயின் மொழி தந்தைமொழி தமிழ்மொழி என்றும் - நாம்
தமிழ ராக வாழ்வதிலே பெருமை கொள்கிறோம்

(நாம்தமிழர்....)

அறம் வகுத்து வாழ்ந்தவர்கள் நம்மவர் என்றும் - நல்ல
அன்பு நெறி வகுத்தவர்கள் நம்மவர் என்றும்
மறம் வகுத்து மானம்உயிர் என்றவர் என்றும் - இந்த
மண் ணினிலே யாவருக்கும் மூத்தவர் என்றும்

மறத் தினிலும் அறங்காத்த மனிதர்கள் என்றும் - மாற்றான்
மனத் தினிலும் அறம்வளர்த்து வாழ்ந்தவர் என்றும்
உரத் தினிலே உறுதிகொண்ட உத்தமர் என்றும் - இந்த
உலக வாழ்வு செம்மையுற உழைத்தவர் என்றும்

(நாம்தமிழர்....)

சமனில் லாத எதிரியோடு சண்டை செய்திலோம் - எதிரி
சரண டைந்தால் அவரையென்றும் கொன்று வீழ்த்திலோம்
இமை பொருந்தா வீரத்தோடு மரணத்தை ஏற்றோம் - எந்த
எதிரி யையும் அவமதித்து இழிவு படுத்திலோம்

(நாம்தமிழர்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

இவைகள் எல்லாம் பெருமையென்றே ஏற்று மகிழ்ந்தோம் - இன்று
இரவில் துரத்தி வாளால் வெட்டும் இழிநிலை கண்டோம்
இமை பொருந்தா வீரமறவர் இருந்த நாட்டிலே - இந்த
இழி நிலையா வாள் வெட்டும் தமிழரின் பண்பா

(நாம்தமிழர்...)

இயற்கை யாக ஊனமென்றால் யாரை நோவது - அது
இறைவன் படைப்பு என்றேதான் சமயஞ் சொன்னது
செயற்கை யாகக் கையைக் காலை வெட்டி எறிந்தால் - அந்தச்
செய்கை யாலே இருவருமே ஊனம் ஆகிறார்

(நாம்தமிழர்....)

✢✢✢✢✢✢✢✢✢✢✢✢✢✢



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்திய இரத்தத்தில் அர்த்தமில்லை

சிந்திய இரத்தத்தில் அர்த்தம் இல்லை - இந்தச்
சிந்தனை உனக்குஏன் இன்னும் இல்லை
கால்விலங் கொடித்திடப் போர் தொடுத்தோம் - நாம்
கைவிலங் கும்சேர்த்து மாட்டிக் கொண்டோம்

(சிந்திய.......)

சொத்துச் சுகங்களை நாம் இழந்தோம் - எங்கள்
சொந்த பந்தங்களைச் சேர்த் திழந்தோம்
கைகளைக் கால்களை நாம் இழந்தோம் - பெரும்
கண்ணீரும் இரத்தமும் சேர்த் திழந்தோம்

(சிந்திய...)

உரிமைகள் கிடைத்திடும் என்று நம்பி - தமிழர்
ஓரணி யாகநாம் போர் தொடுத்தோம்
சலுகைகள் கிடைத்திட வா உழைத்தோம் - நாளை
சரித்திரம் பழித்திட வீழ்ந்து விட்டோம்

(சிந்திய...)

காணாமல் ஆகினோர் எத்தனை பேர் - இங்கு
காணாமல் ஆக்கப்பட்டோர் எத்தனை பேர்
வீணாக இறந்தவர் எத்தனை பேர் - மண்ணில்
வீரச்சா வடைந்தவர் எத்தனை பேர்

(சிந்திய...)

தன்மானம் இழந்திட்ட தமிழர் களாய் - நாம்
தலைகுனிந் தல்லவோ வாடு கின்றோம்
இன்னுயிர் பெரிதென ஏமாந்து போய் - நாம்
இன்னும் அடிநக்கி வீழு வதோ

(சிந்திய...)

வெட்டிய காயங்கள் மாற வில்லை - எங்கள்
வீதியில் ஓலங்கள் ஓய வில்லை
பெட்டியில் பாம்பென அடங் குவதோ - இன்னும்
பித்தர்கள் போலநாம் தூங் குவதோ

(சிந்திய...)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குயில் கூவும் வசந்தங்கள்...

குயில் கூவும் வசந்தங்கள் வெகுதூரம் இல்லை
கோட்டானின் அலறல்கள் பறந்தோடும் உண்மை
(குயில் .....)

மழைமேகம் தனைநோக்கி அண்ணாந்து பார்த்தோம்
மயில்போல மனமொன்றி மகிழ்ந்தாடி வேர்த்தோம்
விரைந்தோடும் மேகத்தில் விமானங்கள் கண்டோம்
விதியோஇச் செயலென்று வேதனை கொண்டோம்
(குயில் .....)

கொலையால்எம் உடல்மண்ணில் வீழ்ந்திடக் கூடும்
கொடுமை களால்சொத்து அழிந்திடக் கூடும்
நிலையான சுதந்திரத் தீஎங்கள் நெஞ்சில்
நில்லாது செய்திட யாராலே கூடும்
(குயில் .....)

தாய்மண்ணின் உயிர்காக்க இரத்தங்கள் கொடுத்தோம்
தன்மான வழிகாண யுத்தங்கள் தொடுத்தோம்
நாயல்ல மனிதர்நாம் தன்மானத் தமிழர்
நலிந்தாலும் மெலிந்தாலும நம்மானம் காப்போம்
(குயில் .....)

விடுதலைத் தீயந்த வீணரை எரிக்கும்
விதிவழிப் பாவங்கள் குரல்வளை நெரிக்கும்
கொடுமைகள் செய்தவர் நரகத்தில் வீழ்வார்
குயில்கூவும் வசந்தங்கள் எம்மண்ணில் தோன்றும்
(குயில் .....)

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழநாடு எங்கள் நாடு...

(நடனம்)

ஈழ நாடு எங்கள் நாடு
இயற்கை வளம் கொண்ட நாடு
வாழும் மக்கள் யாவ ருக்கும்
வாழ்வ ளிக்கும் தெய்வ நாடு

( ஈழ நாடு....)

ஆசி யாவின் அதி சயமாய்
அமைந்த நாடு ஈழ நாடு
மாசி லாத பெருமை யோடு
மக்கள் அன்று வாழ்ந்த நாடு

கடல் கொண்ட தென் னாட்டின்
கரையில் உள்ள நன் நாடு
உடல் உயிராய்த் தமிழ கத்தோடு
உறவு கொண்ட ஈழ நாடு

( ஈழ நாடு....)

**வேறு**

இந்து வென்னும் சமுத்தி ரத்தின்
எழில் முத்தாய் விளங்கித் தோன்றும்
முந்து புகழ் கொண்ட நாடு
முழு உலகும் போற்றும் நாடு

காடு மலை கடல் நதிகள்
களனி என்னும் நா நிலமும்
கோடி செல்வம் கொழிக்கும் நாடு
குறை வில்லாத வீர நாடு

( ஈழ நாடு....)

தேயி லையும் இறப்பர் கோப்பி
செழித்து மலை சிறப் புறுமே
ஓய்வில் லாத உழைப்பி னாலே
உயரும் நெல்லும் மீன் வளமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிம வளங்கள் இரத்தி னமாம்
கல் விளையும் களஞ்சி யங்கள்
இனிய நான்கு மதங்கள் கொண்ட
இரண்டு மொழிகள் பேசும் நாடு

( ஈழ நாடு....)

இந்து பௌத்தம் இஸ்லாம் கிறீஸ்த்தம்
இணைந்து வாழும் இனிய நாடு
சொந்த நாடு என்று தமிழர்
சுகத்தை நாடும் இனிய நாடு

இராவணன் எல் லாளன் ஈழ
சேனன் குளக் கோட்டு மன்னன்
இராஜா விக்கிரம ராஜ சிங்கன்
எங்கள் பர ராஜ சேகரன்

( ஈழ நாடு....)

மாகோன் சண்ப கப் பெருமாள்
மன்னன் செக ராசா சேகரன்
சங்கி லியன் ஆண்ட நாடு
சரித் திரத்தில் நிலைத்த நாடு

கயி லாய வன்னி யனும்
பண் டார வன்னி யனும்
கண்ணும் கருத்து மாகப் போற்றிக்
காப் பாற்றி வளர்த்த நாடு

( ஈழ நாடு....)

மூத்த சிவன் மகா சிவன்
தீசன் சோழ பாண்டி யர்கள்
காத்த ளித்த ஈழ நாடு
காண இனிய சொர்க்க நாடு

பாடல் பெற்ற தலங்க ளாலே
பார் புகழும் ஈழ நாடு
ஆடல் வல்லான் பெய ராலே
சிவ பூமி ஆன நாடு

( ஈழ நாடு....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு மூலர் எனும் முனிவர்
சிவ பூமி என அழைத்தார்
தெரு முழுதும் சிவன் கோவில்
செறிந் திருந்த ஈழ நாடு

கேதீஸ் வரம் கோணேஸ் வரம்
கதிர் காமம் முன்னேஸ் வரம்
கீரி மலை நல்லூ ரோடு
மா மாங்கம் ஒட்டி சுட்டான்

( ஈழ நாடு.....)

வற் றாத அருள் சுரக்கும்
வற்றாப் பளைக் கண்ண கையும்
மற்று முள்ள கோவில் களும்
மலிந்த தெங்கள் ஈழ நாடு

மடு சிவனொளி பாத மலை
மாவிட்ட புரம் சன் னதி
முந்தல் திரௌபதை அம்ம னோடு
மூத்த வன்னிப் புத்தூர்க் கோவில்

( ஈழ நாடு.....)

கொக் கட்டிச் சோலை யோடு
கோவில் களால் நிறைந்த நாடு
திக் கெட்டும் புகழ் பரப்பும்
தேசம் எங்கள் ஈழ தேசம்

கோயில் தாது கோ புரங்கள்
தேவ ஆல யம் மசூதி
மாக மீது உயர்ந்து தோன்றும்
மாட்சி மிக்க காட்சி கொண்ட

( ஈழ நாடு.....)

வந் தாரை வாழ வைக்கும்
வவுனி யாவும் முல்லைத் தீவும்
முந்து புகழ் கொண்ட மன்னார்
மூத்த கிளி நொச்சி நிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

கலையி னோடு கல்வி வளம்
கரை யின்றிப் பெருகி வரும்
அலை கடல்சூழ் யாழ்ப் பாணம்
அவை வடக்கு மா காணம்

( ஈழ நாடு....)

ஒரு மலையாம் திரு மலையும்
உயர் மட்டு மா நகரும்
பெருமை மிகும் அம் பாறை
பெரும் கிழக்கு மா காணம்

தமிழர் களின் தாய கமாய்
தரணி யிலே புகழ் பெற்ற
அமிழ் தனைய தமிழ் பேசும்
அழகு நிலம் எமது நிலம்

( ஈழ நாடு....)

மலை யகத்து வாழ் தமிழர்
மண்ணை வளப் படுத் தியவர்
தமிழ கத்தில் இருந்து வந்து
தனித் துவமாய் வாழுகின்றார்

வேறு

எங்கள் நாட்டில் இன்று நாங்கள்
இனிய வாழ்வு தேடு கின்றோம்
திங்கள் போலத் தேய்ந்த வாழ்வு
திரும்ப நிறைய வேண்டு கிறோம்

போரி னாலே இழந்த உயிரைப்
பெறு வதற்கோர் வழியும் இல்லை
பாரி னாலே எமக்கு ஏதும்
பயனும் உண்டோ தெரிய வில்லை

மறைத்த இருள் விலகும் எங்கள்
மண்ணில் வாழ்வு மலரும் என்று
விறைத்த நல்ல உறுதி யோடு
விதியை எண்ணி வாடு கின்றோம்

( ஈழ நாடு....)

இசையமைப்பு :- கலாநிதி திருமதி அருந்ததி இரவீந்திரன்

நடன அமைப்பு :- கலாநிதி நா.செந்தூர்ச்செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுவது மட்டுமல்ல அரசியல்

வற்றாத வளம் நிறைந்த பூமி - எம்மை
வாழவைக்கும் அன்னை இது சாமி
( வற்றாத.....)

**வேறு**

பொற்றா மரைக் குளங்கள்
புகழ் பூத்த நதி வயல்கள்
உற்றா ரென இருக்கும் நாடு - இதன்
உண்மை தனை உணர்ந்து பாடு
( வற்றாத.....)

ஒற்றுமையில் லாது போனால்
உருப் படுமா இந்த நிலம்
கற்றவர் களே இதனைக் கேளும் - இந்தக்
கருத்தை மற வாதிருங்கள் நாளும்
( வற்றாத.....)

சண்டையிலே இறந்து விட்டால்
சகல துமே அழிந்து விட்டால்
இந்தநில வாழ்வெ வர்க்குக் கூடும் - இதை
எண்ணி இன ஒற்றுமையைப் பாடும்
( வற்றாத.....)

**வேறு**

வாழ விட்டு வாழ வேண்டும்
வாழ் வதற்கு அமைதி வேண்டும்
ஆளுவது மட்டுமல்ல அரசியல் - இங்கு
அனைவருமே வாழ்வதுதான் அழகியல்
( வற்றாத.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

## வன்னித் திருநாடே...

வன்னித் திருநாடே - நாங்கள்
வாழும் தமிழ் நாடே
உன்னை வணங்கு கின்றேன் - எந்தன்
உயிராய்ப் போற்று கின்றேன்.

(வன்னி....)

கன்னித் தமிழ் வளர்த்தாய்
களனியில் நெல் வளர்த்தாய்
தண்ணீர்க் குளங் களினால்
தாயாகி உடல் வளர்த்தாய்

(வன்னி....)

அடங்காப் பற்று என்னும்
அடங்காப் புகழ் படைத்தாய்
தடங்கா வளந் தந்து
தரணியில் உயர வைத்தாய்

(வன்னி....)

வந்தாரை வாழ வைத்து
வரலாறு நீ படைத்தாய்
நொந்தாரை ஆ தரித்து
நூலெங்கும் புகழ் பெற்றாய்

(வன்னி....)

அன்னைத் தமிழ் நிலமே
அழியாப் பெரும் புகழே
உன்னை வணங்கு கிறேன்
உயிராய்ப் போற்று கிறேன்

(வன்னி....)

****************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டாரவன்னியன்

(நடனம்)

அற்றைத் திங்கள்அவ்வெண் நிலவில்....

எங்களுக் கென்றொரு நாடு இருந்தது.
எங்களுக் கென்றொரு அரசு இருந்தது.
எங்களுக் கென்றொரு அரசன் இருந்தான்
எங்களுக் கென்றும் மகிழ்ச்சி இருந்தது.
(அற்றைத்திங்கள்....)

எங்களுக் கென்றொரு பண்பா டிருந்தது.
எங்களுக் கென்றுபல் கலைகள் இருந்தன.
எங்களுக் கென்றொரு வாழ்வு இருந்தது.
எங்களின் வாழ்கையில் நிம்மதி இருந்தது.
(அற்றைத்திங்கள்....)

காடுகள் யாவும் மரத்தால் நிறைந்தன.
வீடுகள் யாவும் மனத்தால் நிறைந்தன.
கோவில்கள் யாவும் எமதாய் இருந்தன
குதர்க்கம் பேசிட யாருமே இல்லை.
(அற்றைத்திங்கள்....)

எங்களின் குளங்கள் எங்களின் சொந்தம்.
எங்களின் காடுகள் எங்களின் சொந்தம்.
எங்களின் கடலும் எமக்கே சொந்தம்.
எங்களின் இராச்சியம் தனித்தே இருந்தது.
(அற்றைத்திங்கள்....)

எங்களின் காடுகள் தேனைச் சொரிந்தன.
எங்களின் கடல்கள் மீனைச் சொரிந்தன.
எங்களின் மாடுகள் பாலைப் பொழிந்தன.
எங்களின் வயல்கள் நெல்லாய்ப் பொலிந்தன.
(அற்றைத்திங்கள்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானும் மயிலும் சுதந்திர மாக
மகிழ்ந்து குலாவி வசித்தன வீட்டில்.
வானும் மண்ணும் போற்றிட மக்கள்
வளமாய் நலமாய் வாழ்ந்தனர் அன்று.

(அற்றைத்திங்கள்....)

ஆண்களின் வீரமும் பெண்களின் கற்பும்
அருந்தமிழ்க் கலைகளும் அழகாய் இருந்தன.
கண்களில் ஒளியும் கவின்தமிழ் மொழியும்
கலக்கம் இன்றியே செழித்து நிமிர்ந்தன.

(அற்றைத்திங்கள்....)

எங்களின் மொழியை, எங்களின் கலைகளை
எங்களின் மண்ணை, எங்களின் மக்களை
காக்க என்றொரு மன்னன் இருந்தான்
பண்டார வன்னியன். பண்டார வன்னியன்

(அற்றைத்திங்கள்....)

அடங்காப் பற்றாம் அன்னை பூமியை
அடங்காப் பற்றோடு ஆட்சி புரிந்தான்.
படங்கொண்ட பாம்பாய்ச் சீறுவான் பகைவரை.
அடங்கிய பசுவாய் மாறுவான் ஆட்சியில்.

(அற்றைத்திங்கள்....)

வன்னியை ஆண்ட மன்னருக் குள்ளே
மணிமுடி போல்வான் மாபெரும் வீரன்.
தன்னிகர் இல்லாத் தன்மானத் தோடு
வன்னியை ஆண்டனன் பண்டார வன்னியன்.

(அற்றைத்திங்கள்....)

வெள்ளையன் வந்தான். திறைதா என்றான்.
வெகுண்டே பண்டார வன்னியன் சொன்னான்

"நாமார்க்கும் குடியல்லோம் நாமெவர்க்கும் அஞ்சிடோம்
நாமெவர்க்கும் அடங்கிடோம் நாமெவர்க்கும் அடிபணியோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுவா வாங்க வந்தவர் நீங்கள்
கப்பம் வாங்கவோ" என்றே சீறினான்.
"பொறு" "வா" என்றா புகலுவான் மன்னன்
பொங்கி எழுந்தான் பண்டார வன்னியன்.

"தோகை தருவோம். தந்தம் தருவோம்.
யானைகள் தருவோம். சாயவேர் தருவோம்.
திறையாய் எதனையும் தந்திட மாட்டோம்
இறைமை உள்ளது எங்கள் நாடு.

இனாமாய்த் தருகிறோம். பரிசாய்த் தருகிறோம்.
இனமானத் துக்கு இழுக்காய்த் தந்திடோம்.
தானமாய்க் கேட்டால் தலையையும் கொடுப்போம்.
தமிழர்நாம் தன்மானம் எம்முடைச் சொத்து.

மண்ணினைக் காக்க மடியவும் தயா"ரென
மார்தட்டி உரைத்தான் பண்டார வன்னியன்.
நாட்டைக் காத்திட மக்கள் எழுந்தனர்
நயவஞ் சகர்கள் ஓடி மறைந்தனர்.

வாளொடு கேடயம் யானைகள் சேனைகள்
ஈட்டி முதலாம் ஆயுதம் ஏந்தினர்.
வெள்ளையர் சிலரை விரட்டிக் கலைத்தே
துப்பாக்கி சிலவும் பறித்தே எடுத்தனர்.

ஆனை இறவுக் கோட்டையைத் தகர்த்து
அடித்து விரட்டினர் அன்னியர் படையை.
வானை அதிர்த்திடும் முழக்கம் செய்தே
வந்தனர் வன்னி வீரர்கள் திரும்பி

கர்ப்பூரப் புல்வெளிக் கடும்போர் ஒன்றில்
கப்பம் கேட்டோரின் கழுத்தை அறுத்தனர்.
முல்லைக் கோட்டையை முழுதாய் அழித்தே
துப்பாக்கி பீரங்கி ஆயுதம் எடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

வெள்ளைத் தளபதி வோன்றிபெர்க் என்பான்
வீரர்கள் சிலரொடு கடலில் தப்பினான்.
புறங்காட்டி ஓடிய புல்லரை மன்னன்
“போ”என விட்டான் தர்மம் காத்தான்.

மீன்பிடிப் படகில் தப்பி ஓடிய
வெள்ளை வீரரை உயிரோடு விட்டான்.
புறங்காட்டு வோரைத் துரத்திக் கொல்வது
புகழா காது என்றே விட்டனன்.

தோல்வியில் துவண்ட வோன்றிபெர்க் என்பான்
மும்முனைத் தாக்குதல் திட்டம் தீட்டினான்
யாழிலிருந்து ஜோன் ஜ்வல் படையும்
திருமலை யிருந்து எட்வேட்மெச் படையும்

மன்னாரி லிருந்து தனதுபடையுமாய்
மும்முனைத் தாக்குதல் தொடுத்தான் வோன்றிபெர்க்.
சொன்னா ரில்லை தூதும் இல்லை
துஷ்டர்கள் திடீரெனத் தாக்குதல் நடத்தினர்.

(அற்றைத்திங்கள்....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠

குருவிச்சி நாச்சி

குருவிச்சி நாச்சி என்றொரு குலக்கொடி
வன்னியன் மேலே காதல் கொண்டனள்.
போருக்குச் செல்லும் பண்டார வன்னிக்குப்
பொரிமா கொடுத்தே காதலை உரைத்தனள்.

தோழியின் மூலம் காதலைச் சொன்னாள்
தோகையின் காதலை மன்னவன் ஏற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாழிகை ஆச்சு நல்லது பெண்ணே
நலமாய் இருக்கச்சொல் நல்லதே நடக்கும்.

வென்றுநான் வருவேன் அதன்பின் திருமணம்"
என்றவன் சொல்லிப் போருக்குச் சென்றான்

எங்கள் மண்ணைக் காக்க எழுந்த
எங்கள் மன்னனைப் பகைவர்கள் சூழ்ந்தனர்.
மும்முனைத் தாக்குதல் திடீரெனச் செய்து
முறியடித் தனர்எம் மன்னன் சேனையை.

வென்றுநான் வருவேன் அதன்பின் திருமணம்
என்றதை எண்ணி இருந்தவள் திகைத்தாள்

போரில் மன்னவன் இறந்ததாய்க் கேட்டு
குருவிச்சி நாச்சி தற்கொலை செய்தாள்.

கார்த்திகைக் கிழங்காம் கடும்விஷம் உண்டாள்.
ஆற்றில் அவள்உடல் சங்கம மானது.

குருவிச்சி நாச்சியின் உடலைச் சுமந்ததால்
குருவிச்சி ஆறு எனப் பேராச்சு

❉❉❉❉❉❉❉❉❉❉❉❉❉❉

இற்றைத் திங்கள்இவ்வெண் நிலவில்

மண்ணும் போனது மன்னனும் மாய்ந்தான்.
மாநிலம் எல்லாம் இருளாய் ஆனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

எங்கள் கடலும் எங்கள் குளமும்
எங்கள் கோவிலும் இனிஎன்ன ஆகுமோ
எங்கள் துயரைக் கேட்பார் இல்லை.
எங்களைக் காக்க யாருமே இல்லை.

எங்கள் வாழ்வு மீண்டும் சிறக்கும்
இன்னொரு வாழ்வு இனிதே பிறக்கும்.
எங்கள் மண்ணும் எங்கள் மக்களும்
எழுச்சி பெற்றே மீண்டும் செழிக்கும்.

வாழ்க எங்கள் வன்னிப் பெருமண்.
வாழ்க தமிழர் கலை பண்பாடு.
வாழ்க மக்கள். வாழ்க தமிழ்மொழி.
வாழ்க பண்டார வன்னியன் நாமம்.

இசையமைப்பு :- திரு.சிவநாதன் பிரதீபன்
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார் புகழும் வன்னி மண்

[நடனம்]

பாடுவோம் பாடுவோம்
பாடுவோம் பாடுவோம்
பார் புகழும் வன்னி மண்ணின்
பண் பாட்டுப் பெருமை களைப்

(பாடுவோம்....)

**வேறு**

ஏர் உழவர் நிறைந்த பூமி
எழில் மிகுந்து சிறந்த பூமி
ஊர் எல்லாம் கூடி ஒன்றாய்
உழைத்து மகிழ்ந்து உயர்ந்த பூமி

அடங் காத பற்றுக் கொண்ட
அஞ்சா நெஞ்சர் நிறைந்த பூமி
அடங்காப் பற் றென்னும் பெயர்
அடைந்த தெங்கள் அன்னை பூமி

அன்னி யரை எதிர்த்து மன்னர்
அர சாண்ட எங்கள் பூமி - பண்டார
வன்னி யனால் பெருமை பெற்ற
வளம் மிகுந்த எங்கள் பூமி

(பாடுவோம்....)

மானம் காக்க உயிர் துறந்த
மறக் குலத்து வன்னிச் சியர்
வான வராய் உயர்ந்த பூமி
வன்னி எங்கள் அன்னை பூமி

பானை சட்டி பிடித்த வளே
பத்தினி யாம் என்றோர் வாயை
ஆனை கட்டி அடக் கியவள்
அரி யாத்தை எங்கள் அன்னை

(பாடுவோம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

கண்ண கிக்கும் கோயில் உண்டு
கன்னி மேரி கோயில் உண்டு
விண்ண ளந்த கோபு ரங்கள்
விளங்கும் கேதீச் சரமு முண்டு

பாலும் தேனும் போல நல்ல
பண் பாடு பெரு கியதால்
நாளும் நாடி வந்த வர்க்கு
நல் வாழ்வு தந்த பூமி

அரிசி குரக்கன் தேன் இறைச்சி
அருமை மிகு பாலைப் பாணி
உருசி மிக்க உலு விந்தை
இலுப் பைப்பூப் பாணி வகை

பண்டி இறைச்சிக் கருக்க லொடு
பழஞ் சோறும் தயிரும் மிக
மண்டிக் கி டந்த பூமி
மண்டி யிட மறுத்த பூமி

(பாடுவோம்....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவனியில் சிறந்த பம்பைமடு

[நடனம்]

இந்து சமுத்திரத்தின் எழில்முத்து எனத்திகழும்
முந்துபுகழ் கொண்ட தெங்கள் நாடு
ஈழ நாடு

(இந்து....)

ஈழத்தின் வடக்கினிலே இதயமென இலங்குகின்ற
இயற்கை வளம் நிறைந்தநகர் வன்னி-
எங்கள் வன்னி

(இந்து....)

வேறு

அடங் காத பற்றுக் கொண்டோர்
அன்னை வன்னி மண்ணைக் காக்க
அடங்காப் பற் றானதெங்கள் வன்னி-
எங்கள் வன்னி

(இந்து....)

வேறு

பண்டார வன்னியனாம் பார்புகழும் வீரமன்னன்
பணியாது ஆட்சிசெய்த வன்னி
எங்கள் வன்னி

(இந்து....)

வேறு

அன்னியரை எதிர்த்த மக்கள்
அடிபணிய மறுத்த மன்னன்
வன்னியராய் உலகு போற்ற வாழ்ந்தார் ---இந்த
வரலாற்றுப் பெருமை கொண்ட வன்னி

(இந்து....)

இவ்வுலகின் கடைசித் தமிழ்
இராச்சியமாய் அமைந்த நாடு
ஈடுஇணை இல்லாப் புகழ் வன்னி
எங்கள் வன்னி
வந்தாரை வாழ வைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் பெருமை கொண்ட
வன்னியின் மகிமை சொல்லில் வருமா
சொல்ல வருமா

(இந்து....)

வடக்கின் தலை வாசல்
வானுயர்ந்த கனி மரங்கள்
வன்னியின் தலை நகராம் வவுனியா
எங்கள் வவுனியா

வவுனியா நகரின் மேற்கே
வளமான வயல்கள் சூழ
அவனியில் சிறந்த ஓரூர் பம்பைமடு
எங்கள் பம்பைமடு

(இந்து....)

**வேறு**

மந்தி கள் மரக் கிளையில்
மகிழ் வுடனே ஒன் றிணைந்து
குந்தி எழுந் தோடி மகிழ்ந் தாடும் - மான்
கன்றுகள் சிறுமியரோ டாடும்

குயிலி சைக்கும் வண் டிசைக்கும்
குருவி களின் தேனி சைக்கும்
மயிலி னங்கள் தோகை விரித் தாடும் - வான்
முகிலி னங்கள் தாளஜதி போடும்

**வேறு**

நெற் பயிர் நிறைந்த வயல்
நீர் நிரம்பி வழியும் குளம்
அற் புதமாய்க் காட்சிதரும் அல்லி - தேன்
அதரம் நிறை தாமரைப்பூப் பள்ளி

கனி மரங்கள் நிறைந்த காடு
கால்வழி பால் சொரியும் மாடு
வழி நெடுக நிழல்மரங்கள் உண்டு - இவ்வூர்க்கு
வகுத்திடவோர் உவமை எங்கு உண்டு

(இந்து....)

இசையமைப்பு :- திரு. அகிலன் சிவானந்தன் (அவுஸ்திரேலியா)

ஆடியவர் :- செல்வி சகானா கமலேந்திரன் (அரங்கேற்றம் - கனடா)

நடன அமைப்பு :- ஸ்ரீமதி வனிதா குகேந்திரன் (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்த நாளிலே...

அந்த நாளிலே எங்கள் ஊரிலே
ஆனந்தம் பொங்கி வழிந்ததே
எந்த நாளிலும் திங்கள் போலவே
எங்கள் வீடுகள் திகழ்ந்ததே.

(அந்த....)

எங்கள் குளங்களும் எங்கள் மனங்களும்
எல்லாம் நிரம்பி வழிந்ததே
எங்கள் காடுகள் எங்கள் களனிகள்
என்றும் விளைந்து பொலிந்ததே.

(அந்த....)

(வேறு)

எங்கள் காற்றிலே உயிர் இருந்தது
எங்கள் உணவிலே உழைப் பிருந்தது
எங்கள் உறவிலே அன்பி ருந்தது
எங்கள் தமிழிலே தமிழ் இருந்தது.

(அந்த....)

பசியில் வாடினோர் யாரும் இல்லையே
படுத்துச் சோம்பினோர் எவரும் இல்லையே
நசித்து வாழ்ந்தவர் யாரும் இல்லையே
நசிந்து நொந்தவர் எவரும் இலையே

(அந்த....)

காலைச் சூரியன் எம்மைக் கண்டுதான்
கரும மாற்றிட வானில்வந்தது
மாலைச் சூரியன் எமக்கு முந்தியே
மறைந்து சோர்ந்து போய் வீடடைந்தது

(அந்த....)

(வேறு)

காய்ச்சி உண்ணாத உணவு பலகண்டோம்
களங்கம் இல்லாத உறவு பலகண்டோம்
ஆய்ச்சி அப்புவில் அன்பு காட்டினோம்
அணைப்பில் மகிழ்ந்துநாம் அறிவை ஈட்டினோம்

(அந்த...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

வாழை இலையிலே குழையல்ச் சோறுண்டோம்
வடித்த கஞ்சியைக் குடித்து மகிழ்ந்திட்டோம்
ஓலைக் குடிசையில் கண்ட சுகத்தினை
உலகில் எங்குமே கண்ட தில்லையே

(அந்த....)

உண்ணும் சுகத்தினை உழைக்கும் சுகத்தினை
எண்ணி எண்ணியே இதயம் ஏங்குதே.
அண்ணன் தம்பிகள் அன்பை எண்ணியே
அந்த நாளினை உள்ளம் நாடுதே

(அந்த....)

✢✢✢✢✢✢✢✢✢✢✢✢✢✢



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவைப் போலே

எத்தனை உறவுகள் உலகத்திலே - இங்கு
எத்தனை பந்தங்கள் பாசத்திலே
அத்தனை உறவுகள் மத்தியிலும் - தந்தை
ஆயிரம் உறவுக்கு நிகராவார்

(எத்தனை உறவுகள்....)

**வேறு**

உண்டிட உணவுந் தந்து உடுத்திட உடையுந் தந்து
கண்ணினைக் காப் பதுபோல் காத்தாரே - எனக்குக்
கதைபல சொல்லித் தந்து வளர்த்தாரே

(எத்தனை உறவுகள்....)

தோளிலே தூக்கி வைத்துத் தொலை தூரம் காட்டியவர்
தன்னை விடஉயர நினைத் தாரே - உலகைத்
தரிசிக்க முதல் வழியைத் திறந்தாரே

(எத்தனை உறவுகள்....)

பள்ளிக்கு அனுப்பி வைத்துப் பாடம் படிக்க வைத்து
துள்ளித் திரிந்த எந்தன் துடுக்கடக்கி - என்னைத்
துயரங்கள் சூழாமல் தடுத் தாரே

(எத்தனை உறவுகள்....)

அப்பாவின் விரல் பிடித்து அவரோடு நடந்த காலம்
இப்போதும் நினைக்க மனம் இனிக்குதே....இதை
எப்போது நினைத் தாலும் சிலிர்க்குதே

(எத்தனை உறவுகள்....)

மடியிலே தூக்கி வைத்து மகிழ்வோடு அணைத்துக் கொஞ்சி
மனதினை வருடி விட்ட அப்பாவை - எந்த
நிலையிலும் மறக்க எம்மால் முடியாதே

(எத்தனை உறவுகள்....)

++++++++++++++



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தனை பிறவியிலும் தாய் நீயே

எத்தனை பிறவிகள் எடுப்போமோ - அம்மா
என்னென்ன பிறவிகள் எடுப்போமோ
அத்தனை பிறவியிலும் தாய்நீயே - இந்த
அரிய வரத்தைநீ தருவாயே
(எத்தனை .....)

வேறு

சேலையின் மணத்திலே நான் துயின்றேன் - உன்
சிறுவிரல் பிடித்து நான் நடை பயின்றேன்
காலையோ மாலையோ நான் அறியேன் - உன்
கண்களின் அணைப்பிலே நான் தவழ்ந்தேன்
(எத்தனை .....)

பாலிலும் வேறுமொரு அமுதம் உண்டோ - உன்
பார்வையின் வேறுமொரு சொர்க்கம் உண்டோ
காலினும் வேறுமொரு கடவுள் உண்டோ - உன்
கையினும் வேறுமொரு காவல் உண்டோ
(எத்தனை .....)

பாடியே நீயென்னைத் தூங்க வைத்தாய் - அந்தப்
பாட்டுக்கு இணையுமொரு பாட்டுமுண்டோ
ஓடியே பிடித்தென்னைச் சிரிக்க வைத்தாய் - இந்த
உலகத்தில் அதுபோலும் மகிழ்ச்சி யுண்டோ
(எத்தனை .....)

அள்ளியே அணைத் தென்னை முத்தமிட்டாய் - அது
ஆயிரம் கோடிபொன் ஆகு மன்றோ
பள்ளிக்கு அனுப்பிநீ மகிழ்ச்சி கொண்டாய் - வீட்டில்
பலபல கதைகளும் சொல்லித் தந்தாய்
(எத்தனை .....)

நானழு தால்மனம் பதை பதைப்பாய் - சிறு
நோயென்று படுத்திட்டால் நீ துடிப்பாய்
வானமு தம்என நீ புகழ்வாய் - என்னை
வாரி அணைப்பதிலே மனம் மகிழ்வாய்
(எத்தனை .....)

பத்தியம் இருந் தென்னைப் பெற்றெடுத்தாய் - உன்மேல்
பக்தியில் லாவிடில் பாவி யன்றோ
எத்தனை யாய் நன்றி சொல்லிடினும் - உன்
ஈடில்லா அன்புக்கு வார்த்தை உண்டோ
(எத்தனை .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்புக்கு இணையாய் ஓர் உறவுமுண்டோ...

**பல்லவி**

நட்புக்கு இணையாய் ஓர் உறவுமுண்டோ - உலகில்
நட்பின்றி மகிழ்வான வாழ்வு முண்டோ

**அனுபல்லவி**

உட்பகை வெளிப்பகை இல்லா திருப்பதும் - என்றும்
உளமொன்றி உதவி செய்வதும் நட்பே
(நட்புக்கு இணையாய்....)

**சரணம்**

மனம்விட்டுப் பழகஒரு நட்பு வேண்டும் - எந்த
மகிழ்விலும் துயரிலும் நட்பு வேண்டும்
உளங்கெட்டுப் போனாலும் திருத்து தற்கு - நல்ல
உறுதுணை யாய்ஒரு நட்பு வேண்டும்
(நட்புக்கு இணையாய்....)

பருவங்கள் மாறிமழை வற்றிப் போகும் - சில
தருணங்கள் மனைவிபிள்ளை வெறுத்துப் போகும்
கருமங்கள் பிழைத்தாலும் கலந்தே பேச - மனக்
கவலைகள் போக்கஒரு நட்பே வேண்டும்
(நட்புக்கு இணையாய்....)

உள்ளத்தில் எழுகின்ற அன் பினிலே - என்றும்
உருப்பெறும் நட்பு உண்மை யிதே
கள்ளத்தில் வளராது இந்தப் பயிர் - உண்மை
கலந்தநன் நீரினிலே செழிப் புறுமே
(நட்புக்கு இணையாய்....)

நல்லவர் நட்புக் கிடைப்ப தெல்லாம்....முன்பு
நாம்செய்த புண்ணியப் பேறு அன்றோ
இல்லவர் செல்வர்என் போர் யார்க்கும்....என்றும்
இனிமை தருவது நட்பு ஒன்றே.
(நட்புக்கு இணையாய்....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்காலம் நாசமாகும் - போதை

போதை தரும் பொருள் களிலே ஆசை வக்காதே - மனம்
பேத லித்து வாழ் விழந்து துன்பப் படாதே
பாதை கெட்டுப் போன பயணம் வீடு சேராதே - இதைப்
படிப் பினையாய்க் கொள் உடலைப் பாழ் படுத்தாதே
(போதைதரும்.....)

எதிர் காலம் நாச மாகும் எண்ணிடு தம்பி - உன்
எதிரி கட்கும் போதை வேண்டாம் சொல்லிடு தம்பி
புதிர் ஏதும் இல்லை இதைப் புரிந்திடு தம்பி - புது
மனிதனாக உலகை வெல்லப் புறப்படு நம்பி
(போதைதரும்.....)

போதை யினால் உன் உடம்பு வலிமை இழக்கும் - மனம்
பேத லிக்கும் உனை அடிமை ஆக்கிச் சிரிக்கும்
பாதை உண்டு வகுத்த வழி மறந்து விடாதே - கெட்ட
பாதை யிலே உடல் கருகிச் சுருண்டு விடாதே
(போதைதரும்.....)

மனதை மயக்கிக் கெட்ட வற்றைச் செய்திடத் தூண்டும் - தாய்
மனைவி என்ற பேதம் நீக்கி மகளையும் தீண்டும்
உனது எதிர் காலம் மட்டும் இருண்டு விடாது - உன்
உற்றார் பெற்றார் உறவு வாழ்வும் இருளினில் மூழ்கும்
(போதைதரும்.....)

கற்ற கல்வி மறந்து விடும் கடும்பிணி சேரும் - பின்
காலம் எல்லாம் அழு தழுது துயர்பட நேரும்
உற்ற செல்வம் தனை அழிக்கும் பிச்சை எடுத்தும் - உன்
உடம்பு கெட போதைப் பொருள் உடனடி தேடும்
(போதைதரும்.....)

மயக்கத் திலே மதி மயங்கித் தெருவிலே கிடப்பாய் - உன்
மாதா பிதா மனைவி மக்கள் துயரிலே கிடப்பார்
வியக்கத் தகும் சாத னைகள் செய்யப் பிறந்தாய் - போதை
வீரி யத்தால் வேத னையில் வாடி இறப்பாய்
(போதைதரும்.....)

✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடியைக் கெடுக்கும் குடி

குடியைக் கெடுக்கும் குடி என்றார் மறந்து விடாதே - எந்த
குற்றத் தையும் செய்யத் தூண்டும் குடி பழகாதே
செடிக்குத் தண்ணீர் ஊற்றி விட்டால் அது மரமாகும் - நீ
குடிக்கு அடிமை ஆகி விட்டால் உடல் விறகாகும்
(குடியைக்.....)

குடித்து விட்டு விழுந்து கிடந்தால் மானமே போகும் - அந்தக்
குடி யினிலே உனது பணம் வீணிலே போகும்
குடித்து உடலில் நோய்கள் வந்தால் குடும்பமே நாசம் - உன்
குழந்தை குட்டி மனைவி பெற்றோர் அழுகுரல் நீளும்
(குடியைக்.....)

பெற்ற தாயும் குடிக்கும் மகனை வெறுக்கவே செய்வாள் - தாலி
பெற்ற மனைவி கணவன் என்று மதிக்கவே மாட்டாள்
பெற்ற செல்லக் குழந்தை களும் எட்டி உதைக்கும் - உன்னை
பெற்ற குடும்பம் குடியி னாலே பெருமை இழக்கும்
(குடியைக்.....)

குடிக் காத போது நீயும் பார்த்த தில்லையோ - குடித்து
கூத் தடிக்கும் வெறியர் சேட்டை விளங்க வில்லையோ
அடிக்க வைக்கும் மனைவி யோடு பிள்ளை களுக்கும் - வெறி
அயல வர்க்கும் உறவி னர்க்கும் அருவருப் பாகும்
(குடியைக்.....)

மனைவி யிடம் திட்டு வாங்கி வாழ வேண்டுமோ - உன்
மானம் எல்லாம் போன பின்பும் வாழ வேண்டுமோ
அனைவ ருக்கும் கெட்ட வனாய் வாழ வேண்டுமோ - இன்றே
அடி யோடு மறந்து விட்டுக் குடும்பம் நடத்து
(குடியைக்.....)

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடியைக் கெடுக்கும் குடி - நடனப் பாடல்

[சிறுவர்கள் ஆடிப் பாடுகிறார்கள்]

சிறுவர்கள் :-
பாட்டுப் பாடுவோம்
கூட்டம் கூடுவோம்
பாலர் நாங்கள் ஒன்று சேர்ந்து
ஆட்டம் ஆடுவோம்

(பாட்டுப்...)

நாங்க ளெல்லாம் இந்த மண்ணில்
கடவுளின் பிள்ளை
நான் பெரிது நீ சிறிது
என்பது இல்லை

வானும் மண்ணும் காற்றும் வெயிலும்
எங்களின் சொந்தம்
மானும் மயிலும் கிளியும் குயிலும்
எங்களின் நண்பர்

பூனை நாயும் மாடும் முயலும்
சகோதரர் ஆகும்
தேனை உண்ணும் வண்டின் சத்தம்
சங்கீத மாகும்

நாளை இந்த உலக மெல்லாம்
எங்களின் கையில்
நானும் நீயும் மனது வைத்தால்
நானிலம் பையில்

(பாட்டுப்...)

(இரண்டு ஆண்கள் குடித்துவிட்டு வருகிறார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள் :-
அப்பா மாமா அறிவில் லாமல்
குடிப்பது முறையா
அநியாயமாய் உடம்பை நீங்கள்
கெடுப்பது முறையா

குடிப்ப தனால் நோய் வறுமை
குற்றம் வருமே
குடும்ப வாழ்க்கை சீர ழிந்து
குழப்பம் தருமே

குடித்துக் குடித்து உங்களை நீர்
கொல்லு கின்றீரே
குழந்தை களாம் எங்க ளையும்
கொல்லு கின்றீரே

குடியைக் கெடுக்கும் குடியை நீங்கள்
விட்டு விடுங்கள்
குடித்துத் திரியும் நண்பர் களையும்
திருத்தி விடுங்கள்

குடியை விட்டால் குடும்பம் உயரும்
குவலயம் வாழும்
குதூக லத்தில் குடும்பம் எல்லாம்
கோயிலாய் மாறும்

( பாட்டுப்...)

அழுது கொண்டு

குடியி னாலே செத்து விட்டால்
அனாதைக ளாவோம்
குடிக்கக் கஞ்சி உடுக்க உடை
இன்றி அலைவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

பிச்சை எடுக்கத் தெருத் தெருவாய்
அலைந்து திரிவோம்
பேச்சு அடி உதை வாங்கி
வீதியில் கிடப்போம்

அப்பா மாமா இருவரும் :

குடியைக் கெடுக்கும் குடியை நாங்கள்
விட்டு விடுகிறோம்
குழந்தை களைக் கொஞ்சி மகிழ்ந்து
இன்பம் காணுவோம்

உங்களை நாம் படிக்க வைத்து
உயர்ந்திடச் செய்வோம்
உழைக்கும் உழைப்பை அழித்தி டாமல்
குடும்பத்தைக் காப்போம்

எல்லோரும் :

குடியைக் கெடுக்கும் குடி அகன்றது
குதூகல மானோம் - இனிக்
குடும்பத் திலே எந்த நாளும்
கொண்டாட் டந்தானே

(பாட்டுப்...)

*************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பம் ஒரு கோயில்

ஒற்று மையாய் ஒன்று பட்டு வாழுங்கள் - குடும்பம்
ஒன்றே உங்கள் கோயில் என்று உணருங்கள்
வேற்று மைகள் வெறுப்புக் களை மனதிலே - என்றும்
வீணாக வளர்த்தி டாது பாருங் கள்
(ஒற்று மையாய்.....)

குறை களையே எண்ணி மனம் குமையாமல் - செய்த
குற்றங் களைத் திரும்பத் திரும்ப எண்ணாமல்
நிறை களையே எந்த நாளும் நினையுங்கள் - மிக
நீண்ட காலம் வாழ வழி பண்ணுங்கள்
(ஒற்று மையாய்.....)

மாமன் மாமி சுற்றத் தோடு மகிழுங்கள் - நல்ல
மைத் துனர்கள் உறவு களை மதியுங்கள்
நான் எனது என்ற நிலை மறவுங்கள் - என்றும்
நாம் எமது என்ற நினை வாகுங்கள்
(ஒற்று மையாய்.....)

தனித் தனியாய்ச் சுகமு மில்லை உணருங்கள் - பணமும்
தனித் தனியாய் இல்லை என்ப தறியுங்கள்
கனித்த பழமும் சாறும் போல வாழ்விலே - என்றும்
இனித்த நிலை இல்ல றத்தைக் காணுங்கள்
(ஒற்று மையாய்.....)

கோபம் ஒரு பகலோடு முடி யட்டும் - அந்தக்
கோபம் தீர இரவு வரும் உணருங்கள்
சாபம் அல்ல வாழ்க்கை இது வரமென்றே - நம்பி
சரி சமமாய் ஒற்று மையாய் வாழுங்கள்
(ஒற்று மையாய்.....)

இல் லறமே நல் லறமாம் என்பதை - என்றும்
இத யத்திலே பதிய வைத்து வாழுங்கள்
நல் லறத்தின் பேறாம் பிள்ளைச் செல்வத்தை - மிக
நல்ல படி வளர்த் துலகை வெல்லுங்கள்.
(ஒற்று மையாய்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊனம் என்று சொல்கிறார்கள்

### பல்லவி

ஊனம் என்று சொல்கி றார்கள்
ஊனம் இல்லார் யாருண்டு
உலகிலுள்ள மனிதர் யாரும்
ஊனம் உள்ள பிறவியே

### அநுபல்லவி

உறுப்புக்களின் குறைபாடா ஊனம் என்பது
உள்ளங்களின் குறைபாட்டை என்ன சொல்வது
உருப்படாத மனிதர்களின் வெற்றுப் பேச்சிலே
உலகில்பலர் வாடுகிறார் ஊனம் குறைவென்று

### சரணம்

கோபத்திலே மனிதரெல்லாம் ஊனம் ஆகிறார் - கொண்ட
கொள்கைமாறிப் போகையிலே ஊனம் ஆகிறார்.
ஆபத்திலே கைவிட்டோரும் ஊனம் ஆகிறார் - அற்ப
ஆசையினால் மனிதரெல்லாம் ஊனம் ஆகிறார்
(ஊனம் என்று....)

அறிவினிலே தெளிவில்லாதோர் ஊனம் ஆகிறார் - தம்
ஆணவத்தால் உலகில்பலர் ஊனம் ஆகிறார்
உழைத்துவாழத் தெரியாதோர் ஊனம் ஆகிறார் - பிறர்
உழைப்பைஉறிஞ்சி வாழ்பவர்கள் ஊனம் ஆகிறார்

மதுவினிலே மயங்கியவர் ஊனம்ஆகிறார். - ஆண்,பெண்
மயக்கத்திலே கலங்கியவர் ஊனம் ஆகிறார்
பொதுவினிலே பலரும்தினம் ஊனம் ஆகிறார் - இதைப்
புரிந்துகொள்ளார் ஊனமென்று பிறரைச் சொல்கிறார்
(ஊனம் என்று....)

இரக்கமில்லா மனம்படைத்தோர் ஊனம் ஆகிறார் - பிறரை
இழிவுபடுத்திப் பேசுபவர் ஊனம் ஆகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கரில்லா இவ்வுலகில் அரக்கர்க ளாக - இன்று
அனுதினமும் பலர்மனத்தால் ஊனம் ஆகிறார்

அன்னைதந்தை தமைமறந்தோர் ஊனம் ஆகிறார் - அணைக்கும்
அன்புமனைவி தனையடிப்போர் ஊனம் ஆகிறார்
உண்மைஅறிவை ஊட்டிவளர்க்கும் உத்தமர் ஆன - குருவை
உதாசீனம் செய்பவர்கள் ஊனம் ஆகிறார்
(ஊனம் என்று....)

பெண்ணைக்கெடுக்கும் பித்தரெல்லாம் ஊனம் ஆகிறார் - வெறும்
பெயருக்காக அலைபவர்கள் ஊனம் ஆகிறார்
கண்ணைவிற்றுச் சித்திரத்தை வாங்குவோர் போல - தம்
கடமைமறந்து புகழுக்கலைவோர் ஊனம் ஆகிறார்

பொய்யும்புரட்டும் நிறைந்தவர்கள் ஊனம் ஆகிறார் - தினம்
பொன்பொருட்காய் அலைபவர்கள் ஊனம் ஆகிறார்
செய்யும்களவி னால்மனிதர் ஊனம் ஆகிறார் - மனத்
தீராப்பகை பொறாமைகொள்வோர் ஊனம்ஆகிறார்
(ஊனம் என்று....)

இலஞ்சம்வாங்கும் ஊழியர்கள் ஊனம் ஆகிறார் - சாதி
இழிவுபேசும் யாவருமே ஊனம் ஆகிறார்
நெஞ்சினிலே இரக்கமின்றிச் சீதனம் கேட்டு - பெண்ணை
இழிவுபடுத்தும் யாவருமே ஊனம் ஆகிறார்

சமயச்சண்டை பிடிப்பவர்கள் ஊனம் ஆகிறார் - சமூக
ஏற்றத்தாழ்வு பேசுபவர் ஊனம் ஆகிறார்
குமையும்மனப் பொறாமைகொண்டோர் ஊனம் ஆகிறார் - பிறரைக்
குற்றஞ்சொல்லி வாழ்பவர்கள் ஊனம் ஆகிறார்.
(ஊனம் என்று....)

உடலினிலே குறையிருந்தால் ஊனமே இல்லை - இறைவன்
மாற்றுத்திறன் கொடுத்திருப்பான் ஊனமே இல்லை
மனதினிலே குறையிருந்தால் பலருக்குக் கேடு - அவரே
மண்ணிலென்றும் ஊனமுற்றோர் என்றிடும்நாடு.
(ஊனம் என்று....)

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச தொழில் சார் கிராமியப் பாடல்

### விவசாயம்

ஏரு பூட்டிக் காத்திருக்கோம் மாரியம்மா - என்றும்
எங்க ஊரு செழிக்க வேணும் மாரியம்மா
காரு பாத்த வேளாளர் நாங்களம்மா - எங்க
கஷ்ட மெல்லாம் நீங்க வேணும் மாரியம்மா

தந்தானானே தானானானே தந்தானானே....
தந்தானானே தானானானே தந்தானானே.....

(ஏரு பூட்டி ....)

செங்காரி திமில நாம்பன் தொழுவத்திலே - சும்மா
செருக்கேறிக் கிடக்குதம்மா உழவு இல்லே
பங்காளி கூட்டாளி விதை நெல்லுக்காய் - எங்கும்
பறக்கிறாரே பாக்கல்லையோ மாரி யம்மா

(ஏரு பூட்டி ....)

### வேறு

இடி இடிக்கணும் மின்னல் மின்னணும்
இருட்டி வானம் கறுத்து வரணும்

தந்தானானே தானானானே தந்தானானே....
செடி கொடிகள் மரங்கள் எல்லாம்
சிலிர்த்து நிமிர்ந்து செழித்து நிக்கணும்

தந்தானானே தானானானே
தந்தானானே தானானானே

### வேறு

மாரி மழை பெய்யவேணும் மாரியம்மா - இந்த
மண்ணெல்லாம் செழிக்கவேணும் மாரியம்மா
மாரியம்மா... மாரியம்மா....
மாரியம்மா.... மாரியம்மா...

(ஏரு பூட்டி ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

வார்க் கயிறு பின்னி வச்சோம்
வள்ளக் கையத் திருத்தி வச்சோம்
ஊர்க் குளத்தில் தண்ணி யில்லே
உள்ளத்திலே கருணை இல்லையோ

**வேறு**

சந்திரரே சூரியரே
சாமி பகவானே
இந்திரரே வருணதேவா!
இப்ப மழை பெய்யவேணும்

மாரியாத்தா காளியாத்தா
மாரிமழை பெய்யவேணும்
காரியங்கள் எல்லாமுமே
கைகூடி வரவேணுமே

மாரியம்மா.... மாரியம்மா ....
மாரியம்மா.... மாரியம்மா ....

**வேறு**

ஆறு குளம் நிறம்ப வேணும்
அனைவருமே வாழ வேணும்.
சோறு போடும் எங்கள் தொழில்
சோர்வில் லாமல் நடக்க வேணும்

தந்தானானே.... தானானானே
தந்தானானே.... தானானானே

**தாலாட்டு**

**வேறு**

அத்த அடிச்சாவோ
அமுதூட்டும் கையாலே
பெத்தா அடிச்சாவோ
பிரியமுள்ள கையாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கி விக்கித் தேம்பாமல் - என்ர
வித்தகனே கண்ணுறங்கு

ஆச்சி அடிச்சாவோ
அணைத் தெடுக்கும் கையாலே
பேச்சி அடிச்சாவோ
பிள்ளை யுந்தன் கனவினிலே

ஆரிரோ.... ஆரிரோ - ஆரிரோ.... ஆராரோ

**பக்தி**

**வேறு**

ஆடுவோமே நாங்கள் பாடுவோமே
ஆறு முகன் கோவிலிலே பாடுவோமே
பாடிப் பரவசம் ஆகுவோமே
பக்தி உணர்வினிலே கூடுவோமே
(ஆடுவோமே.....)

**வேறு**

காட்டு உலுவிந்தங் கேட்டி வெட்டி
கச்சைத் தலைப்பாகை வேட்டி கட்டி
பாட்டுப் பாடிக் கோல் ஆடுவோமே - நாம்
பால முருகனைத் தேடுவோமே

**மீனவர்**

**வேறு**

ஏலேலோ.... ஐலசா.... ஏலேலோ....
ஏலேலோ ஐலசா.... ஏலேலோ

அலையடிக்கிற கடல்ல போற மச்சானே - தினம்
அலைகளோட போராட வைச்சானே
ஆண்டவன் வைச்சானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

கடலு மேல போனா லென்ன
காற்றும் மழையும் பெஞ்சாலென்ன
கடலம்மா காப்பாற்றுவா
தங்கமே தங்கம் - நீ
கலங்கிடாமே இருக்கவேணும்
தங்கமே தங்கம்

**வேறு**

மீன் பிடிப்போம் நண்டு பிடிப்போம்
இறால் கணவாய் நாம் பிடிப்போம்
மழை வெயிலைப் பாக்க மாட்டோம்
பகல் இரவு பாக்க மாட்டோம்

அயராது உழைக்கின்ற வர்க்கமம்மா - எமக்கு
அம்மாவாம் கடல்தானே சொர்க்கமம்மா

தெய்யாரோ தெய்யா தெய்யாரோ
தெய்யாரோ தெய்யா தெய்யாரோ
தெய்யாரோ தெய்யா தெய்யாரோ

**வேறு**

முத்து விளையுது சங்கு விளையுது
முழுப் பவளம் நீரில் விளையுது
பயிரிடாமே அறுவடையாம்
பலருமிங்கே வருகிறாரே
ஏலேலோ.... ஏலேலோ.... ஏலேலோ.... ஏலேலோ

இசையமைப்பு :- கலாபூஷணம் திருமதி தேவி மனோகரி நாகேஸ்பரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன விதியோ இது என்ன சதியோ...

என்ன விதியோ - இது
என்ன சதியோ
என்ன பழியோ - இனி
என்ன வழியோ

(என்ன விதியோ....)

கடலே!....
உன்னைத் தேடி நாங்கள் வந்தோம்
ஊரெல்லாம் செழித்தது
எம்மைத் தேடி நீ வந்தாய்
ஊரெல்லாம் அழிந்தது

வலைகள் வீசி மீன் பிடித்தோம்
வாழ்வு தேடி கடலில் சென்றோம்
அலைகள் வீசி ஏன் பிடித்தாய்
அரிய உயிரை ஏன் பறித்தாய்

(என்ன விதியோ....)

என்ன பழி தீர்த் தாயோ
எங்கள் வழி தூர்த் தாயோ
உன்னை வெல்ல முடியா தென்ற
உண்மை காட்டப் பார்த் தாயோ

தாயின் பாலே நஞ் சானால்
சேய்கள் நிலை என் னாகும்
தாயின் கையே கொல்ல வந்தால்
சேய்கள் நிலை என் னாகும்

(என்ன விதியோ....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலே! கடலே! கதறி அழு! ...

கடலே கடலே கதறி அழு
கரையில் மோதிப் பதறி அழு
(கடலே கடலே...)

**வேறு**

நீ செய்த பாவம் நீங் காத சோகம்
யார் வந்து தேற்ற யார் இதை மாற்ற
(கடலே கடலே....)

**வேறு**

பெரியவர் சிறியவர் பிள்ளைகள் தாய்மார்
உரியவர் உறவுகள் உன்வச மாச்சே

வீடுகள் வீதிகள் உன்உண வாச்சே
விடுதிகள் பள்ளிகள் உன்உண வாச்சே
(கடலே கடலே....)

**வேறு**

வைத்திய சாலையை நீ வழித் துண்டாய்
பைத்திய மோகடலே பழி தீர்ந்து போச்சோ
(கடலே கடலே...)

**வேறு**

அம்மா! என்றே அலறிய பிள்ளை
ஐயோ! என்றே அலறிய பெரியோர்

ஆண்டவா என்றே அழைத்தனர் பலபேர்
அலையாம் கரத்தினால் அள்ளிச் சென்றாயே
(கடலே கடலே...)

அடுக்குமோ உனக்கு அன்னைஎன்றார் உன்னை
அழிவுச் செயல்செய்து அரக்கியாய் ஆனாய்

அரக்கிகள் கூட அழிக்கார்தம் மகவை
ஐயோகடலே உன்னை என்னென்று சொல்ல
(கடலே கடலே...)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகளங்கன்**

## கோரக் கொடுங் கடலே...

கோரக் கொடுங் கடலே - உன்
குணமிது தானோ கொடுங்கடலே
(கோரக் .....)

வாரி வழித் துண்டாய் - உன்
வயிறாரப் பசி தீர்த்தாய்
(கோரக் .....)

குஞ்சு குமர் பார்த்தாயோ
கூனல் கிழம் பார்த்தாயோ
அஞ்சி அஞ்சி ஓடியவர்
அவலங் களைப் பார்த்தாயோ
(கோரக் .....)

**வேறு**

ஊன் உயிரை நீ பிரித்தாய்
உறவு களை நீ பறித்தாய்
நாம் தவழ்ந்த கரை மேலே
நச்சு வலை ஏன் விரித்தாய்
(கோரக் .....)

நிலம் நடுங்க நீ நடுங்கி
நீண்ட தூரம் ஓடி வந்தாய்
உளம் நடுங்க உயிர் நடுங்க
ஓல மிட்டோம் கொண்டு சென்றாய்

சுனாமி என்னும் பேரலை யால்
சொந்தங் களை நீ பறித்தாய்
அனாதை களாய் எம் மவரை
ஆக்கி விட்டாய் கொடுங் கடலே
(கோரக் .....)

++++++++++++++



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறிய பிஞ்சு உன்னை வேண்டினேன்

கரையில் நாங்கள் துள்ளிக் குதித்து ஆடினோம் - அலைகள்
காலை வந்து முத்தமிட ஓடினோம்
அலைகள் வந்து கால் கழுவிச் சென்றதே - எங்கள்
அங்க மெல்லாம் பூரிப்பில் வென்றதே
(கரையில்....)

நண்டு களைத் துரத்தி விளை யாடினோம் - அலைகள்
கொண்டு செல்லக் கப்பல் விட்டுப் பாடினோம்
கண்டெ டுத்துச் சிப்பி சோகி பொறுக்கினோம் - கரையில்
கால் நனைய ஓடி ஓடிச் சறுக்கினோம்
(கரையில்....)

கோப முற்ற அலைகள் வந்து அடித்ததே - அந்தக்
கோரத் தினைப் பார்த்து நெஞ்சு வெடித்ததே
ஆபத் தினை அறி யாத சிறுவரை - சுனாமி
அலை அடித்துக் கொன்ற தையோ இறைவனே
(கரையில்....)

என்ன பிழை நாங்கள் செய்தோம் சுவாமியே - எங்கள்
இன்னு யிரைப் பறித்த தையோ சுனாமியே
அன்னை தந்தை வீடுவாசல் இழந் திட்டோம் - எங்கள்
ஆசி ரியர் பள்ளிக்கூடம் இழந் திட்டோம்
(கரையில்....)

என்ன வழியில் எம்மைக் காக்கப் போகின்றாய் - இறைவா
இரக்க மின்றி நீ இருத்தல் முறைதானா?
சின்னஞ் சிறிய பிஞ்சு உன்னை வேண்டினேன் - இனிச்
சீற்ற மின்றி எம்மைக் காத்து அருளுவாய்
(கரையில்....)

இசையமைப்பு :- திரு.சோ.ஜெயச்சந்திரா

ஆடியவர் :- செல்வி லக்ஷிகா கருணாகரன் (அரங்கேற்றம்)

நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமத்துவமாய் புதியதோர் உலகம் படைப்போம்

எங்கள்....
கண்ணீரைச் சுமந்து மேகம் மழை பொழிந்தது - எந்தக்
கடலிலேயோ அதுவிழுந்து வீணாய்ப் போனது
எங்கள்....
வியர்வை நீரே பலருக்கிங்கு வாழ்வாய் ஆனது - என்ன
விதியோ எங்கள் வாழ்வுமட்டும் பாழாய் ஆனது.

(எங்கள்....)

மழை வெயிலைத் தாங்கவீடு கட்டிக் கொடுத்தோம் - நாங்கள்
மண்குடிசை கூடஇன்றி வாழ்வைக் கெடுத்தோம்.
மானம் காக்க ஆடையைநாம் நெய்து கொடுத்தோம் - நம்
மானம் காக்க ஆடையின்றி குறண்டிப் படுத்தோம்

(எங்கள்....)

கை வலிக்கக் காடுவெட்டிக் களனி சமைத்தோம் - நாங்கள்
கஞ்சிக் குமே வழியில்லாமல் கலங்கித் துடித்தோம்
கிணறு வெட்டிக் கட்டிக்கொடுத்து மகிழ்ச்சி அடைந்தோம் - தண்ணீர்
கிடைத் திடாமல் அலைந்தலைந்து நாக்கு வறண்டோம்.

(எங்கள்....)

எங்கள் வாக்கில் எங்கள்அரசை நாங்கள் அமைப்போம் - பின்பு
எமக்கு ஒன்றும் கிடைக்காமலே நாங்கள் திகைப்போம்.
எங்கள் உழைப்பு இல்லாதிந்த உலகமும் இல்லை - ஆனால்
எங்கள் பசி தீரஇங்கு வழியுமோ இல்லை.

(எங்கள்....)

என்னஇது என்னஇது என்ன நீதியோ - உலகம்
எங்க ளுக்கு எந்தநாளும் செய்யும் அநீதியோ
உண்ண உடுக்க வாழஒரு வழியை அமைப்போம் - நாங்கள்
ஒற்றுமையாய் உலகின்பெரு விழியைத் திறப்போம்.

(எங்கள்....)

இத்தனைநாள் பட்டதுன்பம் இனிப்பட மாட்டோம் - எந்த
ஏமா ற்று மோசடிக்கும் உடன்பட மாட்டோம்
தத்து வமாய் ஒன்றையிந்த உலகுக் குரைப்போம்....யாவும்
சமத்து வமாய் புதியதொரு உலகைப் படைப்போம்.

(எங்கள்....)

✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளரும் சின்ன றாஜாக்கள்

[ சிறுவர் அபிநயப் பாடல் ]

வாசம் உள்ள றோஜாக்கள்நாம்
வளரும் சின்ன றாஜாக்கள்
பாசம் உள்ள பெரியோரே
பக்குவமாய் இதைக் கேளும் (வாசம்....)

எங்கள் உரிமை என்னவென்று
எங்க ளுக்குத் தெரியாது
எங்கள் வாழ்வு என்னவென்றும்
உங்க ளுக்கும் புரியாது (வாசம்....)

வேறு

அநாதை யாக விட வேண்டாம்
அடிமை யாக வளர்க்க வேண்டாம்
அடித்துப் பேசி எங்கள் அறிவை
அரை குறையாய்க் குறைக்க வேண்டாம்

எங்கள் சிரிப்பு உலகின் சிரிப்பு
எங்கள் அழுகை உலகின் அழுகை
எங்கள் வாழ்வு உங்கள் கையில்
உங்கள் வாழ்வு எங்கள் கையில்

நாளை உலகை நாம் அமைப்போம்
நல்ல பாதை நாம் சமைப்போம்
நாளை மண்ணில் சண்டை இல்லை
நன்மை இன்றித் தீமை இல்லை

அன்பு காட்டி அறிவை ஊட்டி
அணைத்து எம்மை வள ருங்கள்
துன்பம் எங்கள் நிழலைக் கூடத்
தொட விடாது துரத் துங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

கொஞ்சி மகிழ விரும்பும் எம்மைக்
கூலி வேலைக் கனுப்ப வேண்டாம்
பிஞ்சுக் கையை நீட்டி எம்மைப்
பிச்சை எடுக்க விடவேண்டாம்

படிக்க எம்மை அனுப்பி வைத்துப்
பாதை திறந்து காட்டுங் கள்
துடிக்கும் இதயம் எங்க ளுக்காய்
சிறிது துடிக்க நினை யுங்கள் (வாசம்...)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறகு முளைக்கும் பறவைகள்

**[சிறுவர் அபிநயப் பாடல்]**

சின்னஞ் சிறிய சிறுவர்கள்
சிறகு முளைக்கும் பறவைகள்
பென்னம் பெரிய உலகைக் காணப்
பிறந்து வந்த உறவுகள்

ஒன்றாய் வந்து கூடுவோம்
ஒற்று மையாய் ஆடுவோம்
நன்றாய் வாழ நமக்குஒரு
நல்ல உலகம் ஆக்குவோம்

நாங்களே தான் மன்னர்கள்
நாங்களே தான் மக்களாம்
நாங்கள் நடத்தும் அரசிலே
நலிவுமெலிவு குறை யில்லை

எங்கள் உலகம் புதுவிதம்
எங்கள் வாழ்வு புதுரகம்
எங்கள் இதயம் ஏற்றத்தாழ்வு
ஏதும் இல்லாத் தனிரகம்

எல்லோ ருக்கும் ஒரேநீதி
எல்லோ ருக்கும் ஒரேநியதி
ஏழை செல்வன் பேதைமேதை
எல்லோ ருக்கும் சமவாய்ப்பு

(சின்னஞ் சிறிய....)

**வேறு**

விரும்பி யதை நாம் கற்போம்
விரும்பி யபோல் தொழில் செய்வோம்
விரும்பி நாங்கள் யாரும் ஒன்றாய்
வேற்று மைகள் இன்றி வாழ்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் உலகில் சாதி இல்லை
எங்கள் உலகில் சண்டை இல்லை
எங்கள் உலகில் எவரும் எவரை
ஏ மாற்றிப் பிழைப்ப தில்லை

எங்கள் உலகில் பஞ்ச மில்லை
எங்கள் உலகில் பசியு மில்லை
எங்கள் உழைப்பை எவரும் பறித்து
ஏப்பம் விடும் கொடுமை யில்லை

(சின்னஞ் சிறிய....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிக்கும் முல்லைகள்

[சிறுவர் அபிநயப் பாடல்]

சிரிக்கும் முல்லைகள் நாம் - தேசமெங்கும்
இருக்கும் பிள்ளைகள் நாம்
இன்று நாங்கள் ரோஜாக்கள்
நாளை நாங்கள் ராஜாக்கள்

(சிரிக்கும் .....)

வேறு

இன்று போல என்றும் நாங்கள்
இன்ப மாக வாழுவோம்
கன்று போலத் துள்ளிக் குதித்துக்
கவலை இன்றி ஆடுவோம்

(சிரிக்கும் .....)

புத்தம் புதுப் பூக்கள் நாங்கள்
புதிய உலகை ஆக்குவோம்
யுத்தம் அற்ற உலகை ஆக்கி
யுகப் புரட்சி செய்குவோம்

(சிரிக்கும் .....)

ஏழை இல்லை அடிமை இல்லை
ஏற்றத் தாழ்வு இல்லையே
வாழ வைத்து வாழ்த்து வோம்
வாழ்ந்து உலகை மாற்றுவோம்

(சிரிக்கும் .....)

இசையமைப்பு : திரு.சோ.ஜெயச்சந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்தமே வசந்தமே....

வசந்தமே வசந்தமே
வருக மீண்டும் வருகவே

கசந்து போகும்
காலம் மாறிக்
களிப்பு மிகுந்து பொங்கவே

( வசந்தமே...)

நிலவைக் காட்டச்
சோறு உண்டு
உலவத் தந்தை
தோளில் ஏறி

நிம்ம தியைப் பரிசு பெற்று
நிமிர்ந்து தவழ்ந்து நடந்து திரிந்த

(வசந்தமே...)

துள்ளி ஓடிப்
பள்ளி சென்று
துரத்திப் பிடித்துப்
புரண்டு விழுந்து

கள்ள மில்லா மனத் தினிலே
கவலை துன்பம் கஷ்டம் மறந்த

(வசந்தமே...)

காதல் உணர்வு
மனதில் பொங்க
கண்கள் எங்கும்
அலைந்து திரும்ப

காவி யங்கள் படித்துத் திரிந்து
காலை மாலை இன்பம் பொங்கும்

( வசந்தமே...)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை இந்த நிலை மாறும்....

**[ஏழைத் தொழிலாளியின் நம்பிக்கைப் பாடல்]**

எங்கள்
கண்ணீரின் உப்புச் சென்று கடல் சேர்ந்தது - உடல்ச்
செந்நீரில் தோய்ந்து மாலை சிவப் பானது
பன்னீரைக் கேட்ட துண்டு கண்ட தில்லையே - இன்பம்
தண்ணீரில் எண்ணெய் சேர்ந்த தன்மை யானதே
(எங்கள்....)

துன்பம் எங்கள் இனத்துக்கு உடன் பிறப்பு - பசித்
துயரம் எங்கள் இனத்துக்குத் தாய் மடியே
இன்பம் எங்கள் கண்களுக்கு வான வில்லு - வறுமை
இழிவு எங்கள் எல்லோருக்கும் நல்ல மனைவி
(எங்கள்....)

வீடு ஆடை உணவு இல்லை இது விதியோ - இந்த
விதிதனை மாற்று தற்கு இல்லை மதியோ
பாடுபட்ட கைகள் தேய்ந்தும் பயன் இல்லையே - எம்மைப்
பார்த் திருந்து ஏய்ப்பாரின்னும் மாற வில்லையே
(எங்கள்....)

ஏழை எங்கள் கைகளுக்கும் வலிவு உண்டு - பலர்
ஏணி யாக ஏறிவிட்டார் எம்மைக் கொண்டு
நாளை இந்த நிலைமாறும் உண்மை இதுதான் - இந்த
நானி லத்தில் அந்தநாளில் எல்லாம் பொதுதான்
(எங்கள்....)

உழைக்கும் எங்கள் கைகள்ஒன்று சேர்ந்திடும் நாளை - இந்த
உலகம் நம்மைப் புரிந்துகொள்ளும் அன்றைய வேளை
வளைத்த இருள் மாறி ஒளி வானில் தெரியும் - அன்று
வாழ்வோம் எங்கள் சக்தி பற்றி உல கமறியும்
(எங்கள்....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளெல்லாம் திருவிழா

### [நடனம்]

சிறுமி :-

நா ளெல்லாம் திரு விழா
நமது வீடு கோவி லாம்
வானம் பூமி வாழ்த் திசைக்கும்
வாழ்க என்று பாட் டிசைக்கும்

கண் ணீரைக் கண்ட தில்லை
கடும் பேச்சைக் கேட்டதில்லை
எண்ணத் திலே கள்ள மில்லை
இன்ப மன்றித் துன்பமில்லை

வெயிலுக்கும் மழைக்கும் நன்றி சொல்வோம்
வேதனை எமக்குத் தந்ததில்லை
குயிலுக்கும் மயிலுக்கும் நன்றி சொல்வோம்
குதூகலம் தந்ததில் குறைச்ச லில்லை

கடலலை காலைக் கழுவியே செல்லும்
காற்றலை உடலைத் தழுவியே செல்லும்
கடற்கரை மணலைத் தோண்டி எடுத்து
தண்ணீர் அள்ளியேதெளித் திடுவோம்

சிட்டுக் குருவிக்குப் பாடங்கள் சொல்லியே
சீட்டி அடித்துநாம் மகிழ்ந்திடுவோம்
பட்டிப் பசுக்களில் பாலைக் குடித்தே
பசுவைத் தாயாய் அன்பு செய்வோம்

**வேறு**

தென்னை பனை மரங்களிலே
தென்ற லிசை பாடிவரும்
அன்னை தந்தை அணைப் பினிலே
அற்பு தங்கள் கோடிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்க ளெல்லாம் மகிழ்ச்சி யோடு
புன்ன கைத்து கண் சிமிட்டும்
பார்க்கப் பார்க்க அழகு எங்கள்
பரம் பரைத் தாய்த் தமிழகம்

**வேறு**

தென்னையும் பனையும் செறிந்து வளர்ந்த
திருநாடே எங்கள் தாயகம்
அன்னையும் தந்தையும் பரம்பரை யாக
அளைந்தமண் நிறைந்த யாழகம்

வடலிகள் வளர்ந்து பனைமர மாகி
வாழ்வின் பாடங்கள் எமக்குச் சொல்லும்
தென்னைகள் வளர்ந்து பாளை வந்தாலே
இன்னொரு குமரெனும் எமதுபண்பு

அப்பா அம்மா தெய்வங்க ளாகும்
அண்ணா தம்பி சொந்தங்க ளாகும்
எப்போ தும்மனம் மகிழ்ந் திருக்கும்
எல்லார் மனமும் நிறைந்திருக்கும்

தென்றலே வந்து தொட்டால் கூட
தாங்கமாட்டாரே என் அம்மா
தேவதை போல எங்களின் வீட்டில்
வலம்வரு வாரே என்அம்மா

கண்ணிலே சிறிய தூசிபட் டாலே
தாங்கமாட் டாரே என் அப்பா
கண்ணனைப் போல கீதைகள் சொல்லித்
தூங்க வைப்பாரே என்அப்பா

பச்சைக் கிளிஎன்னைப் பார்த்தால் கூட
தாங்க மாட்டாரே என் அண்ணா
பாய்ந்தே சென்றதைக் கலைக்காது விட்டால்
தூங்கமாட் டாரே என்அண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

எங்கள் வீடு சொர்க்க மாம்
எங்கள் வாழ்வு இன்ப மாம்
அன்பு பாசம் எங்கள் சொத்து
அம்மா அப்பா எங்கள் தெய்வம்

(எங்கள் வீடு....)

அக்கா தம்பி அண்ணன் தங்கை
அத்தான் அத்தை மாமா மாமி
தாத்தா பாட்டி உறவு களே
தங்க மான மனசு களே

பனை மரங்கள் எங்கள் சொந்தம்
பறவைக் கூட்டம் எங்கள் நண்பர்
வான் நிலாவும் எங்கள் சொந்தம்
வாசல் வரும் கதிரும் சொந்தம்

நீர் நிலைகள் நிழல் மரங்கள்
நிமிர்ந்த தென்னை மா மரங்கள்
தோட்டம் துரவு வயல் நிலங்கள்
துலா படலை அதி சயங்கள்

மலர்ந்த பூக்கள் கனிந்த பழங்கள்
மகிழ்ச்சி பொங்க உலவும் தென்றல்
எல்லாம் எங்கள் உறவு களே
என்றும் இல்லை பிரிவு களே

ஆடு மாடு பூனை நாயும்
அம்மா போல அன்பு காட்டும்
கோழி குருவி குயிலும் மயிலும்
குடும்ப உறவாய்க் குதூக லிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற் கரையில் ஓடு வோம்
கால் நனைத்து ஆடு வோம்
வடலி பனைக் காடு களில்
வளைந்து நெளிந்து ஓடு வோம்

பாட சாலை கோயில் களாய்ப்
பரந்த தெங்கள் யாழ கம்
ஆட லோடு பாடல் கலை
அனைத்தும் நிறைந்த தாய கம்

உச்சி வெயிலும் சுடுவ தில்லை
உலர்ந்த மணலும் சுடுவ தில்லை
அச்ச மில்லை எங்கள் வாழ்வில்
ஆனந் தமே குறைவ தில்லை

அன்றில் களாய்ப் பிரிவில் லாத
அருமை யான அம்மா அப்பா
கன்று போலத் துள்ளிக் குதித்து
கட்டி அணைத்து மகிழு வோம்

**வேறு**

எங்கள் யாழ கத்திலே
என்ன இல்லை பாருங்கள்
எங்கள் வாழ்வில் துன்பம் வர
ஏது வழி கூறுங்கள்

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினம் தினம் புது உறவுவரும்

தினம் தினம் புது உறவு வரும்
திரு மணம் என தினம் பொலியும்
பெருத்த மனதுடனே - இறை
கொடுத்த உறவுடனே - தினம்
ஆடி மகிழ்ந் திடுவோம் - தமிழ்
பாடி மகிழ்ந் திடுவோம்.

**வேறு**

தேன் மலர் களில் வண்டு வரும்
பால் பசுக்களின் கன்று வரும்
நடித்து மகிழ்ந் திடுவோம் - கூழ்
குடித்து மகிழ்ந் திடுவோம் - பனங்
காட்டு வெளிகளிலும் - பயிர்த்
தோட்ட வயல்களிலும் - தினம்
கூடிக் குதித்திடுவோம் - தமிழ்
பாடிக் களித்திடுவோம்

**வேறு**

வளம் மிகுந்த நம் யாழகமே - தினம்
வளர் கலைகளின் தாயகமே
எழில் மிகுந்த நம் சோலைகளே - எங்கும்
எழுந் துயர்ந்திடும் பனைமரமே
இயற்கை அழகினிலே - மனம்
எழுச்சி அடைந்திடுமே - புது
உணர்ச்சி வளர்ந்திடுமே

கடல் அலைகளும் நமதுறவே
கதிர் வயல்களும் நமதுறவே
பனை வடலிகள் நமதுறவே
பழ மரங்களும் நமதுறவே
படித்த மனிதர்களும் - தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்த மனிதர்களும்
நிறைந்த எமதுயிரே - யாழ்
நிலத்தின் பெருமைஇதே
உழைத்து உயர்வடைவோம் - நாம்
படித்துபுகழடைவோம்

வேறு

தாய் தந்தை மற்றும் உறவுடனே
தாய் மண்நிலம் நம துறவே
காய் கனி களையும் - கடல்
மீன் வகை களையும் - தினம்
நாம் ருசித்திடுவோம் - ஓடியல்க்
கூழ் குடித்திடுவோம்

தென்றல் மலர்களை வருடிச் செல்லும்
தேன் மலர்களைத் துயிலெழுப்பும்
குளிர்ந்த நிலவொளியும் - மழை
பொழிந்த நிலமணமும் - எங்கள்
உணர்வில் கலந்திருக்கும் - மனம்
ஒன்றி நிலைத்திருக்கும்.

வெயில் மழைபனி இயற்கை யெல்லாம்
துயில் கனவென வரும் சுகம்தருமே
குயில் இசைத்திடுமே - தினம்
மயில் களித்திடுமே
முயல் குதித்திடுமே - முகில்
நிழல் அளித்திடுமே

வேறு

என்ன என்ன இல்லை எமதிடத்தில்
எண்ண எண்ண மனம் இனித்திடுமே
தென்னஞ் சோலைகளும் - திசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் பள்ளிகளும்
விண்ணை முட்டி உயர் - பல
வண்ணக்கோபுரமும்
எங்கள் யாழகத்தில் - திசை
எங்கும் நிறைந்திருக்கும்

அன்பு கொண்ட பாச உறவுகளும்
அண்டி எம்மை வாழும் விலங்குகளும்
என்றும் துணையிருக்கும் - பெரு
நன்றி மிகுந்திருக்கும்.
தென்றல் பாட்டிசைக்கும் - தேன்
வண்டு கூட்டிசைக்கும்
ஆகா அற்புதமே - இந்த
வாழ்க்கை சொர்க்கமதே

**வேறு**

வயல் நிலங் களும் பழ மரங் களும்
வளம் செறிந் திடும் உளம் நிரம்பிடும்
வாழ்க்கை இனித்திடுமே - மனம்,
கூத்தில் களித்திடுமே

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளம் பேசும் வார்த்தை யாவும்...

உள்ளம் பேசும் வார்த்தை யாவும்
உதடு பேசுமா - உன்
உதடு பேசும் வார்த்தை யாவும்
உள்ளம் ஆகுமா

(உள்ளம் .....)

கள்ளம் கபடம் நிறைந்த உலகில்
காட்சி வேறடா - காற்று
வெள்ளம் போல பள்ளம் நாடி
விரையு மோவடா

(உள்ளம் .....)

சொல்வ தொன்று செய்வ தொன்று
தூய்மை ஏதடா - எந்தச்
செல்வம் வந்து சேர்ந்த போதும்
நேர்மை மேலடா

(உள்ளம் .....)

மனிதம் இல்லா மனிதர் கூடி
வாழும் உலகடா - இதன்
புனிதம் தேடி அலையும் நெஞ்சில்
புளுதி படிவதா

(உள்ளம் .....)

இனியும் இந்த நிலைமை கண்டு
இதயம் அழுவதா - இந்தப்
பனியை வெல்லும் துணிவில் லாது
பயந்து தொழுவதா

(உள்ளம் .....)

இசையமைப்பு :- திரு.சோ.ஜெயச்சந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிற்பிகள் சமுதாய சிற்பிகள்...

சிற்பிகள் - சமுதாயச் சிற்பிகள்
பொற்பு மிகுந்த சமுதாயப்
பொலிவை அழகைப்
புவிக்கு நல்கும்

(சிற்பிகள் .....)

கற்றல் கற்க உதவல் மூலம்
கால கால மாக உயர்ந்து
நிற்றல் எமது மேன்மை யாகும்
நிலைத்த புகழ் நமதே யாகும்

(சிற்பிகள் .....)

பள்ளிப் பிள்ளை எங்கள் பிள்ளை
பராம ரிக்கும் தாயாய் ஆவோம்
அள்ளி யந்த மலரை உலகின்
அதி சயமாய் ஆக்கி வைப்போம்

(சிற்பிகள் .....)

ஏணி எனத் தோணி என
ஏற்றி இறக்கிச் சேவை செய்து
ஆணி யென உலகத் தேரின்
அச்சைப் பாது காத்துத் தரும்

(சிற்பிகள் .....)

ஆசிரியப் பணி உலகின்
அறப் பணியாம் அப் பணிக்கே
அர்ப் பணித்துச் சேவை செய்யும்
அர்த்தம் நிறை வாழ்வு கொண்ட

(சிற்பிகள் .....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிதிறக்கும்.... சமாதானம்.... அமைதி

**[இந்து, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ....**
**பாடசாலை மாணவர்கள் பாடி ஆடும் நடனம் ]**

சமாதானம் சமாதானம் சமாதானம்.
தானத்திலே சிறந்த தானம் சமாதானம் - உலகில்
சகலருக்கும் நன்மைதரும் சமாதானம்

( சமா தானம்....)

**வேறு**

கொடுக்கக் கொள்ளக் குறைந்திடாது
சமா தானம் - நாங்கள்
கூடி வாழ்ந்தால் கோடிநன்மை
கொடுக்கும் சமா தானம்

( சமா தானம்....)

**வேறு**

ஒற்று மையால் அமைதி உண்டு
ஒன்றாய் வாழுவோம்....பகை
வேற்று மையால் வளரும். அதை
வென்றே உயருவோம்

( சமா தானம்....)

**வேறு**

அன்பி னாலே உண்டாகும் சமா தானம - இந்த
அன்பு தானே வாழ்வி னுக்கு ஆதாரம்
அன்பி னாலே உண்டாகும் ஒற்று மையாம் - நாங்கள்
அன்பு கொண்டு வாழ்ந்திடுவோம் நற்று ணையாய்

( சமா தானம்....)

**வேறு**

அமைதி யாக வாழ்வதற்கோர்
உலகம் அமைப் போம் - அவலம்
அழுகை அற்ற அவ்வுலகில்
அனைவரும் வாழ்வோம்

( சமா தானம்....)

**வேறு**

கலக மில்லாச் சண்டை இல்லாக்
காலம் வேண்டுமே
கண்ணீரின்றிக் கவலையின்றிக்
கற்க வேண்டுமே

( சமாதானம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

மண்டை உடையச் சண்டை போட்டு
மனிதர் களை மனிதர் கொன்று
கண்ட தென்ன பெரியவரே
எமக்குச் சொல்லுவீர் - இனிச்
சமா தான வழியினிலே
நிமிர்ந்து செல்லுவீர்
(சமாதானம்....)

**வேறு**

உலக மெல்லாம் சண்டைக் காடு
மனிதர் எல்லாம் வேட்டை நாய்கள்
ஊர் மனைகள் அழிஞ்சு போச்சு உலகத்திலே
ஒப்பா ரியே சேவல் ஒலி காலையிலே
(சமாதானம்....)

**வேறு**

மொழி கடந்து மதம் கடந்து
மூத்த பொய்கள் பல கடந்து
பழி கடந்து மனித குலம்
வாழவேண்டுமே - இந்தப்
பாழும் யுத்தம் மாறி மண்ணில்
அமைதி வேண்டுமே
(சமாதானம்....)

**வேறு**

ஆடு வோமே பாடு வோமே
ஆனந்த மாய் ஒன்றாகக் கூடுவோமே
நாடு முழுதும் சமா தானம் வர வேண்டுமே - நாங்கள்
நாவார அதைச் சுவைக்கும் நிலை வேண்டுமே
(சமாதானம்....)

**வேறு**

எதிர்காலத் தலைவர்கள் நாம்
எங்கள் உலகில் நீங்கள் பெரும்
புதிர் காண எங்களுக்கு வழிவிடுங்கள் - நாங்கள்
புதிய உலகில் சமாதானப்
புறாக்க ளாகுவோம்
(சமாதானம்....)

இசையமைப்பு :- கலாபூஷணம் திருமதி தேவி மனோகரி நாகேஸ்பரன்
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழல் பாதுகாப்பு

பாடு கின்றோம் பாடு கின்றோம்
பாடல் ஒன்று பாடு கின்றோம்
நாடு கின்றோம் நாடு கின்றோம்
நாட்டின் சுத்தம் நாடு கின்றோம்

(பாடுகின்றோம்....)

அழகிய சூழல் அன்னை அன்றோ
அன்னையைப் பிள்ளைகள் கொல்ல லாகுமோ
அன்னையின் அழுகை கேட்டிட வில்லையோ
ஐயோ இதுவும் பிள்ளைகள் செயலோ

(பாடுகின்றோம்....)

இயற்கை அன்னையை அசுத்த நோய்க்கு
இலக்காய் நாங்கள் விட்டு விட்டாலே
இங்குநாம் நோய்நொடி இன்றி வாழுதல்
இயலுமோ என்பதை நீர் சொல்லுவீரே

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
என்னும் பழமொழி நினைவில் இல்லையோ
நோயுற்ற பின்னே காரணம் தேடி
நொந்திடல் என்றும் சரி தானோ

(பாடுகின்றோம்....)

குப்பை களாலும் கூளங் களாலும்
சூழலை நாங்கள் கெடுத்து விட்டால்
இப்புவி வாழ்வில் நோயே எங்கள்
இயற்கையின் கொடிய பரிசென ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

கழிவுப் பொருட்கள் வழியில் கிடந்தால்
அழியும் எங்கள் சுக வாழ்வு
குழியில் போட்டு மூடியே விட்டால்
நிலமும் நல்ல வள மாகும்

(பாடுகின்றோம்....)

சுத்தக் காற்றே சுகந்தரும் காற்றெனக்
கற்றோம் நாங்கள் பள்ளி யிலே
நித்தம் அதனை அசுத்தம் செய்தால்
நிலத்தில் அழியும் சுக வாழ்வு

சூழலை நாசஞ் செய்தால் எமக்குச்
சுகமில்லை நல்ல வாழ்வு மில்லை
ஆழமாய் இதனைச் சிந்தித்து வாழ்ந்து
அடைவோம் நாங்கள் அமர நிலை

(பாடுகின்றோம்....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்புங்கள் உண்மை நம்புங்கள்...

**[அபிநயப் பாடல்]**

சிறுவர்கள் :-

நம்புங்கள் உண்மை நம்புங்கள்
நம்புங்கள் உண்மை நம்புங்கள்

நாளைய உலகம் எங்கள் கையிலே
நாங்கள் சொல்வது உண்மை பொய்இல்லே
( நம்புங்கள்...)

**வேறு**

ஏழை இல்லை ஜாதி இல்லை
இல்லை என்பது என்றுமே இல்லை
எங்கள் உலகம் இது வரையில்
இல்லாத தொரு புது உலகம்
( நம்புங்கள்...)

நீதி யாவர்க்கும் பொது வாகும்
நிதியும் கூடப் பொது வாகும்
மோதி அழியும் போர் இல்லை
முழுமை யான புது உலகம்
( நம்புங்கள்....)

மனிதர் யாரும் சம மாகும்
மண்ணில் யாவும் உற வாகும்
புனித மான புது ஜென்மம்
பூமி எங்கும் உரு வாகும்
(நம்புங்கள்...)

காற்றும் மழையும் ஏவல் செய்யும்
கடலும் தரையும் உறவு கொள்ளும்
வேற்றுக் கிரகம் எங்க ளுக்கோர்
விளை யாட்டுத் திடல் ஆகும்
(நம்புங்கள்...)

✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் வரமே பனை மரமே....

இந்திர லோகத்துக் கற்பக தருவென
இருக்கின்ற எங்கள் பனை மரமே!
மந்திரமோ என்ன மாயமோ உன்னருள்
மண்ணினில் எங்கள் பெரும் வரமே!

**வேறு**

எத்தனை பயன்களை நீதருவாய் என்றும்
எங்களின் தாயே பனை மரமே!
அத்தனையும் உந்தன் அருட்கொடை அல்லவோ
அன்னையே உன்னையே போற்று கின்றோம்

கேட்டவை எல்லாம் நீதருவாய் நாங்கள்
கேட்கா தவைகளும் நீ தருவாய்
வாட்ட முறும்ஏழை வாழ்வுக்கு நீதுணை
வணங்கு கின்றோம் பனை மரத்தாயே

பாட்டுக்குள் உன்னைப் புலவர்கள் வைத்தார்
பாண்டியர்சேரர் சோழர் வளர்த்தார்
கூட்டுக்குள் வாழும் பறவைகள் யாவும்
கூடுகள் அமைக்க இடங் கொடுத்தாய்

**வேறு**

நின்று நிமிர்ந்த நின் நேர்மைஎம் மண்ணுக்கு
நிச்சயம் பலப்பல கதை சொல்லுமே
ஒன்று பட்டே நீ ஒழுங்குடன் நின்றிடல்
உலகுக்கு ஒற்றுமை வழி சொல்லுமே

அன்று முதல் உன்னைப் போற்றிடும் அறிஞர்கள்
ஆயிரம் ஆயிரம் பேர்க ளுண்டு
இன்றும் உன் புகழை இசைத்திடும் புலவர்கள்
எத்தனை எத்தனை பேர்க ளுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் புல வர்கள் எழுதிய ஏடுகள்
எல்லாம் உனது கொடை தானே
எங்கள் தமி ழர்கள் பாடம் படித்திட
ஏடுகள் தந்ததும் நீ தானே

பழமும் தரு வாய் பானமும் தருவாய்
பருகிட இனிய நுங் காவாய்
அழகிய பாய் முதல் பெட்டிகள் கடகங்கள்
அரியகை வினைப் பொருள் நீதருவாய்

(இந்திர....)

**வேறு**

வீடுகள் வேயவும் வேலி அடைக்கவும்
வேண்டிய ஓலைகள் நீ தருவாய்
ஏடுகள் புகழ்ந்திடும் எங்களின் தாயே
எங்களின் வீட்டுக்கு மர மாவாய்

புதுப்புது நாரிழை ஆகியே விஞ்ஞானப்
புதுமைகள் பலவாய் உரு வடைவாய்
அடுப்புக்கு விறகாய் ஆகிடும் அன்னையே
அழிந்தும் அழியாப் பயன் தருவாய்

(இந்திர....)

கருப்பணிச் சாறு கிழங்கொடு வெல்லம்
கடித்திட ஒடியல் நீ தருவாய்
விரும்பிக் குடித்திடும் கூழுக்கு மாவும்
வேறுவே றுணவுக்கும் மா தருவாய்

பணியாரம் பிட்டு பனங்கட்டி பனாட்டென
பயன்தரும் பனையே பாரி னிலே
இனியாரும் உளரோ தன்னையே தந்திடும்
எங்களின் வள்ளல் நீ யல்லவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

போரின் போது பதுங்கு குழிக்கு
பாதுகாப் பரண்என நீ யிருந்தாய்
எறி கணையாலே தலைதனை இழந்தாய்
எங்களைக் காத்துநீ புண் சுமந்தாய்

வீஷ்மரின் கொடியில் நீயிருந்தாய் எங்கள்
வீட்டு வைத்திய மருந் தானாய்
ஆஷ்தியாய் உன்னை நினைக்கிறோம் தாயே
அன்னை யெனஉன்னை வணங்கு கிறோம்

தால புராணம் பாடினர் உன்னைத்
தாயாய் மதித்தனர் தமிழர்களே
காலமெலாம் நின்று பயன்தர வேண்டும்
கைகுவித் தோமென்றும் வாழியவே

(இந்திர...)

✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூடிக் கிடக்குதடா மண்ணுக்குள்ளே

என்ன கொடுமையிது இறைவா
ஏனிவரைப் படைத்தாய் சொல் இறைவா

சின்ன மலரைக் கிள்ளிச்
சீரழித்துப் பாழ்படுத்தி
துண்டு துண்டாய்ச் சிதைத்துத்
தூக்கி எறிந்தாரே

அரக்கர் அழிந்தா ரென்றார்
அசுரர் ஒழிந்தா ரென்றார்
இரக்க மில்லா இவரை
என்ன வென்று பேர்சொல்ல

**வேறு**

தாய்க ளுக்கோ இவர் பிறந்தார்
தந்தை பெயர் தெரிந்தவரோ
நாய்க ளுக்கோ பேய் களுக்கோ
நரி களுக்கோ இவர் பிறந்தார்

**வேறு**

ஓடித் திரிந்த பிள்ளை
ஒழுங்குமுறை வாழ்ந்த பிள்ளை
கோடி மலரழ காய்க்
குதூகலித்து வாழ்ந்த பிள்ளை

**வேறு**

மூடிக் கிடக்குதடா மண்ணுக்குள்ளே - இந்த
முத்தைச் சிதைத்தவர்க்கோ மண்ணுமில்லே - வாய்க்கு
மண்ணுமில்லே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

மண்ணுக்குப் பாரமென இருக்கும் இவர்களையே
மண்ணும் விழுங்காதோ - இவர்
மடியில் இடி வீழாதோ
கண்ணுங் குருடாகாதோ கைகால்கள் அழுகாதோ - இவர்
இன்னும் உயிரோடு இருப்பதுவும் முறைதானோ

அம்மா காளி அகோரவீர பத்திரரே!
சும்மா இவரை விடுவீரோ - இன்றே
சுடுகாட்டுக் கனுப்பிப் பழி தீர்ப்பீரோ

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகே இடு குழிப் பெரும் பள்ளம்

முருகா இதுஎன்ன சோதனையோ - என்றும்
முடியா தோஇந்த வேதனையே
உருகா திருக்குமோ உன் உள்ளம் - இந்த
உலகே இடுகுழிப் பெரும் பள்ளம்

(முருகா....)

குழந்தைகள் சிறுவர்கள் பெரியவர்கள் - எல்லாம்
கொத்துக் கொத்தாய்த் தினம் மடிகிறாரே
அழுதிட உறவின்றிப் பலகுடும்பம் - படும்
அவலத்தை நீ வந்து பாராயோ.

( முருகா...)

பசிகொண்ட கொரோனாப் பெருநோயால் - இங்கு
பாழ்படு கின்றதே மனிதகுலம்
அசுரரை அழித்த உன் கைவேலால் - இதை
அழிக்கா திருப்பதேன் சொல்வேலா

(முருகா....)

வவுனியா நகரினில் வாழுகின்றாய் - நல்ல
வண்ண மயில்தனில் ஏறுகின்றாய்
அவனியை வலம்வந்து பாராயோ....- கொடும்
அழிவினைத் தீர்த்திட வாராயோ

(முருகா....)

மாம்பழம் ஒன்றினைப் பெற்றிடவே - இந்த
மாநிலம் சுற்றிய கடவுளன்றோ
நாம்படும் துன்பத்தைப் பாராயோ - இந்த
நானிலம் சுற்றியே வாராயோ

(முருகா....)

கொரோனா என்றொரு விஷக்கிருமி - பெரும்
கொடூர அரக்கனாய் அழிக்கிறதே
வரானோ முருகன் காக்கவென்றே - உந்தன்
வரவினைப் பார்க்கிறோம் அறியாயோ

(முருகா....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

## மண் பார்த்த உழவன்

காற்று வந்தால் நாண மென்ன
காத லனோ தென்ற லவன்
நாற்று வயல்ப் பருவப் பெண்ணே
நாலு குணம் உண்டோ கண்ணே
(காற்று வந்தால்....)

ஆடி ஆடித் தென்ற லிலே
அசைந் தசைந்து பாடி னாயே
தேடி வந்த தென்றல் கண்டேன்
நாணத் தினால் தலை குனிந்தாய்
(காற்று வந்தால்....)

பருவம் வந்து வாய்த்து விட்டாய்
பாவை எனப் பூத்து விட்டாய்
பன்னீ ரிலே நீ ராட்டி
பட் டாடை உடுத்தவர் யார்
(காற்று வந்தால்....)

மண் பார்த்த உழவன் இந்த
மாநி லத்தைப் பார்க்க வேண்டும்
கண் பார்த்துச் சிரித்தி டாயோ
கண் மணியே நெல்மணியாய்
(காற்று வந்தால்....)

இசையமைப்பு :- திரு. உமாகாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கற் பாட்டு

ஊருக்கெல்லாம் சோறு ஊட்டும் உழவரம்மா - நாங்கள்
உழவரம்மா - இந்த
உலகத்துக்கே நாங்கள்தானே முதல்வரம்மா - என்றும்
முதல்வரம்மா

**வேறு**

காடுவெட்டி மேடுதட்டி கலப்பைபூட்டி உழுதோம்
நன்றாய் உழுதோம்
பாடுபட்டு விதைவிதைத்து பக்குவமாய்ப் பார்த்தோம்
நாங்கள் பார்த்தோம்

**வேறு**

களைபறித்து நீர்பாய்ச்சி கண்விழித்துக் காவல்காத்து
விளைவெடுக்கும் ஆசையிலே வளர்த்தோம்
நன்றாய் வளர்த்தோம்

**வேறு**

சூரியனின் கருணையினால் மழை பொழிந்து
எங்கும் மழைபொழிந்து
சூழ்ந்து வளர்ந்து கதிரும்முற்றி விளைந்து
நன்றாய் விளைந்து

அறுவடைக்குக் காலம் வந்தது பார்த்து
நாங்கள் பார்த்து
அறுத்துக் களத்தில் போட்டோம் உடல்வேர்த்து
மிகவும் வேர்த்து

(ஊருக்கெல்லாம்)

**வேறு**

கதிரடித்துத் தூற்றி நெல்லைக் குவித்தோம்
நாங்கள் குவித்தோம்
கதிரவனைப் போற்றிக் கைகள் குவித்தோம்
நாங்கள் குவித்தோம்
முற்றத்திலே மெழுகிக் கோலம் போட்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

அழகாய்ப் போட்டோம்
மூன்றுகல்லு அடுப்பில் பானை சேர்த்தோம்
நன்றாய்ச் சேர்த்தோம்

சுற்றஞ்சூழப் பொங்கல் பொங்கி மகிழுவோம்
நாங்கள் மகிழுவோம்
சூரியனை வாழ்த்தி என்றும் புகழுவோம்
என்றும் புகழுவோம்

(ஊருக்கெல்லாம்)

முத்துச் சம்பா அமுது பொங்கிப் படைத்து
முற்றத்தில் படைத்து
கட்டிக் கரும்பு இளநீரும் குவிச்சு
கையால் குவிச்சு

பட்டாசு சுட்டுச் சுட்டுப் போடுவோம்
நாங்கள் போடுவோம்
பாடுபட்டதை எண்ணி எண்ணிப் பாடுவோம்
ஒன்றாய் ஆடுவோம்

(ஊருக்கெல்லாம்)

இசையமைப்பு :- கலாபூஷணம் திருமதி தேவி மனோகரி நாகேஸ்பரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம் எங்கள் பின்னால்வரும்

(அரிவு வெட்டுப் பாடல் - நடனம்)

பாடு பட்டுக் காடு வெட்டி
பலரும் சேர்ந்து வரம்பு கட்டி
நெல் விதைச்சு களை பறிச்சு
நித்திரை இல் லாமற் காத்து

அரிவு வெட்ட வந்து நின்றோம்
இன்னாளே – எங்கள்
அனைவருக்கும் இந்த நாளோர்
பொன்னாளே

பறவை மிருகம் பூச்சி புழு
பல் வகையாம் உயிர்க ளுக்கும்
பகுத்துக் கொடுத்து முடித்த பின்னால்
பலருஞ் சேர்ந்து சிரித்து மகிழ்ந்து

அரிவு வெட்ட வந்து நின்றோம் இன்னாளே....எங்கள்
அனைவருக்கும் இந்த நாளோர் பொன்னாளே

உலகத் துக்கே உணவு கொடுக்கும்
உயர்ந்த தொழி லாளர் நாங்கள்
ஒற்று மையாய்ப் பாடு பட்டு
உழைத்துக் களைத்து வியர்வை சிந்தி

அரிவு வெட்ட வந்து நின்றோம்
இன்னாளே – உலகில்
அனைவருக்கும் இந்த நாளோர்
பொன்னாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

பல்லைக் காட்டிச் சிரிக்கும் எங்கள்
தாக் கத்தியின் கூர்மை பாரும்
கஞ்சிக் கலயம் சுமந்து வரும்
கண் மணியின் சிரிப்பைப் பாரும்

முல்லைப் பூவைப் போலச் சிரிக்கும்
முத்துச் சம்பா நெல்லைப் பாரும்
முற்றி விளைஞ்ச கதிரு நம்மை
முழிசிப் பார்க்கும் அழகு பாரும்

பரத்தை போட்டு அரிவு வெட்ட
பலரும் ஒன்றாய்க் கூடி நின்றோம்
சிரத்தை யோடு வேலை செய்வோம்
சிரித்து மகிழ்ந்து கதிர் அறுப்போம்

வேறு

களைப்புப் போகப் பாட்டுப் பாடிக்
கதிரறுப்போம் - நல்ல
கதைகள் பல பாடலிலே நாம் படிப்போம்

வேறு

அரிவு வெட்டிக் காயப் போட்டு
அங்கு காய்ந்த உப் பட்டியை
மாவக் கையாய்க் கூட்டித் திரட்டி
மணிகள் தூங்கக் கட்டித் தூக்கி

சூடு வைத்துக் காலம் பார்ப்போம் கதிரடிக்க - எருமை
சூழ்ந்து மிதிக்கக் கைதொழுவோம் பொலியடிக்க

வேறு

வேலை காரன் கம்பி னாலே
பொலிக் கொடி எடுத்த பின்னால்
கூளத் தோடு குவித்த நெல்லைக்
குல்லத் திலே எடுத்து அள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூற்றிப் பிரிக்க முக்காலிகள் கட்டுவோம் - அதிலே
தொற்றி நின்று நெல்லைத் தூற்றிக் கொட்டுவோம்

பொலி பொலி....தாயே.... பொலி பொலி
பொலி பொலி....தாயே.... பொலி பொலி

காற்றுத் திசையைப் பார்த்து நன்றாய்த்
தூற்றி நெல்லைக் குல்லத் தினால்
விசுக்கி விசுக்கிச் சிறுகூளம் போக்குவோம்....கொஞ்சம்
தலைப் பொலியை கடவுளுக்கு ஒதுக்குவோம்

பொலி பொலி....தாயே.... பொலி பொலி
பொலி பொலி....தாயே.... பொலி பொலி

சாக்கு களில் நெல்லுக் கட்டி
வண்டி களில் மாடு பூட்டி
வீடு கொணர்ந்து குத்தி அரிசி ஆக்குவோம் - சம்பாப்
பொங்கல் பொங்கிச் சூரியனைப் போற்றுவோம்

**வேறு**

உலகத் துக்கே உணவு கொடுக்கும்
உழைப் பாளர் நாங்கள் என்ற
உண்மை யினை உலகம் சொல்லும்
உலகம் எங்கள் பின்னால் செல்லும்

என்று சொல்லி மகிழ்ச்சி பொங்கப் பாடுவோம் - என்றும்
ஒற்று மையாய்ப் பாடல் பாடி ஆடுவோம்

(அரிவு வெட்ட....)

இசையமைப்பு :- கலாபூஷணம் திருமதி.தேவி மனோகரி நாகேஸ்பரன்
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமிய நடனம் - உழவர் வாழ்வு

காடு வெட்டிப் பாடு பட்டோம் நாங்களே! - நாங்களே!
களனி ஆக்கி நெல் விதைத்தோம் நாங்களே! - நாங்களே!
பாடு பட்டுக் காவல் காத்தோம் நாங்களே! - நாங்களே!
பகல் இரவாய்க் கஷ்டப் பட்டோம் நாங்களே! - நாங்களே!

பன்றி மயில் குருவி கிளி உயிர்க் கெல்லாம்
பகிர்ந்து கொடுத்து மகிழ் பவர்கள் நாங்களே! - நாங்களே!
நன்றி உணர்வு மிகுந்த வர்கள் நாங்களே! - நாங்களே!
நல்ல பொங்கல் பொங்கு பவர் நாங்களே! - நாங்களே!

(காடுவெட்டிப்.....)

### வேறு

அரிவு வெட்டிக் கதிரடித்துத் தூற்றுவோம்! - தூற்றுவோம்!
அகம் மகிழ்ந்து சூரியனைப் போற்றுவோம்! - போற்றுவோம்!
பரிவு மிகுந்து விளைவுதந்த இறைவனை! - இறைவனை!
பாடி நாங்கள் மகிழ்ந்துதுள்ளி ஆடுவோம் - ஆடுவோம்

### வேறு

சுள கெடுத்து நெல்லைப் புடைத்துக் குற்றுவோம் - குற்றுவோம்.
சுறு சுறுப்பாய் வேலை செய்து சுற்றுவோம் - சுற்றுவோம்.
இள கியநல் இதயத் தோடு பொங்குவோம் - பொங்குவோம்.
இறக்கி அடுப்பில் பொங்கல் அள்ளிப் படைப்போம் - படைப்போம்

எங்கள் உழைப்பின் சிறப்பால் வந்த அரிசியை - அரிசியை
எங்கும் உண்ணும் நிலைமை கண்டு மகிழுவோம் - மகிழுவோம்.
திங்கள் கதிர் செல்லு கின்ற நாள்வரை - நாள்வரை
எங்கள் பெருமை உலகு சொல்லும் இதுஉண்மை - இது உண்மை.

(காடுவெட்டிப்.....)

✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீராடற் பாட்டு - நடனம்

நீராடப் போவோம் நீராடப் போவோம்
வாருங்கள் தோழியரே - ஒன்றாய்
வாருங்கள் தோழியரே

(நீராடப்...)

**வேறு**

தாம ரைகள் பூத் திருக்கு
தடாகம் நிறைய நீரிருக்கு
நாமெல் லோரும் பூப்பறித்து
நன்றாய் நீந்தி ஆடலாம்

(நீராடப்...)

**வேறு**

வேர்த்த வேர்வை நாற்றம் போக
வேலை செய்த களைப்புப் போக
தீர்த்த மாடி மகிழ லாம்
சேர்ந்து வாரும் தோழி காள்

(நீராடப்...)

குளிர்ந்த நீரில் மூழ்கி விட்டால்
குதூ கலமாய் இருக்கு மன்றோ
தளிர்க் கொடிகள் பாரு மங்கே
தாமரையின் அழகு பாரும்

(நீராடப்...)

குளக் கரையின் மரத் தினிலே
குந்தி இருக்கும் மந்தி பாரும்
அழ கழகாய்த் தோகை விரித்து
அசைந்து ஆடும் மயிலைப் பாரும்

அலை யடிக்கும் அழகைப் பாரும்
அதில்த் தெறிக்கும் கதிரைப் பாரும்
தலை முழுகி நீந்தி நீந்திச்
சந்தோ சமாய் ஆட லாம்

(நீராடப்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

நீரைக் கையால் குடைந்து குடைந்து
நீந்தி நீந்தி ஆடு வோம்
பூவைப் பறித்துக் கரையில் வைப்போம்
போகும் போது எடுத்துச் செல்வோம்

(நீராடப்....)

அயிரை மாங்கன் மீன்கள் போல
அழகாய் நீந்தி நாங்கள் ஆடி
குயிலைப் போலக் கீதம் பாடி
குதூ கலமாய் ஆடு வோம்

(நீராடப்....)

கண்கள் சிவந்து வாய் வெளுத்து
கால்கள் குளிர்ந்து போச்சுது பார்
எங்கள் குளிப்பு இனிப் போதும்
எழுங்கள் வீடு போய் விடுவோம்

(நீராடப்....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்தர் நாமம் பாடிடுவோம்...

விவேகானந்தர் நாமம் பாடிடுவோம் - அந்த
வீரத் துறவியைப் போற்றிடுவோம் - இந்த
நவயுக மாந்தரும் போற்றிடும் வண்ணமாய்
நல்வழி காட்டியோன் புகழ் சொல்லுவோம்
(விவேகானந்தர்....)

சர்வமத மகா சபையினிலே - எங்கள்
சன்மார்க்க மேன்மை உரைத்தவராம் - எங்கும்
சர்வ மதத்துச் சமரசம் வேண்டியே
தத்துவ போதனை செய்த வராம்
(விவேகானந்தர்....)

**வேறு**

சிக்காக்கோ என்னும் பெரு நகரில் - அன்று
சீரிய கொள்கை வகுத் துரைத்தார் - எல்லா
இக்கால மக்களும் ஏற்று நடந்திட
இனிய வழிபல சொல்லி வைத்தார்
(விவேகானந்தர்....)

எல்லா மதங்களும் சொல்லுங் கொள்கை - நல்ல
இன்ப வழிகளைக் காட்டு வதாம் - ஒரு
வல்ல கடவுளைக் கும்பிடும் மக்களே
வகுத்த வழிகளில் வாழ்ந் திடுங்கள்
(விவேகானந்தர்....)

நதிகள் பலப் பல ஓடிடினும் - அவை
நாடும் இடமொரு கட லாகும் - மத
விதிகள் பலப்பல ஆயிடினும் அவை
விளக்கும் கடவுளும் ஒன் றாகும்
(விவேகானந்தர்....)

✣✣✣✣✣✣✣✣✣✣✣✣✣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரத் துறவியைப் போற்றுவோம்

வீரத் துறவியைப் போற்றுவோம் - அவர்
விட்ட பணிகளை ஆற்றுவோம்
சாரம் மிகுந்தநம் சமயங்கள் - சொன்ன
தத்துவ ஜோதியை ஏற்றுவோம்

(வீரத் துறவியை .....)

ஊரெத் தனை யேனும் - அங்குள்ள
உயிரெத் தனையேனும் அன்பினால்
ஆரத் தழுவி அவற்றோடே - என்றும்
அன்புசெய் தின்பமாய் வாழுவோம்

(வீரத் துறவியை .....)

காணும் பலகொள்கை கொண்டதாய்ப் - பல
கடவுட் கதைகளைக் கூறினும்
ஊணும் உடைகளும் இன்றியே - துன்பம்
உற்றவர்க் குதவுதல் மேன்மையாம்

(வீரத் துறவியை .....)

ஆறுகள் பற்பல ஓடலாம் - அவை
அங்கிங் கெனப்பல கொள்ளலாம்
வீறுகொள் மாக்கடல் சேர்தல்போல் - சமயம்
விளம்பிடும் கடவுளும் ஒன்றுதான்

(வீரத் துறவியை .....)

உங்கள் உங்கள்மத உண்மையை - என்றும்
உறுதி குலையாமல் நாடியே
உங்கள் உள்மனக் கோயிலில் - வைத்து
உலகு சிறந்திட வாழுங்கள்

(வீரத் துறவியை .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி சமயப் பிரிவினை - மண்ணில்
தாழ்ந்தவன் மேலெனப் பிரிவினை
நீதி நெறிமுறை கெட்டதால் - வாழ்வு
நிம்மதி இன்றிப்பாழ் பட்டதே

(வீரத் துறவியை .....)

பேசி இழிநிலை கொள்வதோ - சமயம்
போதிக்கும் நல்வழி செல்லுவீர்
காசினி வாழ்வுற வேண்டியே - மக்கள்
கற்றுநல் ஒற்றுமை பேணுவீர்

(வீரத் துறவியை .....)

என்று பலவகை உண்மைகள் - எங்கள்
ஏந்தல் விவேகானந்தர் கூறியே
அன்று உலகெங்கும் போதித்த - நல்ல
அருநெறி தன்னைநாம் போற்றுவோம்

(வீரத் துறவியை .....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கவியே சாம்பவியே....

[நடனம்]

சங்க வியே! சாம்ப வியே!
சர்வ குல நாய கியே!
எங்கள் குலம் காக்க வந்த தாயே! - இந்த
ஏழுலகும் ஆட்சி செய்யும் தாயே.

(சங்கவியே....)

பொங்கு கடல் மலை அருவி
பூமி மரம் உயிர் பெருகி
எங்கும் நிறைந் தாலும் என்ன தாயே - உந்தன்
எழிலு ருவே ஆட்சி செய்யும் தாயே.

(சங்கவியே....)

(வேறு)

கருமுகில் கூந்தல் என்னும் வடிவு கொண்டாய்
காலொலி முழக்கம் என்ன நட மிடுவாய்
வருமொரு மின்னல் என்ன இடை அசைய
வானமெல் லாம் வடிவாய் நிறைந் திருப்பாய்

மயில்குயில் மான் புலியாய் வடிவு கொண்டாய்
மலர்இலை காய் கனியாய் நீ இருந்தாய்.
பயில்அருங் கலைக ளென வடிவு கொண்டாய்
பரதமும் நான் பயில அருள் புரிவாய்.

(சங்கவியே....)

(வேறு)

நில மொடு தீ காற்றாய் நீ இருப்பாய் - வானம்
நீரென நிறைந்தவளே நீ காப்பாய்.
உல கினைப் படைத்த வளே ஒளி தருவாய் - எங்கும்
ஓங்கார மானவளே வழி தருவாய்.
பல மொடு வினைகள் வந்தால் பைர வியே - உந்தன்
பாதமே கதிஎனக்கு பைங் கிளியே.

(சங்கவியே....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு)

திங்கள் உந்தன் முகத்திலம்மா
செவ்வாய் உந்தன் உதட்டிலம்மா
பொங்கும் ஒளிச் சூரியனுன்
பூ விழியில் அமைந்ததம்மா.

குரு உந்தன் நிறத்திலம்மா
கோல வெள்ளி பல்லிலம்மா.
புதன் சனி கிரகமெல்லாம்
பூவை உந்தன்அடியிலம்மா.

இராகு கேது கூந்தலம்மா
எண்ண எண்ண இனிக்குதம்மா
வராகி எனும் அம்பிகையே
வந்த ருள்வாய் சங்கவியே.

(சங்கவியே....)

(வேறு)

அண்டம் குலுங்கி நடுங்கிட ஆடும்
அந்தரி சுந்தரி அம்பிகையே
சண்டியும் முண்டியும் ஆனவள் நீயே
சாமுண்டி என்னும் சங்கவியே.

கொற்றவன் பாண்டியன் குற்றம் இழைக்கக்
கோநகர் மதுரையைத் தீயில் எரித்து
வற்றாப் பளையினில் வந்தருள் தாயாம்
வரந்தரும் கண்ணகை அம்மனும் நீயே!

தண்டை ஒலித்திட தாரை கலித்திட
தகதிமி தகவென நட மிடுவாய்
பண்டை வினைப்பயன் பாறி விழுந்திட
பார்பதி தேவிநீ அருள் புரிவாய்.

சண்டனும் முண்டனும் அஞ்சி நடுங்கிடும்
சங்கரி காளியே சங்க வியே
உண்டெனும் உண்மை உணர்த்தவல் லாளே
உலகருள் காரணி உமை யவளே.

(சங்கவியே....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம் தனம் என இது நன்மை மிகுந்தது

[நடனப் பாடல்]

தந்தன தந்தன தாள ஸ்ருதி யுடன்
தகுதிமி தகுதிமி ஆடல் ஜதியுடன்
நந்தன நந்தன வருடம் பிறந்தது
நந்தன மெனவிது நன்மை மிகுந்தது
(தந்தன தந்தன....)

வேறு

கரைந்து போனது கர வருடம்.
கழிந்து போனது கவலை துன்பம்.
விரைந்து வாருங்கள் வாழ்த் திசைப்போம்
விரைமலர் தூவிநற் பதம் பிடிப்போம்.

(தந்தன தந்தன....)

வேறு

வீடு வாசல் அலங் கரிப்போம்,
வீதி வழி சுத்தஞ் செய்வோம்,
நாடு வாழக் கோயிலிலே
நாங்கள் சென்று வழிபடுவோம்.

வேறு

அன்னை தந்தை பாதம் போற்றி
அகம் மகிழ்வோம் - அவர்
ஆசி களைப் பெற்று மனம்
அமைதி கொள்வோம்.

உண்மை நேர்மை உயர்வு தரும்
உல கத்திலே - என்று
ஒற்று மையாய் பாடி ஆடி
உயர்ந் திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

காலை யிலே மகிழ்வோடு விழித்திடுவோம் – புதுக்
கதிர வனை வரவேற்றுக் குளித்திடுவோம்
வேலை வெட்டி ஏதுமில்லை வீட்டினிலே – எங்கும்
விளை யாட்டு மகிழ்ச்சி பொங்கும் நாட்டினிலே

(தந்தன தந்தன ....)

**வேறு**

புத்தாடை அணிந் திடுவோம்
பூமாலை புனைந் திடுவோம்
முத்தான பலகாரம் முடிந்து கொண்டு
முறுக்கு பணி யாரங்கள் சுவைத்திடுவோம்

(தந்தன தந்தன....)

**வேறு**

பட்டாசு சுட்டு விளை யாடிடுவோம் – நல்ல
பந்தடித்து ஓடி விளை யாடிடுவோம்
எட்டுக்கோ டெட்டிப் பாய்ந்து குதித்திடுவோம் – மகிழ்ச்சி
எல்லை யினை ஓடிப்போய் மிதித்திடுவோம்

(தந்தன தந்தன....)

**வேறு**

கிட்டிப் புள்ளு அடித்திடுவோம்
கிளித் தட்டு மறித்திடுவோம்
எட்டி அடி வைத்துக் கெந்தி அடித்திடுவோம் – பிடித்து
இழுத்து விழுத்திச் சடுகுடென்றே ஆடிடுவோம்

(சடு குடு சடு குடு....சடு குடு.)

**வேறு**

கும்மி அடித்துக் குதூகலிப்போம்
கோலாட்டம் ஆடிடுவோம்
தம்பி தங்கை அக்கா அண்ணா யாவரும்
தாவி ஏறி ஊஞ்சல் ஆடி மகிழுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

அக மதுவும் டேவிட்டும் அயலிலே
அவர்களுக்கும் பலகாரம் கொடுத்திடுவோம்
முக மிழந்த மனிதர்களா தமிழர்கள் – மண்ணில்
மூத்த குடி என்று சொல்லிப் பாடுவோம்

**வேறு**

ஏழைகளாய் இருப்பவரை எண்ணுவோம் – அவர்
ஏற்றமுற இயன்றதைநாம் பண்ணுவோம்
வாழையடி வாழைகளாய் வாழ்கிறோம் – இந்த
வரலாற்றை மனதினிலே கொள்ளுவோம்

**வேறு**

மயில்களும் ஆடும் மான்களும் ஓடும்
மாங்குயில் பாடும் குதூகலமே
துயில் கலைந்தாடும் பாம்புகளோடு
துயர்களைந் தோட வசந்தம் வரும்

**வேறு**

வாழ்த்து வோமே வாழ்த்து வோமே
வருக புதிய வருட மென்று
வாழ்த்து வோமே வாழ்த்து வோமே
வாழ்க நந்தன வருட மென்று

(துந்தன தந்தன...)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னச் சின்னச் சிமிழே

சின்னச் சின்னச் சிமிழே! வண்ண வண்ணக் கனவே!
செந்த மிழே! என்னுயிரே! வா! வா! வா!
கன்னற் சுவை அமுதே! கண்ணின் மணி ஒளியே !
இன்னல் களைப் போக்கவந்த கண்ணகியே வா! வா!

உன் அழகைக் காண உடல் கண்ணாய் இல்லையே
உன் மழலை கேட்க உடல் காதாய் இல்லையே
உன்னை அள்ளி அணைக்க உடல் கையாய் இல்லையே
உன்னை முத்தம் இட உயிர்க்கு வாயும் இல்லையே

துள்ளித் துள்ளிப் புள்ளி மானாய் ஓடி வருவாய்
உள்ளம் தன்னை அள்ளி அள்ளித் தேடி வருவாய்
பிள்ளை என்று வந்த எங்கள் பேரழகே, உலகைக்
கொள்ளை கொள்ள வந்த இளங் குளிர் நிலவே வா வா!

பூக்கள் புண்ணியஞ் செய்தனவோ உன் கைகள் ஆவதற்கே
பாக்கள் பாக்கியஞ் செய்தனவோ உன் மழலை ஆவதற்கே
காக்கும் தெய்வம் கண்ணகி சீதை கௌரி திரௌபதியே
தேக்கும் செல்வத் திருமகளே கலை மகளும் நீதானே

எந்தப் பூவும் உன்னைப் போலச் சிரித்த தில்லையே
எந்த மயிலும் உன்னைப் போலச் சிலிர்த்த தில்லையே
எந்தக் குழலும் உன்னைப் போல ஒலித்த தில்லையே - நீ
எந்தக் குறும்பு செய்தாலும் மனம் சலித்த தில்லையே

அழுதா லும்அது தேவகானம் ஆனால் தாங்காதே - நீ
அசைந்தா லும்அது பாவதாளம் பரதம் தூங்காதே
முழுதாய் எந்தன் உயிரை உன்னில் கண்டேன் திருமகளே
முத்தி பத்தி சித்தி தந்திடும் சத்தி நீதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

கண்ணனும் கந்தனும் கலந்தபெண் வடிவே
கவலைக்கு அரு மருந்தே - எம்மைக்
காக்கும் வற்றாப் பழையின் தாயே
கண்ணகி நீதானே

விண்ணும் மண்ணும் வேறுள உலகும்
விரிந்த அழ கெல்லாம் - இந்தக்
கண்ணும் காலும் கையுமாய் வந்த
கலையே தனிஅழகே

**வேறு**

புண்ணியப் பேறே புதுப் புனல் ஆறே
புதுப் புதுக் கதைசொல்வேன் வா! - நாங்கள்
எண்ணிய தெல்லாம் பெற்றோம் உன்னால்
என்உயிர்க் குயிரே வா

**வேறு**

நீராட்டித் தலை துவட்டி
நெஞ்சோடு அணைத் தெடுத்து
நித்திலமே முத்தம் இட்டு
பொட்டு வைப்பேனே - நல்ல
நீட்டுப் பாவாடைகட்டி நெகிழ்ந்திடு வேனே

**வேறு**

வாரியே தலை முடித்து
வண்ண வண்ண மலர் தொடுத்து
வளையல்கள் அணிந்து பார்ப்பேனே - உந்தன்
வழியெல்லாம் மலர் குவிப்பேனே

**வேறு**

அமுதூட்டி உனை வளர்ப்பேன் - உண்ணும்
அழ கெல்லாம் பார்த்திருப்பேன்
அன்னை எந்தன் அருகினிலே வாவா - எந்தன்
ஆருயிரே ஆதிரையே அமுதுண்ணவா

இசையமைப்பு :- "சிதம்பரம் இசைமைந்தன்" நயினை பத்மநாதன் சிவமைந்தன்
ஆடியவர் :- செல்வி திருமகள் பாஸ்கரன் (அரங்கேற்றம்)
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரகாட்டப் பாடல்

ஆடி வருவோம் - கரகம்
ஆடி வருவோம்
ஆனந்த மாக இன்று ஆடி வருவோம்
(ஆடி வருவோம் ....)

வெள்ளிக் கரகம் எடுத் தாடிவருவோம்
வேலன் தாய்தனையே பாடிவருவோம்
தங்கக் கரகம் எடுத் தாடிவருவோம்
தாயே வாழ்கவென்று பாடிவருவோம்
(ஆடி வருவோம் ....)

**வேறு**

ஆனை மு கமுடைய
ஐங்கரனே காக்கவேண்டும்
பானை வ யிறுடையோன்
பக்குவமாய்க் காக்கவேண்டும்
(ஆடி வருவோம் ....)

**வேறு**

ஈழ மணி நாட்டில்
எங்கள் வவுனி யா நகரில்
வாழும் தமிழர்கள் நாம்
வள முடனே வாழ் வதற்கு
நாளும் வணங்கு கின்ற
நமது அம்மன் புகழைச் சொல்லி
காலில் சிலம்பு கட்டி
கரக மெடுத் தாடி வந்தோம்

கள்ளங் கபட மில்லை
கடு கடுப்புக் கோபம் இல்லை
உள்ளம் எப்பொ ழுதும்
உறுதி யாக இருப்ப தனால்
பள்ள நீரைப் போலப்
பண்பு களும் நிறைந் திருக்கும்
அள்ளக் குறை யாத
அருள் தருவாள் அம்பிகையே
(ஆடி வருவோம் ....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமனின் வழியே...

**பல்லவி**

இராமனின் வழியே எங்களின் வழியாய்
இனிதாய் நடந் திடுவோம் - ஸ்ரீ

(இராமனின் வழியே...)

**அனுபல்லவி**

பாரத நாட்டின் அயோத்தியை ஆண்ட
பரந்தா மன்வழி நல்வழியாம்
ஆரும் அவர்க்கிணை இல்லையென் றறிந்தோம்
அவர்வழி நம்வழி யாம்.

(இராமனின் வழியே...)

**சரணம்**

தாடகை என்னும் அரக்கியை அழித்து
தவமுனி வேள்வி காத்தவனாம்
ஆடக மயிலாம் அகலிகை சாபம்
அகற்றியே பெருமை சேர்த்தவனாம்

வளைத்திட முடியா வில்லினை ஒடித்து
வீரனாய் மண்ணில் உயர்ந்தவனாம்
வளைக்கரம் பிடிக்க மாலையைச் சூட்டி
வைதேகி தன்னை மணந்தவனாம்

தந்தையின் வாக்கினைச் சத்தியம் ஆக்கிட
தன்சுகம் துறந்த உத்த மனாம்
தாயின் விருப்பே தன்விருப் பென்றே
தரணிக்கு நல்வழி காட்டினனாம்

தம்பியர்க் கெல்லாம் நல்லதோர் தமையன்
தசரத ராமன் அவன்தானே
நம்பினர்க் கெல்லாம் நலந்தரும் நாமம்
ராமபிரான் திரு நாமமென்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகன்எனும் வேடர் குலத் தனையும்
குரக்கினச் சுக்கிரீ வன் தனையும்
பகைஅர சரக்கன்விபீ ஷணன் தனையும்
பாரினில் சகோதரர் என் றணைத்தான்

ஏகபத்தினி என்னும் விரதத்தை உலகுக்கு
எடுத்தியம் பியவன் இராமபிரான்
சீதையைப் பிரிந்தும் தனிமையில் வாழ்ந்தான்
சிந்தையில் இன்னொரு எண்ணமின்றி

இராவண னோடவன் சேனையை அழித்து
சீதையைச் சிறையினில் மீட்டதெய்வம்
அராவணை துறந்து அயோத்தியில் பிறந்து
அகிலத்தை ஆண்டவன் நமதுதுணை.

ஆஞ்ச நேயரைத்தன் அருகினில் கொண்டவன்
அவன் என்றும் நமைக்காப்பான்
பாஞ்ஞ சன்னியன் பரந்தாமன் என்றுமே
பாருக்குத் துணை யாவான்

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பே உலகின் மகா சக்தி...

### பல்லவி

அன்பே உலகின் மகா சக்தி - இதை
அறிந்து கொண்டாலே பெரும் வெற்றி

### அனுபல்லவி

துன்பத்தைப் போக்கிடும் அருஞ் சக்தி - பகைத்
துயரத்தை நீக்கிடும் பெருஞ் சக்தி

(அன்பே உலகின்....)

### சரணம்

பகைமையை அன்பால் மாற்றிடலாம் - பெரும்
பாவங்கள் வராமல் காத்திடலாம்
நகைமுகம் காட்டி அன்பு செய்தால் - எந்த
நாளிலும் மகிழ்ச்சியாய் வாழ்ந்திடலாம்

(அன்பே உலகின்....)

தாய்தந்தை பிள்ளை சகோதரர்கள் - உறவோர்
தாரம் நண்பர்கள் மட்டுமன்றி
யாதொரு தொடர்பும் இலாரிடத்தும் - என்றும்
நாமன்பு வைத்திடில் நன்மையுண்டாம்

(அன்பே உலகின்....)

### (வேறு)

கொல்லும் வேங்கைப் புலியிலும் அன்பு
கொடுக்கில் விசமுள்ள தேளிலும் அன்பு
புல்லிலும் அன்பு பூவிலும் அன்பு - பரி
பூரணம் என்னும் இறையிலும் அன்பு

எல்லா உயிரிலும் இயற்கையின் மீதிலும்
எல்லையில் லாத அன்புடன் வாழ்வோம்
தொல்லைகள் நீங்கும் துயரங்கள் நீங்கும் - என்றும்
தோல்வியில் லாநிலை உலகினில் ஓங்கும்

(அன்பே உலகின்....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லிணக்கப் பாடல்

எங்கள் நாடு இலங்கை நாடு
எல்லா வளமும் நிறைந்த நாடு
எங்கள் நாட்டு மக்கள் நாங்கள் உறவினர் - இந்த
எண்ணம் வந்தால் எங்களுக்குள் பிரிவில்லை.

இந்து பௌத்தம் இஸ்லாம் கிறீஷ்தம்
என்று நான்கு மதங்கள் உண்டு
எந்த மதம் ஆயிடினும் குறைவில்லை - நாங்கள்
இலங்கை மக்கள் என்றிடிலோ பிரிவில்லை.

எங்கள் மொழிகள் இரண்டு தான்.
எங்கள் வழியோ ஒன்று தான்.
நாமெல் லோரும் இலங்கைத்தாயின் பிள்ளைகள் - இதை
நாம் நினைத்தால் வாழ்வில் தோன்றும் இணக்கம்தான்

மனித னுக்குள் பேதம் வேண்டாம்
மதங்க ளுக்குள் பேதம் வேண்டாம்
மனதினிலே இந்த உண்மை பதியட்டும் - நாம்
மனிதர் என்ற உயர்ந்த எண்ணம் மலரட்டும்

ஓடும் இரத்தம் ஒன்றே தான்.
உதிரும் வியர்வை ஒன்றே தான்.
ஆடுமாடு போல வாழ்தல் தகுதியோ?- இந்த
அறிவு இல்லா திருப்ப தென்ன தகுதியோ?

காற்றும் நீரும் கடலும் மலையும்
கடவுள் தந்த செல்வ மென்று
ஏற்று நாங்கள் பிரிவினையைத் தள்ளுவோம் - இதை
எந்த நாளும் மனதில் போற்றிக் கொள்ளுவோம்.

எங்கள் நாடு வாழ்கவென்று வாழ்த்துவோம்!
இருக்கும் நான்கு மதங்களையும் போற்றுவோம்!
பொங்கும் இன்ப மகிழ்ச்சியிலே பூரிப்போம்! - இனிப்
புதிய நல் லிணக்கத் தீபம் ஏற்றுவோம்

(எங்கள் நாடு....)

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதிபேதம் இல்லாத...

சாதி பேதம் இல்லாத
சமய வாதம் இல்லாத
நீதி யான உலகம் ஒன்றை ஆக்குவோம் - அதை
நிலத்தில் சொர்க்கம் என்றுநிலை நாட்டுவோம்.

மொழி கடந்த ஒற்றுமை
வழி தொடர்ந்து செல்லுவோம்
விழி திறந்து உலகை வெற்றி கொள்ளுவோம் - வெறும்
வீணர் களின் வெற்று வார்த்தை தள்ளுவோம்

போதை இல்லை வாதையில்லை
போரு மில்லை புலம்பலில்லை
பாதை எல்லாம் மலர்க ளாலே போடுவோம் - எங்கள்
பயணத் திலே வெற்றி கொண்டு ஆடுவோம்

பொய்யும் இல்லை புரட்டுமில்லை
பொறாமை இல்லை களவுமில்லை
செய்யும் தொழில் தெய்வம் என்று போற்றுவோம் - இந்த
தேசத் துக்கே நாங்கள் ஒளி ஏற்றுவோம்

பஞ்சம் இல்லை பசியுமில்லை
பாரில் எமக்குள் பேதமில்லை
அஞ்சி டாத அமர வாழ்வை ஆக்குவோம் - நெஞ்சில்
அன்பு கொண்டு பேதங் களைப் போக்குவோம்.

ஏற்றத் தாழ்வு எங்குமில்லை
எளியோர் வலியோர் யாருமில்லை
மாற்றம் ஒன்றை நாங்கள் மண்ணில் காணுவோம் - நாம்
மனிதர் என்ற நல்லு றவைப் பேணுவோம்

(சாதி பேதம் ...)

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன கொடுமையடா தமிழா...

என்ன கொடுமையடா தமிழா - இது
என்ன கொடுமையடா

தெய்வத்தையும் தாயில் கண்டாய்
தேசத்தையும் தாயில் கண்டாய்
உய்யும் வகை கண்டாயா - நீ
ஒழுக்கங் கெட்டு அலைகின்றாய்
(என்ன கொடுமையடா )

வேலியே பயிரை மேய்ந்தால்
வேறுஒரு காவல் உண்டோ
பாவியே உன் மகளை - நீ
பதை பதைக்கக் கெடுத்தாயே
(என்ன கொடுமையடா )

அப்பா என்று அழைத்தவளை
அன்பு முத்தம் கொடுத்தவளை
தப்பாக உறவு காண்டாய் - சீ
தமிழனா தூ போடா
(என்ன கொடுமையடா )

பச்சைப் பசுஞ் சிறுதளிரைப்
பருவ முறாப் பாலகியை
இச்சை யினால் கெடுத்தாயே - சீ
இந்தப் பாவம் போமோடா
(என்ன கொடுமையடா)

உன்னைப் பெற்றவள் பாவியடா
ஊருக் கெல்லாம் வேசியடா
கண்ணைப் பெற்றும் காட்சியற்றாய் - சீ
காட்டு விலங்கோடா நீபோடா.

(என்ன கொடுமையடா)

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையை நேசி...

**பல்லவி**

இயற்கையை நேசி இறைவனை நேசி
இதுவே பக்தி நீயிதை யோசி

(இயற்கையை நேசி .....)

**அனுபல்லவி**

மயக்கமு மில்லை கலக்கமு மில்லை – இது
மகான்களின் ரிஷிகளின் மந்திர வாக்கு

(இயற்கையை நேசி .....)

**சரணம்**

மரஞ்செடி கொடிகள் மலைமடு கடல்கள்
மனிதம் ஈறாயுள்ள உயி ரினங்கள்
பரம்பொருள் வடிவாம் பக்திக்கு உருவாம்
பார்முதல் பூதங்கள் தெய்வங் களாம்

(இயற்கையை நேசி .....)

எல்லாம் இறையே எங்கும் இறையே
என்பதை உணர்ந்தால் இலைஒரு குறையே
வல்லான் இறைவன் வகுத்தது முறையே
வாழ்வே ஊழ்விதி வழி முறையே

(இயற்கையை நேசி .....)

நல்லதே நடக்கும் நல்லதே நினைப்போம்
நல்லதே செய்துநாம் மகிழ்ந்திடுவோம்
வல்லதே வாழும் மற்றதே வீழும்
வழிமுறை தெரிந்தால் துயர் நீங்கும்

(இயற்கையை நேசி .....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன கொடுமையிது நாட்டிலே

**பல்லவி**

என்ன கொடுமையிது நாட்டிலே - இதை
எப்படிப் பாடிடுவேன் பாட்டிலே

**அனுபல்லவி**

சொன்னால் மனமெரியும் உண்மை - இதை
சொல்லாவிட் டாலும்பெருங் கொடுமை

**சரணம்**

தாயினுக்கும் தாரத்துக்கும் பேதம் இல்லையோ - இளந்
தளிர்மொட்டு மலரென்ற பேதம் இல்லையோ
பேயினுக்கும் பேயாகி வாழும் மனிதா - உன்னைப்
பெற்றவளுன் தகப்பன்பேரைச் சரியாய்ச் சொல்வாளா
(என்ன கொடுமை....)

செல்லக் குழந்தைகளைக் கெடுத்து அழித்தாய் - அவற்றைச்
செல்லாக் காசாக்கிக் கசக்கி எறிந்தாய்
எல்லாப் பாவங்களும் உன்னை அழிக்கும் - உன்
உறுப்புக்கள் யாவும்தொழு நோயில் அழுகும்
(என்ன கொடுமை....)

பள்ளிச் சிறுமியரைப் பாழ் படுத்தினாய் - மழலை
பால்கு டிக்கும் குழந்தையையும் பாழ்படுத்தினாய்
துள்ளி நடைபயிலாச் சிறு குழந்தையை - நீ
துடிக்கப் பதைபதைக்க கெடுத்து அழித்தாய்
(என்ன கொடுமை....)

பள்ளிக்கு அனுப்பினாலும் பாதுகாப் பில்லை - அங்கே
படிப்பிக்கும் ஆசானிலும் நம்பிக்கை இல்லை
கல்விக்கும் கலவிக்கும் வேறுபா டில்லை - ஐயோ
கடவுளே உன்படைப்பில் நீதியும் இல்லை
(என்ன கொடுமை....)

பேரக் குழந்தயொரு பெண்ணின் வடிவோ - அட
பேயே அதுஉனக்குத் தெய்வம் இல்லையோ
ஆரைநம்பி வீட்டிலினிப் பெண்ணை வளர்ப்போம் - ஐயோ
அரக்கர்அசுரர் என்றுஇனி ஆரை அழைப்போம்
(என்ன கொடுமை....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழுபவன் பசியால்

உழுபவன் பசியால் வாடு கிறான் - தினம்
அழுபவன் ஆகி வாடு கிறான்.
இதுவோ இறைவா உன் நீதி - இங்கு
ஏழைக்குன் நீதி பெரும் அநீதி

(உழுபவன்....)

உழைப்பவன் உண்ண உண வில்லை - அதை
உண்பவ னுக்கோ நேரம் இல்லை
பசியால் அவனோ வாடு கிறான் - இவன்
பருத்துக் கொழுத்து ஆடு கிறான்

(உழுபவன்....)

கிழிந்த ஆடைக்கும் வழி யில்லை - குமர்
கீழே மறைக்கவும் துணி யில்லை
கிழித்தே ஆடையை அணி கின்றாள் - இவள்
கீழ்மேல் காட்டி மகிழ் கின்றாள்.

(உழுபவன்....)

செல்லப் பிராணிக்குச் செலவு செய்வோன் - ஏழைச்
சிறுவர்க்கு உண்ணக் கொடுப் பானா?
அள்ளக் குறையாச் செல்வத் தினால் - ஏழை
அறிவுக் கண்ணைத் திறப் பானா?

(உழுபவன்...)

இறைவா இறைவா இதை மாற்று - இது
இயற்கை யென்றால் இது ஏமாற்று
நிறைவாய் யாவரும் வாழ்ந் திடவே - இனி
நீயொரு விதியை உரு வாக்கு

(உழுபவன்....)

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குதூகலப்பாட்டு - இயற்கை

இயற்கையில் எத்தனை இன்பங்களோ - அவை
எல்லாம் இறைவன் கொடை அல்லவோ
அத்தனை இன்பமும் நமக்கல்லவோ - அதை
அனுபவித் திடல் பெரும் பேறல்லவோ

**வேறு**

காலையில் சேவல்கள் கூவிடும் ஒலியில்
ஆயிரம் சுரங்கள் காட்டிடுதே
மாலையில் கன்றுகள் தாய்மடி ஊட்டுதல்
மனதினில் இன்பம் ஊட்டிடுதே

பூக்களை அழைந்திடும் தென்றலின் வாசம்
புதுப்புதுக் கனவுகள் விதைத்திடுதே
பாக்களை இசைத்திடும் வண்டுகள் ஒலியில்
பலவகை ராகங்கள் பிறந்திடுதே

காலைச் சூரிய உதயத்தின் அழகைக்
காண்பது கண்களின் புண்ணியமே
மாலைச் சூரியன் மறைந்திடும் கோலம்
மாபெரும் தத்துவ உண்மையதே

வானத்தில் சந்திரன் முழுநில வானால்
மனதினில் எத்தனை குதூகலமோ
கானத்தை வென்றிடும் காற்றிசை ஒலியில்
கலந்திடும் பாட்டிசை பரவசமே

சிட்டுக் குருவிகள் சிறகினை விரிக்கையில்
சிந்தனை வானில் பறக்கிறதே
தொட்டுத் தழுவிடும் கிளிகளின் மழலைகள்
தேனெனக் காதினை நிறைக்கிறதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

மலர்களின் அழகும் மரங்களின் அழகும்
மனங்களை வெல்லுதல் ஞாயமன்றோ
கலங்கிடும் மனதினைக் கவலைகள் இன்றி
களிப்புறச் செய்வது இயற்கையன்றோ

மான்களும் மயில்களும் மந்திக ளோடு
மகிழ்ந்திடக் காண்போம் கிராமத்திலே
ஆண்களும் பெண்களும் அன்பினில் சமமாய்
அடையும் குதூகலம் ஆனந்தமே

மழைமுகில் கண்டு ஆடிடும் மயில்கள்
மனதினைச் சுண்டி இழுத்திடுமே
கிளைகளில் ஓடிக் கீச்சிடும் அணில்கள்
கீர்த்தனைப் பாக்கள் இசைத்திடுமே

சித்திரை பிறந்தால் குயிலின் கீதம்
சிந்தையில் தென்றலாய்ச் சிலிர்த்திடுமே
நித்திரைக் கனவிலும் சில்வண் டோசை
சில்லென நிழலாய்க் குளிர்த்திடுமே

ஆயிரம் ஆயிரம் இன்பங்கள் உண்டு
அனைத்தும் இறைவன் கொடையல்லவோ
ஆயினும் அவற்றில் மகிழா திருப்பது
அறிவிலிகள் செய்யும் செயலல்லவோ.

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிக்குடிகள்

### நடனப் பாடல்

ஆ ஹா ஹா ஓ ஹோ ஹோ
தந்தனத் தந்தனத் தந்தனத் தந்தன

காட்டு வாழ்க்கை எங்கள் வாழ்க்கை
கல்லும் முள்ளும் எங்கள் மெத்தை
ஆட்டு மந்தை மாட்டுக் கூட்டம்
அண்டிப் பிழைக்கும் யாவும் உறவு.

(ஆஹா ஹா.....)

பன்றி முயல் மான் மரைகள்
பருத்த உடும்பு காட்டுக் கோழி
தின்று பசி ஆற நாங்கள்
துரத்திப் பிடித்து அடித்துக் கொல்வோம்

(ஆஹா ஹா.....)

**வேறு**

மானைத் துரத்தியே மறித்துப் பிடிப்போம் - கொம்பு
மரையைக் கலைத்ததன் கொம்பை முறிப்போம்
தேனைத் தினைமாவைச் சேர்த்துக் குழைத்தே---நாம்
சேர்ந்து மகிழ்ந்தொன்றாய் உண்டு களிப்போம்

(ஆஹா ஹா....)

**வேறு**

கல்லைத் தட்டி நெருப்பை மூட்டுவோம்
கத்தி வாயால் ஒலியை எழுப்புவோம்
ஓ ஹோ ஓ ஹோ ஓ ஹோ ஓ ஹோ
பொல்லை எறிந்து முயலைக் கொல்லுவோம்
புலியைக் கூடக் கலைத்து வெல்லுவோம்

(ஆஹா ஹா....)

**வேறு**

இடிக்கும் மழைக்கும் நாம்
பயந் தோடி ஒளியோம் - காற்று
அடிக்கும். மலை யெல்லாம்
வெடிக்கும். நாம் அஞ்சோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

கடிக்கும் விஷப் பாம்பைக்
கையால்ப் பிடிப்போம் - கரடி
கடிக்க வந்தால் அதைக்
காலால் அடிப்போம்

(ஆஹா ஹா.....)

வேறு

கல்லும் பொல்லுந்தான் கையாயு தங்கள்
காட்டு விலங்குகளைக் கொல்லும் இவைகள்
மான் வாரும் மரநாரும் கயிறாகும் எமக்கு
மரைத் தோலும் மான் தோலும் செருப்பாகும் எமக்கு

(ஆஹா ஹா.....)

வேறு

மர நிழலும் மலைக் குகையும்
வீடாகும் நமக்கு
மழை வெயிலும் பனிக் குளிரும்
உறவாகும் நமக்கு

(ஆஹா ஹா.....)

வேறு

மயிலோடு போட்டிக்கு
மகிழ்ந் தாடிக் களிப் போம் - காட்டு
மந்தியொடு குந்தியன்பாய்
மரந் தாவிக் குதிப் போம்

(ஆஹா ஹா.....)

வேறு

கண்ணாலே கதைபேசி காதலெனும் வலை வீசி
ஆ ஹா ஹா.... ஓ ஹோ ஹோ

(கண்ணாலே....)

ஆணும் பெண்ணும் அன்பில் ஒன்றாய்ச் சேருவோம் - எந்த
ஆபத்திலும் ஒற்றுமையாய் உதவுவோம்

வேறு

கள்ளம் கபடம் இல்லை
கழுத் தறுக்கும் சூழ்ச்சி யில்லை
கொள்ளை பொறாமை யில்லை
குரோதம் மனதில் இல்லை
உள்ளம் வெள்ளை உடல் கறுப்பு பாருங்கள் - இந்த
உலகத்திலே ஆதிக் குடிகள் பாருங்கள்
ஆ ஹா ஹா ஓ ஹோ ஹோ
தந்தனத் தந்தனத் தானத் தந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவிட்டு நாடுசெல்ல வில்லையம்மா...

நாடுவிட்டு நாடுசெல்ல வில்லையம்மா - நாங்கள்
பாடுபட்டு விளைவித்தோம் நெல்லையம்மா

ஏர் பூட்டி உழவு செய்து
எரு போட்டு நீர் பாய்ச்சி
பார் பார்த்து நடவு நட்டு
பக்குவ மாய்க் களை பறித்து,

கார் பார்த்து கதிர் அறுத்து
காவல் காத்து விளை வெடுத்து
ஊரோடு சேர்ந்து உண்ணும் உழவரம்மா - இந்த
உலகத்தையே வாழவைக்கும் மனிதரம்மா

(நாடுவிட்டு ....)

**வேறு**

காடு வெட்டி உடல் களைத்தோம்
கடும் வெயிலில் மனம் இளைத்தோம்
பாடு பட்டுப் பயிர் வளர்த்தோம்
பகல் இரவாய்க் கண் விழித்தோம்

நாடுவிட்டு நாடு செல்ல வில்லையம்மா - நாங்கள்
நல்லவிவ சாயம் செய்தோம் நெல்லையம்மா

(ஊருக்கெல்லாம் ....)

**வேறு**

மரக் கறிகள் கிழங்கு வகை
மாடு ஆடு கோழி என

மண்ணை நம்பி தொழில் புரியும் மாந்தரம்மா - நாங்கள்
மண் வாழப் பாடு படும் வேந்தரம்மா

(ஊருக்கெல்லாம் ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

மண்ணை நாம் பாதுகாத்தால்
மண் நம்மைப் பாதுகாக்கும்
மண் இன்றி மக்கள் இல்லை
மரங்கள் உயிர் எதுவு மில்லை

மண் அன்னை மனம் மகிழ்ந்தால்ப்
பஞ்சம் இல்லை - மண்ணில்
மனிதரெல்லாம் வாழ்ந்திடலாம்
துன்பமில்லை

(ஊருக்கெல்லாம் .....)

புதிய புதிய நெல் இனங்கள்
புதிய புதிய பயிர் இனங்கள்
புதிய புதிய இயந் திரங்கள்
புதிய புதிய வழி முறைகள்

நாமும் பயிர் வளர்த்திடுவோம் வாருங்கள் - இந்த
நாடும் உயர் வடையுமென்று பாடுங்கள்

(ஊருக்கெல்லாம் .....)

வேறு

நல்ல இனப் பயிர் நடுவோம்
நல்ல இயற்கை உரம் இடுவோம்
நல்ல முறையில் வளர்த் திடுவோம்
நல்ல பயன் பெற் றிடுவோம்

நமக்குதவ வல்லுனர்கள் பலருண்டு - இந்த
நல்ல வாய்ப்பி னால் நமக்குப் பலனுண்டு

(ஊருக்கெல்லாம் .....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாப் பிரதேச சமகால வாழ்நிலை

**(1990 களின் நடுப்பகுதி)**

**அபிநயப்பாடல் - குழு**

மகிழ்ச்சி....

துள்ளிக் குதித்து மான்கள் ஓடும்
தோகை விரித்து மயில்கள் ஆடும்
பல்லுக் காட்டி மந்தி சிரித்துப்
பாய்ந்து மரத்தில் தாவி ஏறும்

முயல்கள் மான்கள் மரைகள் எல்லாம்
மேய்ந்து திரிந்து மகிழ்ந்து துள்ளும்
கொக்குக் குருவி பறவை எல்லாம்
திக்குத் திக்காய்ப் பறந்து திரியும்

**வேறு**

குளம் நிறைந்த தா மரைகள்
வளம் நிறைந்த நெல் வயல்கள்
இயற்கை வளம் நிறைந் திருக்கும்
எல்லாச் சிறப்பும் கொண் டிருக்கும்

பட்டி நிறைந்த பசு மாடு
பால் நிறைந்த சிறு வீடு
கொட்டிக் கிடக்கும் பழக் காடு
கொண்ட தெங்கள் வவுனியா மண்

இயற்கை அழகும் இயற்கை வளமும்
இணைந்த எங்கள் வவுனி யாவில்
என்ன இல்லை என் றிருந்தோம்
எல்லா மகிழ்வும் கொண் டிருந்தோம்

**வேறு**

கவலை....

போர் மேகங்கள் வானிலே சூழ்ந்து
குண்டு மழையைப் பொழிந்த தனாலே
பார் நிலமெங்கும் துன்பம் பரந்தது
பலப்பல அகதி முகாம்கள் நிரம்பின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீடு

ஒருவர் :- வாடகைக்கு வீடு வேணும்
மற்றவர் :- ஐம்பதாயிரம் அட்வான்ஸ்
ஐயாயிரம் வாடகை
ஒருவர் :- வேறவழி ஒண்டு மில்ல
வரட்டே நான் நாளைக்கு
மற்றவர் :- கொஞ்சம் பொறுங்கோ
கொஞ்சம் பொறுங்கோ
அட்வான்ஸ் தந்தால்
அடுத்த மாதம்
கட்டித்தாறன் நல்ல வீடு
ஒருவர் :- ஆ....அதுவரைக்கும்

### நிலம்

ஒருவர் :- பரப்பொண்டு வாங்கி
வீடொண்டு கட்டினாப்
பாரங் குறையும்
பரப்பு என்ன விலை

மற்றவர் :- பரப்பு நாலு லட்சம்
மற்றவர் :- அப்ப ஒரு பிடி மண்
ஆயிரம் ரூபாய் வரும்

### தொலைபேசி

தாய் :- பிள்ளைய விட்டக் காசனுப்பச் சொல்லிக்
கதைப்பம்
வண் டச் கோல் ஒண்டு தாமோன

தொலை பேசிக் காரர் :- ஆச்சி இரண.இந்தா பேசு
தாய் :- ஹலோ! ஹலோ!
மோன சுகமே....(அழுகிறார்)
மகன் :- அழாத எண....அழாத
அழ அழக் காசு ஏறுது
என்னண்டு சொல்லன்
தாய் :- காசு அனுப்பு மோன....காசு
மகன் :- எங்க இருக்கிறியள்
தாய் :- அகதி முகாமில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாஸ் - பாஸ்

ஆமி :- பாஸ் - பாஸ்
ஒருவர் :- சோதனைமேல் சோதனை
போதுமடா சாமி
மற்றவர் :- சாமி இல்ல ஆமி
ஆமி :- ஆச்சி எங்க பாஸ்
எங்க பாஸ்
ஆச்சி :- எனக்கு வயசு எழுபது மோன
நானே குண்டுவைக்கிற ஆள்.
நீ தான் துவக்கு குண்டு
எல்லாம் வைச்சிருக்கிறாய்

### நிவாரணம்

முதியவர் :- விதானையார்!
எனக்கும் நிவாரணச் சாமான் தாங்கோ
விதானையார் :- உங்கட பிள்ளையள் எங்க அப்பு
முதியவர் :- மூத்தவன் கனடாவில
அடுத்தவன் சுவீசில
இளையவன் ஜெர்மனியில
பெட்டையள் ரெண்டும் பரீசில
நான் நடுரோட்டில
விதானையார் :- அப்ப பிறகேன் நிவாரணம்.
வெய்யில்ல காஞ்சு ஏறி இறங்கி
கஷ்டப்பட்டு
நிவாரணச் சாமான் எடுக்கத்தான் வேணுமோ
முதியவர் :- (சிரிப்பு) சும்மாதாறத ஏன்மோன விடுவான்

எல்லோரும் ஆடிப்பாடுதல்

இவை யெல்லாம் மாற வேண்டும்
இன்ப நிலை தோன்ற வேண்டும்
மயில்கள் மீண்டும் ஆட வேண்டும்
குயில்கள் பாட்டுப் பாட வேண்டும்
ஆண்டவா எங்கள் ஆண்டவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயலும் வாழ்வும்

[நடனம்]

மருதம் எங்கள் நிலமாம் - மந்த
மாருதம் வீசும் தினமாம்
எருதும் மாட்டெருவும் - வண்டில்
ஏரும் நுகத் தடியும் உறவாம்

(மருதம் ....)

**வேறு**

மந்தி இனங்கள் குந்தி எழுந்து
தெந்தெனத் தோமெனத் தாவிடும் சோலை
விந்தை மிகுந்திடும் வண்டுகள் பாடச்
சிந்தை மகிழ்ந்து மயில் நடமாடும்

(மருதம் .....)

**வேறு**

வயலோடு வயல் சார்ந்த நிலமாகப் போற்றும்
வளமான மருதமெனும் நிலமெங்கள் நிலமே
கயலோடும் குளத்தினிலே கருங்குவளை மலரும்
கன்னியிள வாளைமீன் கரையேறித் தாவும்

(மருதம் ....)

**வேறு**

பாருக் கெல்லாம் அச் சாணி,
பலர் உயர நாம் ஏணி
படிய எக்கும் கடவுளர்கள் நாங்களம்மா - இதைப்
பாடி வைத்த வள்ளுவன் எம் பாட்டனம்மா

காடு வெட்டிப் பாடு பட்டுக்
கட்டாந் தரையை வள மாக்கி
நாடு செழிக்க உழைப்பவர்கள் நாங்களம்மா - எந்த
நாளும் மண்ணில் நமக்கு நிகர் நாங்களம்மா

(மருதம் ....)

நெற்றி வியர்வை விதை விதைத்து
உடல் வியர்வை நீர் பாய்ச்சி
சுற்றிச் சுற்றிக் காவல்காத்துப் பயிர்வளர்த்தோம் - உலகின்
சுற்றும் முற்றும் நாகரிகம் நாம் வளர்த்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் மழையைத் தந் தெமது
வயல் விளைய உதவி செய்த
சூரியனை நாம் மறவோம் பொங்குவோம் - சுற்றம்
சூழவிருந் துண்டு நன்றி சொல்லுவோம்
(மருதம் .....)

விருந் தினரை உப சரிப்போம்
வேண்டி யதை உப கரிப்போம்
வருந்தி வந்து இரந்து நிற்கும் ஏழைகளை - என்றும்
வாழவைத்து ஆதரித்து அரவணைப்போம்
(மருதம் .....)

**வேறு**

சுழலும் உலகப் பந்தைச்
சுழற்றும் கைகள் எங்கள்
சுறுசுறுத்த தொழிலாளர் கைகளே - உழவுத்
தொழிலினது மேன்மை இவை மெய்களே
(மருதம் .....)

**வேறு**

கம்பன் எம்மைப் புகழ்ந்தான் - ஔவை
கவி வடித்து மகிழ்ந்தார்
நம்மைப் போன்று பேறுபெற்றோர் யாருண்டு - இந்த
நானிலத்தில் நமக்கு நிகர் யாருண்டு
(மருதம் ....)

✽✽✽✽✽✽✽✽✽✽✽✽✽



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றுமையே எங்கள் உயிர் மூச்சு...

ஒற்றுமையே எங்கள் உயிர் மூச்சு - இதை
உணரா தவர்கதை வெறும்பேச்சு
வேற்றுமை வளர்த்திடில் வீணாவோம் - தெரு
வீதியில் நாதியில் பிணமாவோம்

(ஒற்றுமையே ....)

சாதி எனும் ஊத்தைச் சாக்கடையை - அன்புச்
சந்தன மழையினால் போக்கிடுவோம்
நீதிஒன்றே நல்ல சமத்துவமே - அதை
நித்தமும் ஓங்கி ஒலித்திடுவோம்

சமய வழிகள் பல இருந்திடலாம் - அவை
சமூக உறவுகளை மறுப்பதில்லை
அமையும் மொழியிங்கு அவரவர்க்கு - இதில்
ஆயிரம் சண்டைகள் தேவையில்லை

(ஒற்றுமையே ....)

ஏழையும் செல்வனும் எம்முறவே - பெருங்
கோழையும் வீரனும் எம்முறவே
நாளைய வாழ்வினி நல்லவர்க்கே - இதை
நானிலம் கேட்கட்டும் சொல்லிவைப்போம்

வானமும் வையமும் பொதுவாகும் - வானில்
வருகின்ற கோள்களும் பொதுவாகும்
ஏனினி வேற்றுமை எழுமனிதா - இங்கு
எல்லோர் இரத்தமும் சிவப்பாச்சே

(ஒற்றுமையே ....)

***************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரணியர் பாட்டு

**பல்லவி**

தயாராய் இருப்போம் - நாங்கள் என்றும்
தயாராய் இருப்போம்
சாரணியர் நாங்கள் என்றும்
தயாராய் இருப்போம்

(தயாராய் .....)

**அனுபல்லவி**

தியாகமும் கடமையும் செய்வதில் உறுதியாய்
தயாராய் இருப்போம் - நாங்கள் என்றும்
தயாராய் இருப்போம்

**சரணம்**

நாட்டுக்கு நன்மை செய்திடுவோம் எங்கள்
வீட்டுக்கும் கடமை செய்திடுவோம்
வாட்டும் துயரினில் வாடும் மனிதர்க்கு
வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்வோம்

(தயாராய் .....)

ஊருணி நீர்நிறைந் துள்ளது போலே
சாரணி யர்நாம் பயன் படுவோம்
காரணி அன்பே உலகநன் மைக்கெனச்
சாரணி யர்நாம் வாழ்ந் திடுவோம்

கடமை கண்ணியம் கட்டுப் பாடெங்கள்
உடமை எனநாம் உணர்ந் திடுவோம்
மடமை அகற்றி மண்ணில் சகோதர
மனநிலை யைநாம் வளர்த் திடுவோம்

சாரணி யர்எங்கள் கௌரவம் இந்தச்
சகத்தினில் நம்பத் தகுந்தது வாம்
சாரணி யர்சொல் செயல்மனம் மூன்றும்
சாதா ரணமல்லத் தூய்மைய தாம்

பொறுமை பணிவு சிக்கனம் எங்கள்
பெருமை என்றே பேணுகின் றோம்
அருமை இதனொடு அனைத்துயிர் மீதும்
அன்பு செலுத்தி மகிழ்ந் திடுவோம்

சாரணி யர்நாம் சாரணி யர்களைச்
சகோதரி யாகவே மதித் திடுவோம்
தாரணி யில்நாம் நட்புணர் வோடு
தங்கங்க ளாகவே ஜொலித் திடுவோம் (தயாராய் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்தத்தினை விதைப்போம்

**பல்லவி**

வானத்துக்குக் கீழே வாழுகின்ற உயிர்கள்
வானத்துக்கு அஞ்சிடல் அழகாமோ

**அனுபல்லவி**

மானத்துக்கு மேலே வாழுகின்ற மாந்தர்
மரணத்துக்கு அஞ்சியே அழலாமோ
( வானத்துக்குக் ....)

**சரணம்**

தன் இமையைக் காணா கண்ணின் மணி போலே
உன் நிலைமை இருக்குது உணராய்நீ
கண்ணும் கண்ணும் காணாக் கண்கள் ரெண்டும் சேர்ந்து
ஒன்றாய்க் காணும் உலகை உணராய்நீ
( வானத்துக்குக் ....)

உன்னை எண்ணிப் பார்த்து உந்தன் கண்ணை மாற்று
உன்கண் காட்சி தானே உலகாகும்
மண்ணும் விண்ணும் மோதில் மக்கள் உயிர் போகும்
எண்ணும் எண்ணம் உண்டா இம்மண்ணில்
( வானத்துக்குக் ....)

சாநித் தமும் நிகழும் சாதித் தாலே புகழும்
சரித் திரமும் புரளும் கலங்காதே
வாநீஇந்த மண்ணில் வசந்தத் தினை விதை ப்போம்
வரும் குயிலின் இசைஎம் வாழ்வினிலே
( வானத்துக்குக் ....)

***************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவருடப்பிறப்பு - நடனம்

புது வருடம் இன்று பிறக்கின்றது - மனம்
புதிய நினைவு களில் சிறக்கின்றது
இது வரையில் இருந்த இன்னல்கள் மறைந்து
இன்பச் சிறகடித்துப் பறக்கின்றது (புது வருடம்.....)

**வேறு**

புத்தாடை கல கலக்கப்
புன்னகை பள பளக்க
சித்திரை வருடம் இன்று பிறக்கின்றது
சிந்தனை சிறகடித்துப் பறக்கின்றது

எங்கும் புது நினைவு
எங்கும் புது மகிழ்வு
எங்கும் கல கலப்பாய் இருக்கின்றது
எங்கள் புதுவருடம் இனிக்கின்றது (புது வருடம்.....)

மாமரக் கிளையில் வாழும்
மணிக்குயில் கூவிப் பாடிப்
பாமர மகிழ்ச்சி பொங்க இசைக்கின்றது
பாலரின் மழலைபோல அழைக்கின்றது

ஊஞ்சலில் சிறுவர் ஆட
உள்ளத்தில் மகிழ்ச்சி கூட
நாஞ்சிறி திருந்து பார்த்தால் லயிக்கின்றது
நந்தெரு எங்கும் வெடிகள் ஒலிக்கின்றது (புது வருடம்.....)

பலகாரம் கையில் கொண்டு
பாலர்கள் வீடு வீடாய்
அழகாகப் போய் வருதல் நிகழ்கின்றது
அன்பாக ஒன்று சேர்தல் இனிக்கின்றது

விளை யாடி மகிழும் பாலர்
வீதி களில் நிறைந்து
விண்முட்டச் சிரிக்கும் ஒலி கேட்கின்றது
விளையாட இன்னும் மனம் துடிக்கின்றது (புது வருடம்.....)

இசையமைப்பு :- கலாபூஷணம் திருமதி.தேவி மனோகரி நாகேஸ்பரன்
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாள் நடனம்

வாளெடுப்போம் போர் தொடுப்போம்
வரும் பகையைக் கொன் றொழிப்போம்
வாருங்கள் - வெற்றி
வீரர்களாய்த் தோள்நிமிர்த்தி வாருங்கள்

### வேறு

உறையி லிருக்கும் வீர வாளை
உருவி யெடுத்து வாருங்கள்
கறைப டிந்த வாளைத் தீட்டிக்
கைப் பிடித்து வாருங்கள்

வெற்றி வெற்றி வெற்றி என்று
வீர முழக்கம் செய்யுங்கள்
சுற்றி வரும் பகைவர் களைச்
சுழன்று சுழன்று கொல்லுங்கள்

வைத்த காலைப் பின் வையாத
வைர மறவர் கூட்டம்நாம்
பொய்த்த தில்லைத் தமிழர் வீரம்
புறங் கொடுத்து வாழ்ந்திடோம்

கோடி கோடி வீரர் வந்து
கோர மாக மொய்க்கினும்
ஓடி ஓடி வீர வாளை
உயர்த்தி விளை யாடுங்கள்

அன்னி யரை எதிர்த்து நின்ற
அரசர் களை எண்ணுங்கள்
அடி பணிந்து வாழ்தல் என்ற
எண்ண மதைத் தள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிலத்தின் இறைமை தன்னை
எண்ணி எண்ணி ஏ குங்கள்
ஏற்றம் மிக்க தமிழர் நாங்கள்
என்ற எண்ணம் கொள்ளுங்கள்
( வாளெடுப்போம்....)

தின வெடுத்த தோள் களுக்குத்
தீனி இன்று கிடைத்தது
மன வுறுதி கொண்ட எங்கள்
மறவர் களே வாருங்கள்

வெற்றி யன்றேல் மரண மென்றே
வீர வார்த்தை பேசுங்கள்
கற்ற வித்தை காட்ட இந்தக்
களத்தை நோக்கி வாருங்கள்

இனத்தை அழிக்க வந்த வரை
எதிர்த்துத் துரத்தி அழித்திடு
வளத்தைக் கவர வந்தவரை
வாட்டி வதைத்துத் தொலைத்திடு

வெற்றி வெற்றி வெற்றி என்று
வீர உரை முழக்கிடு
சுற்றி வரும் பகைவர்களைச்
சூழு ரைத்துத் தொலைத்திடு
( வாளெடுப்போம்....)

**வேறு**

தாளும் மார்பும் தலையும் கையும்
தோளும் அறுந்து தொங்கட்டும்
வீழும் உடல்கள் மலைகளாகி
விண்ணைஅளந்து நிரம்பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

சரித்தி ரத்தில் பெருமை பெற்ற
தமிழ ரென்ற மறவர்நாம்
தரித்தி ரத்தில் உழன்றவரா
தரணி யிலே உயர்ந்தவர்

( வாளெடுப்போம்...)

**வேறு**

மண்ணைப் பொன்னைக் கவர வந்தார்
மானத் தையே பறிக்க வந்தார்
என்ன இந்த உடம்புஒரு கேடா - வந்த
எதிரிகளைக் கொல்ல நீயும் வாடா

கருட வியூகம் அமைத்துக் கொள்வோம்
கவ்விக் கொல்வோம் எதிரி களை
திருட ராக நுழைந்தவரை இன்றே - வென்று
தீர்த்துக் கட்டிப் புகழ்பெறுவோம் கொன்றே

வலிந்து போரைத் தொடங்க மாட்டான்
வந்த போர்க்கு அடங்க மாட்டான்
அழிந்து போகத் தமிழன்என்ன பூச்சியா - மண்ணில்
அவமான உணர்வில் லாத பேச்சியா

(வாளெடுப்போம்....)

**வேறு**

சர்ப்ப வியூகம் அமைத் திடுவோம் - வெட்டிச்
சாய்த் திடுவோம்மண்ணைக் காத்திடுவோம்
கர்ப்பத் திலே தாயுண்ட மண்ணடா - இதைநாம்
காக்க வேண்டும் என்பதனை எண்ணடா

(வாளெடுப்போம்....)

**வேறு**

வெற்றி வெற்றி வெற்றி என்று
வீறு நடை போடு வோம்
வீரம் மிக்க பரம் பரையின்
வேங்கை என்று கூறுவோம்

(வாளெடுப்போம்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

சக்கரமாய் வியூகம் செய் வோம்
சகலரையும் கொன் றொழிப்போம்
உக்கிரமாய்ச் சண்டை செய்வோம்
உசார்!உசார்! உசார்!

(வாளெடுப்போம்....)

**வேறு**

ஓடித் தப்பும் வீரர் களை
ஓட விட்டு வாருங்கள்
காலில் விழும் வீரர்களைக்
கருணை காட்டி அருளுங்கள்

(வாளெடுப்போம்....)

**வேறு**

பண்டார வன்னி யனின்
பரம்ப ரையில் வந்தவர்நாம்
திண்டாட வைத்திடுவோம் பகைவரை - வெற்றி
கொண்டாடி மகிழ்ந்திடுவோம் அனைவரும்

(வாளெடுப்போம்....)

இசையமைப்பு :- கலாபூஷணம் திருமதி.தேவி மனோகரி நாகேஸ்பரன்
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்களம்

வெற்றிவேல்வீரவேல்
வெற்றிவேல் வீரவேல்

குழு 1

வாளெடுப்போம் போர் தொடுப்போம்
விரைந்து வாரும் தோழரே!
தோளெடுத்த தினவு தீர
தொடர்ந்து வாரும் தோழரே!

வேறு

நாடு பிடிக்க வந்து நின்றார்
நமது நாட்டில் எதிரிகள்
பாடு பார்த்து வளைத்துக் கொள்வோம்
பகைவர் களின் சிரங்கள் கொய்வோம்

வளம் மிகுந்த எங்கள் நாட்டை
வாளால் வெல்ல வந்திட்டார்
உளம் நிறைந்த உறுதி யோடு
ஓடி வாரும் தோழரே

குழு 2

நாடு பிடிக்கும் போரில் நாங்கள்
நமது திறமை காட்டுவோம்
ஓடஓட விரட்டி எங்கள்
எதிரி களைக் கொல்லுவோம்.

வெற்றி யினால் எங்க ளுக்கு
வீர வாழ்வு கிடைத்திடும்
கற்ற வித்தை காட்டிடவே
கனன்று வாரும் வீரரே

எங்கள் அரசன் கட்ட ளையால்
இந்தப் போரில் இறங்கினோம்
எதிரி களின் நாடுபிடித்து
எங்கள் வீரம் காட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு 1

எங்கள் மண்ணே எங்கள் தெய்வம்
எங்கள் மண்ணே எங்கள் தாய்
எங்கள் மண்ணைக் காத்து நிற்றல்
எங்களுக்குக் கடமை யாம்

வாள் எடுத்துச் சுழற் றுங்கள்
வளைந்து நெளிந்து வீசுங்கள்
தோள் துணித்துத் தாள் முறித்துத்
தொடர்ந்து முன்னே செல்லுங்கள்

நிம்ம தியாய் வாழ்ந்த நாட்டின்
நிலை குலைக்க வந்தாரே
எம்ம தியின் ஆற்ற லினால்
இந்தப் போரை வெல்லுவோம்

குழு 2

வீர மறவர் நாங்கள் இன்று
வெற்றி வாகை சூடுவோம்
கோர மான கொடிய போரில்
குதித்து விளை யாடுவோம்

இடம் வலமாய் முன் பின்னாக
இருந் தெழும்பி வாளினால்
படம் எடுத்த பாம்பு போல
பகைவர் தலையைத் தள்ளுவோம்

வாளெ டுக்கத் துணிந்த கைகள்
வால் பிடித்து வாழுமா
சூளு ரைத்துத் தோள்கள் தட்டி
துணிந்து போர்க்கு வாருங்கள்

குழு 1

கேடயமும் வாடளும் கொண்டு
கிளர்ந்து வாரும் தோழரே
நாடுகாக்கும் போரில் நாங்கள்
நமது ஆற்றல் காட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

தர்ம யுத்தம் தர்மயுத்தம்
தர்மம் உலகில் தழைக்கவே
கர்ம வீரர் வந்துசேரீர்
கரங்கள் வாளில் பொலியவே

குழு 2

எங்கள் மானம் எங்கள் வீரம்
எங்கள் கையின் வாளிலே
தொங்கிக் குதித்து வாளைச் சுழற்றித்
துரத்தித் துரத்திப் போர் செய்வோம்

தலை முறையின் பெருமை காப்போம்
தாள் பணிந்து திரும்பிடோம்
கொலை முறையே மறவர் செய்கை
கூரிய வாள் வீசுங் கள்

கேட யத்தைச் சுழற்றுங்கள்
கீழும் மேலும் தாவுங்கள்
ஊட றுத்துச் செல்லுங் கள்
உமது வாளைச் செருகுங் கள்

வெற்றிவேல்! வீரவேல்!

(சிலர் இறந்து கிடக்கிறார்கள். போரை நிறுத்தி வெள்ளைக் கொடிகளோடு வீரர்கள் எல்லோரும் வருகிறார்கள். கைகோர்க்கிறார்கள்.)

யாவரும் :
சமாதானம் சமாதானம் சமாதானமே வெற்றியாம்.
சண்டை வேண்டாம் மரணம் வேண்டாம்
சமாதானமே வாழ்க்கையாம்.

சமாதானமே வாழ்வின் வெற்றி
சகலரும் ஒன்றாய் இணைவோம்.
சண்டை இன்றி இந்த உலகில்
சகலருமே வாழுவோம்

இசையமைப்பு :- கலாபூஷணம் திருமதி.தேவி மனோகரி நாகேஸ்பரன்

நடன அமைப்பு :- நிருத்தியவானி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபங்கள் ஏற்றிடுவோம்...

(நடனம்)

**பல்லவி**

தீபங்கள் ஏற்றிடுவோம் திருநாளைப் போற்றிடுவோம்
தீபாவளித் திருநாள் சிறப்புறவே வாழ்த்திடுவோம்

**அனுபல்லவி**

தீபஒளி உலகமெங்கும் சிறப்புகளைக் கொடுத்திடட்டும்
பாபவளி நீங்கி எங்கும் பலநன்மை பெருகிடட்டும்

**சரணம்**

அறியாமை இருளகல அறிவுஒளி ஏற்றிடுவோம்
வறியோர்கள் வாழ்வுயர வழிவகைகள் சாற்றிடுவோம்
பெரியோர்கள் மூத்தோர்கள் பெருமைமிகு ஆசான்கள்
அரியவராம் தாய்தந்தை ஆசிகளைப் பெற்றிடுவோம்

நாட்டுமக்கள் துன்பமுற்று நடுநடுங்கத் துன்பத்திலே
போட்டுவைத்து உலகாண்டான் போரில்வல்ல நரகாசுரன்
பட்டினியாம் படுகுழியில் பதைபதைத்து உயிரொடுங்கி
கட்டளைக்கு அடிபணிந்து காசினியோர் கவலையுற்றார்

இட்டதுதான் சட்டம்அவன் இஷ்டமெதோ அதைச்செய்தான்
பட்டதுயர் கொஞ்சமல்லப் பரிதவித்துத் துடிதுடித்தார்
துட்டனவன் செய்திட்ட துன்பங்களோ பெருகியது
கிட்டவந்து புத்திசொல்லும் கெட்டித்தனம் யார்க்குமில்லை

உலகைக்காக்கும் ஒருகடவுள் ஓங்கிஉல களந்தவராம்
அலகைதன்னைக் கொன்றுபாம்பில் ஆடியதை அடக்கியவர்.
குடையெனவே மலைபிடித்து கூட்டத்தோடு பாதுகாத்து
படைநடத்திப் பாண்டவர்க்குப் பாருலகு கொடுத்தவராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

பாம்பணையில் பள்ளிகொள்ளும் பரந்தாமா கிருஷ்ணாஎன
நாம்வணங்க ஓடிவந்தார் நரகாசு ரனைவதைத்தார்
துன்பஇருள் நீங்கியதே துயரமெல்லாம் அகன்றதுவே
இன்பஒளி ஏற்றிமக்கள் எங்கும்விழாக் கண்டனரே

தீபஒளி ஏற்றியநாள் தீபாவளி ஆகியதே
திருநாளாய் மக்களுக்கு கொண்டாட்டம் ஆகியதே
தீமையெல்லாம் விலகிற்றென்று நாமுமின்று மகிழ்ச்சியிலே
தீபாவளித் திருநாளில் சேர்ந்தொன்றாய் மகிழுகின்றோம்
(தீபங்கள் ஏற்றிடுவோம்....)

இசையமைப்பு :- கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்
நடன அமைப்பு :- கலாபூஷணம் திருமதி துவாரகா கேதீஸ்வரன்
(ரூபவாஹினியில் ஒளிபரப்பாகியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவடி நடனப்பாட்டு

வண்டா டும்மலர்ச் சோலை வாவிகள்
வயல்கள் குளங்கள் வளங்கள் நிறைந்த
கண்டார் புகழும் வன்னிக் கந்தனைக்
கருத்தில் கொண்டுநாம் ஆடுவோம் காவடி

(வண்டாடும்....)

### வேறு

வள்ளி மண வாளன் வடிவேலன் புகழ்பாடி
துள்ளி அடி வைத்துத் துதிபாடி ஆடிடுவோம்
அள்ளி வரந் தருவான் அவன் அபயக் கரந்தருவான்
வள்ள லவன் வடிவழகை வாயார வாழ்த்திடுவோம்.

(வண்டாடும்....--)

### வேறு

ஆறு முக வடி வேலன் - உமை பாலன்
வள்ளி லோலன் - அவன்
அடி தாங் கிடும் மயில் வா கனம்
கொடியாய் வரும் - சேவல்
விடிவே தரும் - உண்மை
அது நன்மை
வெகு மேன்மை

( வண்டாடும்....)

### வேறு

சூரர் தொகை அழித்த
சுடர்வேலன் எமைக் காப்பான்
போரில்லாப் புதுவாழ்வு
புலரும் இனிப் பூமியிலே
ஊரெல் லாம் மகிழ்ச்சிபெறும்
உற வெல்லாம் இன்பமுறும்
பாரெல் லாம் அவன்புகழைப்
பாடிட நாம் ஆடிடுவோம்

(வண்டாடும்....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்மி நடனம்

வாருங்கள் வாருங்கள் தோழியரே - நாங்கள்
வட்ட மிட்டே கும்மி கொட்டிடு வோம்
ஊரும் உறவும் நிலை பெறவே - நாங்கள்
ஒன் றாகக் கைகொட்டி ஆடிடு வோம்

(வாருங்கள்...)

**வேறு**

செந்தமிழ் என்றும் செழிப்புறவே - எங்கள்
தேசம் செழித்து விழிப்புறவே
நந்தமிழ் மக்கள் களிப்புறவே - இந்த
நாட்டில் அமைதி நிலைபெறவே

(வாருங்கள்...)

யுத்தக் கொடுமைகள் நீங்கிடவே - நாட்டில்
யுத்த வடுக்கள் அழிந்திடவே
புத்தம் புதுஉல காக்கிடவே - நாங்கள்
பூரித்துக் கைகொட்டி ஆடிடுவோம்

(வாருங்கள...)

கல்வி ஒழுக்கம் கலைகளெல்லாம் - மண்ணில்
களித்துச் செழித்து வளர்ந்திடவே
பல்லினத் தோரும் சகோதரராம் - என்று
பாடியே கூடிநாம் ஆடிடுவோம்

(வாருங்கள்...)

ஏழைகள் ஏற்றத்தாழ் வில்லாத - ஒரு
இன்ப உலகு படைத்திடுவோம்
நாளைய சந்ததி நலம்பெறவே - மூட
நம்பிக்கைப் பெருஞ்சுவர் உடைத்திடுவோம்

(வாருங்கள்...)

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோலாடுவோம்...

கோ லாடுவோம் நாங்கள் கொண் டாடுவோம்
குதூ கலமாய் ஒன்று சேர்ந்து பண் பாடுவோம் (கோலாடுவோம்....)

**வேறு**

ஆல காலம் உண்டவனை
அடியவர்க்குத் தொண்ட னவனை
கோலாகல மாகக் கூடிக்
கோ லாடி வணங்கிடுவோம் (கோலாடுவோம் ....)

வளம் நிறைந்த வன்னியிலே
மயில்நிறைந்து நடனஞ் செய்யும்
குளம் நிறைந்த தாமரைகள்
கும்பிட்டுப் பூசை செய்யும்

குயில்க ளெல்லாம் பாட்டிசைக்கும்
குரலெடுத்து வண் டொலிக்கும்
மயில்கள் போன்ற கன்னியர்கள்
மகிழ்ந்திடவே சிலம் பொலிக்கும்

கார்த்திகைப் பூப் பூத்திருக்கும்
கண்கள் போலப் பாத்திருக்கும்
வேர்த்து வரும் உழவனுக்கு
வீசுதென்றல் காத் திருக்கும்

மான் மரைகள் நிறைந்திருக்கும்
வனத்தில் அழகு சிறந்திருக்கும்
தேன் மலர்கள் செறிந்திருக்கும்
தேன் ஈக்கள் பறந்திருக்கும்

மடிநிறைந்து பசுக்க ளெல்லாம்
வழிநெடுகப் பால் சொரியும்
கொடிநிறைந்து பூக்க ளெல்லாம்
குதூகலமாய்ச் சிரித் திருக்கும்

மருதநில வளத்தைப் பாடி
மனிதர்குண நலத்தைப் பாடி
கருதரிய சிவத்தைப் பாடிக்
கைத் தடிகொண் டாடிடுவோம் (கோலாடுவோம் ....)

இசையமைப்பு :- கலாபூஷணம் திருமதி.தேவி மனோகரி நாகேஸ்பரன்
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணன் நடனம்

### (கண்ணன் யாவருக்கும் சொந்தம்)

பாத்திரங்கள் - நான்கு கண்ணர்கள், ஏழுக்கு மேற்பட கோபியர்கள்

கோபி : 01
கண்ணனைக் கண்டீரோ கோபியரே? - என்
கண்ணனைக் கண்டீரோ கோபியரே?

ஜமுனா நதிக்கரையில்
தனியாய் நிறுத்திச் சென்ற
(கண்ணனைக்....)

என்னைத் தனிமையிலே
ஏங்கித் தவிக்க விட்டு
எங்கு சென்றானோ அவன்
ஏதும் அறியேனே
(முதலாவது கண்ணன் மேடைக்குவர அவனருகில் சென்று நிற்கிறாள்)

கோபி : 02
கண்ணனைக் கண்டீரோ கோபியரே? - என்
கண்ணனைக் கண்டீரோ கோபியரே?

நேற்றைய மாலை நேரம்
நீர்க்கரைச் சோலை யிலே
காற்றென வே வந்தென்
கைகளைப் பற்றிய என்

கண்ணனைக் கண்டீரோ கோபியரே? - என்
கண்ணனைக் கண்டீரோ கோபியரே?

ஆற்றங் கரைக் கொடியின்
அழகான பூக்க ளினை
நேற்று என் தலையில் சூடி
நிலவினில் ஆடிய என்
(கண்ணனைக்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இரண்டாவது கண்ணன் மேடைக்குவர அவனருகில் சென்று நிற்கிறாள்)

கோபி : 03
கண்ணனைக் கண்டீரோ கோபியரே - என்
கண்ணனைக் கண்டீரோ கோபியரே

காத்தி ருந்த என்னைக்
கலங்க வைத்துக் கையால்
சேர்த்திரு கண்கள் பொத்தித்
திகட்டாத இன்பம் தந்த

கண்ணனைக் கண்டீரோ கோபியரே? - என்
கண்ணனைக் கண்டீரோ கோபியரே?

புல்லாங் குழல் ஒலியில்
பூமியும் புளக முற
எல்லை யில்லா இன்பம்
எனக்கு வழங்கிய என்

(கண்ணனைக் கண்டீரோ...)

(மூன்றாவது கண்ணன் மேடைக்குவர அவனருகில் சென்று நிற்கிறாள்)

கோபி : 04
கண்ணனைக் கண்டீரோ கோபியரே? - என்
கண்ணனைக் கண்டீரோ கோபியரே?

வானத்து நீல நிறம்
வடிவத்தி லே கொண்டு
வளைக் கரத்தைப் பிடித்து
மாலையாய்ச் சூடிய என்

கண்ணைக் கண்டீரோ கோபியரே? - என்
கண்ணனைக் கண்டீரோ கோபியரே?

பின்னலைப் பிடித் திழுத்துப்
பித்தனைப் போல் நடித்து,
பித்தாக்கி என்னையே தன்
சொத்தாக்கிப் பிரிந்து சென்ற

(கண்ணனைக்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நான்காவது கண்ணன் மேடைக்கு வர அவனருகில் சென்று நிற்கிறாள் )

புல்லாங்குழல் ஒலிக்கிறது. நான்கு கோபியர்களும், ஏனைய கோபியர்களும் மயங்குகின்றனர். கண்ணர்களும் மறைகின்றனர். பின் மயக்கந்தெளிந்து நான்கு கோபியர்களும் தனித்தனி

கண்ணனைக் கண்டீரோ கோபியரே? - என்
கண்ணனைக் கண்டீரோ கோபியரே?

பார்க்கும் இடத்தில் எல்லாம்
நீக்கம் அற நிறைந்து
பாவை என் கண்ணின் மணிப்
பாவை எனக் கலந்த

(கண்ணனைக்...)

ஒருகண்ணன் மட்டும் வர நால்வரும் அருகில் செல்கின்றனர்

கோபி : 01
இவனே என் கண்ணனாவான்
இவனின்றி என்ன ஆவேன்

(அருகில் சென்று நிற்கின்றாள் )

கோபி : 02
நானே இவனின் அன்பு
நாயகி யாவேன் போடி

(விரட்டுகிறாள்.)

கோபி : 03
மானே உண் கண்களாலே
மயக்கிடக் கூடுமோடி

(இருவரையும் விரட்டுகிறாள்)

கோபி : 04
உள்ளத்தில் கலந்து விட்ட
உத்தமக் கண்ணனை நீ
கள்ளத்தி னாலே வென்று
கவர்ந்திடல் ஆகு மோடி

(மூவரையும் விரட்டுகிறாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபி : 01
உயிரினில் ஒன்றிவிட்ட
ஓவியக் கண்ணனை நீ
பயமின்றிக் கவர்ந்து செல்லப்
பார்த்திருப் பேனோ போடி
(மற்றவர்களை விரட்டுகிறாள்)

கோபி : 02 கண்ணன் எனக்கே சொந்தம்
கோபி : 03 காதலன் எனக்கு அவன்
கோபி : 04 கண்ணிலே நிறைந்தான் கண்ணன்
கோபி : 01 கருத்திலே செறிந்தான் கண்ணன்
(புல்லாங்குழல் ஒலிக்கிறது. அனைவரும் மயங்குகின்றனர். பின் தெளிந்து )

எல்லோரும் : (ஒற்றுமையாக )
கண்ணனைக் கண்டு கொண்டோம்
கோபியர் நாம்
கருத்திலே புரிந்துகொண்டோம்
கண்ணனை நாம்

எண்ணத்தில் அவன் நிறைந்து
எல்லோர் மனத்தும் உள்ளான்

யாவர்க்கும் அவன் உறவாம்
யாவர்க்கும் அவன் பொதுவாம்

அன்புடன் ஆடிப் பாடி
அவனை நாம் வணங்கிடுவோம்

(கண்ணனைச் சுற்றி ஒற்றுமையாக ஆடுகின்றனர்)
சுபம்

இசையமைப்பு :- கலாபூஷணம் திருமதி.தேவி மனோகரி நாகேஸ்பரன்
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் நேற்று இன்று நாளை

[நடனம்]

அடுப் படிக்குள் முடங்கிக் கிடந்தோம் அந்த நாள்
அகிலம் வியக்க நிமிர்ந்து விட்டோம் இந்த நாள்
தடுப் பதற்கு யாரு மில்லை வளர்ந் திட்டோம்
தரணி ஆளும் பெண் களென உயரு வோம்

(அடுப்படிக்குள் .....)

ஏட்டைத் தொடக் கூடா தென்றார் அந்த நாள்
எழுதப் படிக்கக் கூடா தென்றார் அந்த நாள்
வேட்டை மனம் கொண்ட வர் போல் பெண்களை
வேட்டை யாடி ருசித் திருந்தார் அந்த நாள்

சிரிப்ப தற்கும் தடை யிருந்தது அந்த நாள்
சிந்த னைக்கும் தடை யிருந்தது அந்த நாள்
எரித் திடுவார் கணவன் இறந்தால் அந்த நாள்
எதிர்த்துக் கேட்டால் தொலைத் திடுவார் அந்த நாள்

அடித்துக் கொடுமைப் படுத்தினார்கள் அந்த நாள்
அச்சு றுத்தி அடக்கி ஆண்டார் அந்த நாள்
கடித்துக் குதறி இரத்தம் குடிக்கும் மிருக மாய்
கசக்கிப் பிழிந்து பயன் அடைந்தார் அந்த நாள்

(அடுப்படிக்குள் .....)

வாக் குரிமை எமக்கு இல்லை அந்த நாள்
வாழ்க்கைப் பட்டால் பிரிய முடியா தந்த நாள்
சொத் துரிமை எமக்கு இல்லை அந்த நாள்
சொந்தச் சுகம் ஏது மில்லை அந்த நாள்

பிள்ளை பெறல் சமைத்துத் தரல், கணவனின்
பின் தூங்கி முன் எழுதல், வேலைகள்
எள்ள ளவும் சலிப்பில்லாது செய்வதே அன்று
எங்கள் நிலை என்ன சுகம் அவற்றிலே

(அடுப்படிக்குள் .....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துப் பட்டம் பெறுகின் றோமே இந்த நாள்
பல தொழிலும் புரிகின் றோமே இந்த நாள்
கடித்துக் குதற முடி யாது இந்த நாள்
கடுமை யான சட்டம் உண்டு இந்த நாள்

சரி நிகர் சமானம் இல்லை அந்த நாள்
சமத்து வத்தில் நிமிர்ந்து விட்டோம் இந்த நாள்
உரிய தகுதி கிடைக்க வில்லை அந்த நாள்
உயர்ந்த தகுதி அடைந்து விட்டோம் இந்த நாள்

பாராளும் தகுதி பெற் றோம் இந்த நாள்
பாவை என்ற பெயரை விட்டோம் இந்த நாள்
ஊரார்கள் உல கோர்கள் போற்றவே - இன்று
உயர்ந்து விட்டோம் திறமையாலே உண்மையே
(அடுப்படிக்குள் .....)

**வேறு**

நாளை உலகம் பெண்கள் கையில்
நாங்கள் இந்த உலகை வெல்வோம்
கோழை என்ற பொய்யை வென்று
குனிந்த தலை நிமிர்ந்து நிற்போம்

✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤✤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் - சக்தி

[நடனம்]

### பல்லவி

பெண்ணுக்கு இணையாய் எதுவுமில்லை - மண்ணில்
பெண்ணில்லை என்றால் எதுவுமில்லை

### அநுபல்லவி

கண்ணுக்கு ஒளியாய் இருப்பவள் பெண் - கேட்கும்
காதுக்கு ஒலியாய் இருப்பவள் பெண்

(பெண்ணுக்கு ....)

### சரணம்

பெண்ணே சூரிய வெப்பமுமாம் - எங்கும்
பெண்ணே நிலவின் குளிர்ச்சியுமாம்
பெண்ணே ஆக்கத்தின் மூலமுமாம் - என்றும்
பெண்ணே அழிவின் காலமுமாம்.

காளியாய் அகோர வடிவெடுப்பாள் - அவள்
கண்ணகி ஆகியும் அரசழிப்பாள்
ஊழியாய் மாறி உலகழிப்பாள் - தன்
உதிரத்தில் இருந்து உயிர்வளர்ப்பாள்

(பெண்ணுக்கு ....)

### வேறு

புனலாய் அழிப்பாள் புயலாய் அடிப்பாள்
கனலாய் எரிப்பாள் சக்திஅவள்
பூவாய்ச் சிரிப்பாள் புல்லாய்ச் சிலிர்ப்பாள்.
பூமியின் ஆதார சக்திஅவள்.

(பெண்ணுக்கு....)

### வேறு

அர்த்தநா ரீஸ்வரர் சரிபாதி
அகிலத்தில் யாவிலும் இதுநீதி
நர்த்தனம் ஆடியே சிவனுடனே
நானிலம் இயங்கிடச் செய்திடுவாள்.

(பெண்ணுக்கு....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

தாயாய் அன்பு சொரிந்திடும் தெய்வம்
தாரமாய் அன்பில் நெகிழ்ந்திடும் தெய்வம்
பேயாய் பிள்ளை பிறந்துவிட் டாலும்
பேணி வளர்த்திடும் பெருந் தெய்வம்

பொறு மையிலே அவள் பூமியுமாம்
பெரு மையிலே அவள் ஆகாயம்
எரி மலையாகக் கொதித் தெழுவாள்
எரித்தே அழித்தே பகை முடிப்பாள்.

(பெண்ணுக்கு ....)

**வேறு**

அன்புக்கு வடிவம் அருளுக்கு உருவம்
அதுதான் பெண்ணுக்குத் திரு உருவம்
பண்புக்கு வடிவம் பாசத்தின் உருவம்
பாரினில் பெண்ணின் திரு உருவம்

நீரும் பெண்ணே நெருப்பும் பெண்ணே
நீள்கடல் மலைநதி யாவும் பெண்ணே
பாரும் பெண்ணே வானும் பெண்ணே
பல்லுயிர் வளர்த்திடும் காற்றும் பெண்ணே

(பெண்ணுக்கு ....)

**வேறு**

கல்விக்குத் தெய்வம் கல்வியும் கற்பாள்.
காத்திடும் சக்தி ஆட்சியும் செய்வாள்
செல்வத்தின் தெய்வம் செல்வந்தி ஆவாள்
தேசத்தில் எல்லா உயர்வையும் காண்பாள்

அடக்குவோம் என்றே யாரும் நினைத்தால்
அடங்காப் புயலாய் ஆர்த்தெழு வாளே.
முடக்குவோம் என்றே முயன்றால் அவளே
மூடரை அழித்திடும் மூர்க்கம் கொள்வாளே

(பெண்ணுக்கு ....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேறு

தாயாய்த் தாரமாய்த் தங்கையாய்த் தமக்கையாய்
சேயாய்த் தோழியாய் மதித்திடுங்கள்
நாயாய்ப் பேயாய் நலிவாய் நினைப்போர்க்கு
நாசம் விளைத்திடக் கொதித் தெழுங்கள்.

பெண்களும் ஆண்களும் சரிசம மாகவே
பேறுகள் யாவிலும் உரிமை கொள்வோம்
எண்களும் எழுத்தும் சேர்ந்ததே கல்வி
என்பது போலவே வாழ்ந் திடுவோம்

(பெண்ணுக்கு ....)

### வேறு

பெண்ணே வாழ்க பெண்ணே வாழ்க - பல
பெருமைகள் பெற்றே பெண்ணே வாழ்க
பெண்ணே வாழ்க பெண்ணே வாழ்க - சம
உரிமைகள் பெற்றே பெண்ணே வாழ்க

(பெண்ணுக்கு ....)

இசையமைப்பு :- கலாபூஷணம் திருமதி.தேவி மனோகரி நாகேஸ்பரன்
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொல்லாங்கு செய்யும் கண்ணன்...

**[இசை - நடனம்]**

**பல்லவி**

பொல்லாங்கு செய்யும் கண்ணன்
புதுமலர் வாயி தழில்
புல்லாங் குழலை வைத்துப்
புரிகின்ற மாய மென்ன

**அனுபல்லவி**

புல்லாங் குழ லிசையில்
பூமியைச் சுழல வைக்க
எங்குதான் கற்றானோ - கண்ணன்
யாரிடம் கற்றானோ

**சரணம்**

ஆநிரை மேய்த் திடவும்
ஆயரைக் காத் திடவும்
வேய்குழல் ஊதும் வித்தை
விதிகளை எங்கு கற்றான்

கோபியர் மனம் மயக்கும்
குழலிசை எங்கு கற்றான்
ஆவியை உருகச் செய்யம்
அற்புதம் எங்கு கற்றான் (பொல்லாங்கு....)

கோவர்த் தன கிரியைக்
குடையாய் உயர்த் தியவன்
ஆவர்த் தனஞ் செய்யும்
அழகினை எங்கு கற்றான்

காளிங்கன் தலை மேலே
கால் வைத்து ஆடியவன்
ஊழி தோறும் நிற்க
ஊதிட எங்கு கற்றான்

சின்னக் குழ லாலே
சிந்திய அமு தாலே
என்னவோ மாயம் செய்தான்
என்மனம் மாயச் செய்தான் (பொல்லாங்கு....)

இசையமைப்பு :- திரு.சிவநாதன் பிரதீபன்
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கல மாலைகள்...

**[வரவேற்பு நடனம்]**

மங்கல மாலைகள் மாவிலை வாழைகள்
குங்கும சந்தனக் கும்பங்கள் பாளைகள்

தோரணம் ஆடிட சோபனம் பாடிட
தீபங்கள் ஒளிர்ந்திட மேளங்கள் முழங்க

வரவேற்போம். வரவேற்போம்
வருக வருக என வரவேற்போம்

மலர்களைத் தூவி வரவேற்போம்
மாலைகள் சூட்டி வரவேற்போம்
தீபங்கள் ஏந்தி வரவேற்போம்
தீந்தமிழ் பாடி வரவேற்போம்
(வரவேற்போம் ....)

மங்கல வாத்தியம் தவிலொலி முழங்க
நாதஸ் வரக்குழல் நாதங்கள் வழங்க
எங்கள் விழாவின் எழில்தனைக் காண
இங்குவந் துள்ளவர் யாவரும் மகிழ
(வரவேற்போம் ....)

கூத்துக்கள் காவடி கோலொடு கரகம்
குளிர்மழை முகில்கண்டு ஆடிடும் மயில்கள்
பார்த்ததும் பயம்வரும் பாம்புகள் நடனம்
பரவசம் தரும்பழம் பரதங்கள் ஆடி
(வரவேற்போம் ....)

கிராமிய நடனங்கள், குறவன் குறத்தி,
கீழ்த்திசை நடனங்கள், உழவன் உழத்தி,
கொழுந்தினைக் கிள்ளலும், மீன்பிடி நடனமும்
கூடியே ஒயிலாய் ஆடியே நாங்கள்
(வரவேற்போம் ....)

பிரமுகர் பெரியவர் கலைஞர்கள் அறிஞர்
ரசிகர்கள் யாவரும் வந்தமர்ந் திடுக
திரமுடன் கலைஞர்கள் தரும்கலைத் தேன்
திரவியம் அனைத்தையும் ரசித் திடுக
(வரவேற்போம் ....)

இசையமைப்பு :- கலாநிதி திருமதி அருந்ததி இரவீந்திரன்

நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவிலைத் தோரணங் கட்டுங்கடி...

[வரவேற்பு நடனம்]

மாவிலைத் தோரணங்கட்டுங்கடி – நல்ல
மங்கல கும்பத்தை வையுங்கடி
வாசலைக் கூட்டித் துடையுங்கடி – நல்ல
வர்ணத்தில் கோலங்கள் போடுங்கடி

குத்து விளக்கினைக் கொண்டுவந்து – நடுக்
கோலத்தின் உள்ளாக வையுங்கடி
எத்தனையோ பெரும் மனிதரெல்லாம் – எங்கள்
இந்த விழாக்காண வந்தாரடி

வந்தோரை நாமெல்லாம் வரவேற்போம் – நல்ல
வாழ்த்துகள் தந்திட வரவேற்போம்
செந்தமிழ் பாடியே வரவேற்போம் – வெகு
சிறப்புடன் ஆடியே வரவேற்போம்

மாலைகள் சூட்டியே வரவேற்போம்....முக
மலர்ச்சியைக் காட்டியே வரவேற்போம்
சோலை மலரென வரவேற்போம் – வானைச்
சூழும் நிலவென வரவேற்போம்

பன்னீர் தெளியுங்கள் தோழிகளே....நல்ல
பல்முல்லை தோன்றிட அழையுங்களே
இந்நேரம் எங்களின் பொன்நேரம்....என்று
இன்முகம் காட்டி அழையுங்களே

விருந்தினர் மகிழ்வுற அழையுங்களே – எங்கள்
விழாவினைக் கண்டிடஅழையுங்களே
அருந்தமிழ்ப் பண்போடு அழையுங்களே – உள்ளம்
அன்பில் நெகிழ்ந்திட அழையுங்களே

வாருங்கள் வாருங்கள் பெரியோரே –உங்கள்
வருகை யினால்நாங்கள் மகிழ்ந்தோமே
பாருங்கள் எங்களின் ஆற்றல்களை – பார்த்துப்
பாராட்டு மொழிகளைத் தாருங்களே.

இசையமைப்பு :– கலாநிதி திருமதி அருந்ததி இரவீந்திரன்

நடன அமைப்பு :– நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

## வாசலைக் கூட்டுவோம்...

[வரவேற்பு நடனம்]

வாசலைக் கூட்டுவோம் மாக்கோலம் தீட்டுவோம்
வாழை கமுகு தோரணம் நாட்டுவோம்

நிறைகுடம் குத்து விளக்கினை வைப்போம்
நீட்டிய கரத்தால் வருகென அழைப்போம்

வாருங்கள் வாருங்கள் வாருங்கள் என்றே
மங்கலம் பொங்கிட வரவேற்போம்

விருந்தினராய் வரும் பெரியோரே
விழாவினுக் காய்வரும் விருந்தினரே

அனைவரும் வாருங்கள் அனைவரும் வாருங்கள்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே

மங்கல இசையில் பொங்கிடும் பொலிவில்
மங்கையர் நாங்கள் வரவேற்போம்

எங்களின் விழாவின் எழிலினைக் காண
இன்றிங்கு கூடி வரவேற்போம்

பன்னீர் தெளித்து வரவேற்போம்
பாடல்கள் பாடி வரவேற்போம்

தமிழர்கள்நாங்கள் தமிழ் எங்கள் மொழியாம்
தமிழ்த்தாய் பாதம் பணிந்திடுவோம்

தாய்மண்ணைத் தொழுவோம், தாய்தந்தை பெரியோர்
தகவுடை மாந்தரைப் பணிந்திடுவோம்

தெய்வத்தின் பாதத்தில் தேன்மலர்தூவி
துணையாய் விழாவுக்கு அழைத்திடுவோம்

உய்யட்டும் கலைகள் ஓங்கட்டும்வாழ்வு
ஒற்றுமை நிறைந்திட வரவேற்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மிகுந்து வரவேற்போம்

**[வரவேற்பு நடனம்]**

வாசலைக் கூட்டுவோம் மஞ்சள் தெளிப்போம்
வாருங்கள் கோலங்கள் போட்டு மகிழ்வோம்
மங்கல கும்பமும் சந்தனம் நீறும்
குங்குமம் குத்து விளக்கொடு வைப்போம்

மங்கல தோரணம் மாலைகள் ஆடிட
எங்கணும் மங்கல இன்னிசை பொங்கிட
செங்கையில் மங்கையர் கும்பங்கள் ஏந்திட
நங்கையர் வந்துபன் னீர்தெளித் தழைத்திட

வாருங்கள் வாருங்கள் வாருங்கள் என்றே
வரவேற்போம் - விழாவைக்
காணுங்கள் காணுங்கள் காணுங்கள் என்றே
வரவேற்போம்.

**வேறு**

குங்கும சந்தனப் பொட்டொடு மாலைகள்
சூட்டியே உங்களை வரவேற்றோம்
இங்கிருந் தெங்களை மகிழ்விக்க வேண்டியே
இன்முகத் தோடுநாம் வரவேற்றோம்

(வாருங்கள்....)

**வேறு**

அன்பு மிகுந்துவர வரவேற்றோம் - நெஞ்சில்
ஆசை நிறைந்துவர வரவேற்றோம்
பண்பு நிறைந்தநல்ல பெரியோரே - தமிழ்
பாடி ஆடிநாம் வரவேற்றோம்

ஆரத்தித் தட்டொடு வரவேற்றோம் - நாங்கள்
அனைவரும் கைகூப்பி வரவேற்றோம்
அனைவரும் வருக ஆனந்தம்நிறைக
அமர்க அமர்கஇந்த அவையினிலே.

(வாருங்கள்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருக வருக இங்கு வருகவே...

**[வரவேற்பு நடனம்]**

வருக வருக இங்கு வருகவே – உங்கள்
வரவு மகிழ் வுதரும் வருகவே
பருக இனிய தமிழ்ப் பண்பிலே – இன்று
பலரும் கூடி வர வேற்கிறோம்

(வருக....)

அரிய பல நிகழ்வு காணவே – இந்த
அரங்கு நிறைந் திருக்கு வருகவே
பெரிய மனிதர் பல பிரமுகர் – இங்கு
பிரிய முடன் வந்தார் வருகவே

(வருக....)

மகிழ்ச்சி மன நிறைவு பெருகவே – இந்த
மன்றில் கூடி வர வேற்கிறோம்
புகழ்ச்சிக் குரிய விருந் தினர்களே! – உம்மைப்
புதிய முறையில் வர வேற்கிறோம்

(வருக...)

நிகழ்வு மகிழ் வுதர வாழ்த்துவீர் – மன
நிறைவு யாரும் பெற வாழ்த்துவீர்
நிகழ்வு காண வந்த பெரியோரே – உம்மை
நிறைந்த மன துடனே வரவேற்றோம்

(வருக....)

✢✢✢✢✢✢✢✢✢✢✢✢✢✢



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாருங்கள் வாருங்கள் வாருங்கள் என்றே...

[வரவேற்பு நடனம்]

**பல்லவி**

வாருங்கள் வாருங்கள் வாருங்கள் என்றே
வாஞ்சையுடன் இங்கு வரவேற்போம் – தேன்
உண்டு மகிழ்ந்திடும் வண்டுகளாய் விழாக்
கண்டு மகிழ்ந்திட வந்துள யாவரையும்

(வாருங்கள்....)

**அனுபல்லவி**

வாழை மரங்களாம் பாளையாம் கமுகாம்
வாசலில் தோரண வளைவு களாம்
தாழை இலைகளாம் வேழக் கரும்பாம்
தாமரை மலர்களாம் மாலை களாம்

(வாருங்கள்....)

**சரணம்**

மாவிலைத் தோரணம் வாசலில் ஆடிட
மங்கல வாத்தியம் மேளங்கள் முழங்கிட
தூவிய பன்னீர்த் துளிகள் நனைக்க
தூயபொற் பூரண கும்பங்கள் அழைக்க

(வாருங்கள்....)

ஆரத்தித் தட்டொடு மங்கலப் பொட்டு
அழகு மிளிர்ந்திடும் மாலைகள் இட்டு
கோலத்தி னால்எழில் கொண்டிடும் மண்டபம்
குதூகலித் திடநாம் விருந்தினர் யாவரையும்

(வாருங்கள்....)

இயலிசை நாடக முத்தமிழ் விழாவாய்
இங்குள யாவரும் மகிழ்ந்திடும் விழாவாய்
நயமிகு நிகழ்வினை நாடியே வந்தோர்
நயந்து மகிழ்ந்திட நாமழைக் கின்றோம்

விருந்தினர் பெரியவர் கலைஞர்கள் கவிஞர்
விழவினைக் கண்டிட வந்துள ரசிகர்
அருந்தமிழ்ப் புலவர்கள் அனைவரும் வருக
ஆனந்த பரவச கலைத்தேன் பருகுக

(வாருங்கள்...)

மழைமுகில் கண்டிடும் மயில்களைப் போலே
மகிழ்வொடு தாவிடும் மான்களைப் போலே
வளைந்து நெளிந்திடும் பாம்புகள் போலே
வாருங்கள்ஆடியே வர வேற்போம்

(வாருங்கள்....)

இசையமைப்பு :- திரு.சோ.ஜெயச்சந்திரா

நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருக வருக என வரவேற்போம்...

**[வரவேற்பு நடனம்]**

வருக வருக என வர வேற்போம் – மனம்
மகிழ அனைவரையும் வரவேற்போம்.

அருமை பெருமை மிகு விழாவினிலே – வந்த
அனைத்துப் பெரியோரையும் வரவேற்போம்

**வேறு**

வாசலைக் கூட்டிப் பெருக்குங்கடி – நல்ல
வாசநீர் எங்குந் தெளியுங்கடி
நேசமோ டொன்றாகக் கூடுங்கடி – வந்து
நிரைநிரை யாய்நின்று ஆடுங்கடி

மாவிலைத் தோரணங் கட்டுங்கடி – நல்ல
வாழை கமுகுகள் நாட்டுங்கடி
பூவினை அள்ளியே தூவுங்கடி – இந்தப்
புனித விழாவினைப் போற்றுங்கடி

**வேறு**

பூரண கும்பம் ஏந்திய படியே
புன்னகை தவழ வர வேற்போம்
ஆரத்தித் தட்டினை அழகாய்க் காட்டியே
அனைவரும் மகிழ வர வேற்போம்.

**வேறு**

சந்தணங் குங்குமம் தாம்பூலம் வழங்கி
சந்தோச மாகவே வரவேற்போம்
வந்தனங் கூறி வருகெனப் பாடி
செந்தமிழ் மரபினில் வர வேற்போம்

**வேறு**

நாதஸ் வரத்தொடு தவிலொலி முழங்கிட
நர்த்தன மாடியே வர வேற்போம்
பாதச் சிலம்புகள் பண்ணிசை பாடிட
பாடியும் ஆடியும் வர வேற்போம்

மாலை அணிவித்து மங்கலப் பொட்டிட்டு
மங்கலம் பொங்கிட வர வேற்போம்
சோலைக் குயிலெனத் தோகை மயிலெனச்
சோபனம் பாடிஆடி வர வேற்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோலக் குறவள்ளி...

[நடனம்]

கோலக் குற வள்ளிக் குலமடி அம்மே - இந்தக்
குமரன் எமக்கு மரு மகனடி அம்மே.
சாலப் பழங் குடியும் நாமடி அம்மே - எங்கள்
சரித்திரம் உல கறியும் ஆடடி அம்மே

(கோலக் குறவள்ளி....)

கோயில்க் குளத் தமரும் ஈசரும் எங்கள் - குறக்
குலத்திலே தான் பெண் ணெடுத்தார் கூறடி அம்மே
வாயிலே வந்த தெல்லாம் குறியாச் சொல்வோம் - எங்கள்
வாக்குகள் பொய்த்த தில்லே வாருங்கள் இங்கே

(கோலக் குறவள்ளி....)

வேறு

பாசி மணி ஊசி மாலை மூலி கைகளும்
பள பளக்கும் புலிப் பல்லும் விக்கக் கொணந்தோம்
காசி ருந்தா ஓடி வாங்க நரிக் கொம்பு முண்டு
கையில் கட்டி வைச் சிருந்தா அதிஸ்டமு முண்டு

(கோலக் குறவள்ளி....)

அருள கத்துப் பிள்ளை களுக் காசியும் வேண்டி
அகிலாண்ட ஈஸ் வரரைப் பாடு வோம் வாங்க
இருள கற்றி உலகம் எங்கும் இன்பம் நிறைய
ஈச னருள் வேண்டி நாங்க ஆடுவோம் வாங்க

(கோலக் குறவள்ளி....)

வேறு

கைய நீட்டுங்க ஐயா
கைய நீட்டுங்க
கைய நீட்டுங்க அம்மா
கைய நீட்டுங்க
நல்ல பலன் சொல்ல அம்மா
நாக்கில வருவா - இப்ப
நடக்கிறத சரியாச்சொல்ல
வாக்கில வருவா - அம்மா
வாக்கில வருவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

முக்கண்ணன் ஒளிச்சிருந்த மூங்கில் இதுங்க - எங்க
முருகன்குழல் ஊதினதும் இதில தானுங்க
கண்ணனுக்கும் புல்லாங்குழல் இதுவேதானுங்க - அவரு
கன்றுகாலி மேய்த்த தெல்லாம் இதுல ஊதீங்க

முருகனது மயிலில் எடுத்த இறகு இதுங்க - சிவன்
மூத்தபிள்ளை யார்குடுத்த கொம்பு இதுங்க
அருகிருக்கும் அகிலாண்ட ஈஸ்வரி அம்மா - ஈசன்
அருகிருக்கும் அகிலாண்ட ஈஸ்வரி அம்மா - அகிலாண்டேஸ்வரர்
அருகிருக்கும் அகிலாண்ட ஈஸ்வரி அம்மா - கோவில்க்குளம்
அகிலாண்டேஸ்வரர் அருகிருக்கும்
அகிலாண்ட ஈஸ்வரி அம்மா - வவுனியா கோவில்க் குளம்
அகிலாண்ட ஈஸ்வரரின் ஆலயத்திலே - அவர்
அருகிருக்கும் அகிலாண்ட ஈஸ்வரி அம்மா
அருளோடு தந்ததிந்தக் குங்குமந் தாங்க

வேறு

அம்மா
அகிலாண்ட ஈஸ்வரியே அருளவேண்டும்
அப்பா
அகிலாண்ட ஈஸ்வரரே அருளவேண்டும்

வேறு

கைய நீட்டுங்க அம்மா
கைய நீட்டுங்க

வேறு

எங்க வள்ளி கையிபோல
இருக்குது கையி
எல்லாம் நிறைஞ்ச முருகன் வருவார்
மனசில வையி

வேறு

கைய நீட்டுங்க ஐயா
கைய நீட்டுங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

பொய்யில் லாமல் குறி சொல்லுவேன்
கொஞ்சம் பொறுங்க - உங்க
போன ஜென்மம் கூட நாங்க
புரிய வைப்போங்க

**வேறு**

மணமுடிக்க பொண்ணு வரப் போறா பாருங்க
மகாலெச்மி மாதிரியாய்
இருப்பா பாருங்க
மகராசன் ஆகி நீங்க வாழப் போறீங்க
மறக் காமல் எங்களையும்
வாழ வையுங்க

**வேறு**

ஆண் :
"நாலு ஊரு சுத்த வேணும்
வாடி என் சிங்கி - ஊரு
நாக ரீகம் நமக்கு வேணாம்
வாடி என் சிங்கி

பாலு குடிக்கும் கொழந்தைய உன்
மாரில போடு
பாலு கேட்டு அழுதுச் சின்னா
காலில போடு - ரெண்டு
காலில போடு.

பெண் :
"கடவுள் குடுத்த புள்ளக் காட்டி
காசு பெருசா
கையில் ஒண்ணு மார்பில் ஒண்ணு
கஷ்டம் பெருசா

நடந் திடுங்க பின்னாடியே நானும் வாறேங்க
நல்ல வெய்யில் ஆச்சுதுன்னா பெரிய தொல்லேங்க

**வேறு**

ஆண் :
குறிசொல்லி ஒழைச்சதிலே கொஞ்சமிண்டாலும் - இந்தக்
கொழந்தைகளின் வாழ்வுக்காகக் கொடுத்திட்டுப் போவோம்

பெண் :
அறிவுள்ள மனிசர் இதச் செஞ்சிட வேணும்
அகிலாண்ட ஈஸ்வரரே காத்திட வேணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறவன் குறத்தி நடனம்

குறத்தி 1 : தில்லாலங்கடி தில்லாலே
தில்லாலங்கடி தில்லாலே
தெருத்தெருவா சுற்றிவந்தோம்
தில்லாலங்கடி தில்லாலே.

குறத்தி 2 : எத்தனை ஊர் சுற்றி வந்தீங்க
இங்கே நில்லுங்க
என்ன என்ன கண்டுவந்தீங்க
எனக்குச் சொல்லுங்க.

குறத்தி 3 : கொழந்தப் பொள்ளயக் கொடுமப் படுத்தி
வேல வாங்கிறா - கொண்டுபோய்
கடத்தி வச்சு காசு பறிச்சு
வயிறு வளக்கிறா.

குறத்தி 4 : அப்பா அம்மாக்கு வயசு போனா
அடிச்சு வெரட்டுறா - அவர
அனாத யாக்கி முதியோர் இல்லம்
அனுப்பி வைக்கிறா

குறத்தி 2 : ஆ....அப்பிடியா
என்ன அநியாயம்!

குறத்தி 5: பெத்த பொள்ளய அனாத யாகப்
போட்டுச் செல்லுறா - இங்க
பொழைக்க வழி தெரி யாமே
கொள்ள அடிக்கிறா.

குறத்தி 1: பொய் பொரட்டு ஏ மாற்று
கொல கள வெல்லாம் - இங்க
பொல்லா மனிசர் செஞ்சு நாட்டில்
பெருத்துத் திரியிறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறத்தி 2: ஆ.... அப்பிடியா....

குறத்தி 3: படிக்கப் போற பொடியள் கூட
குடிச்சுத் திரியிறா - இந்தப்
பாழாப் போன போதப்பொருளால்
பாழாப் போகிறா

குறத்தி 5: போதப் பொருளக் குடிச்சுப் போட்டு
பொண்ணத் தேடுறான் - தெருவில்
போற வாற பொம்புளப் பொள்ளயக்
கெடுத்து அழிக்கிறான்

குறத்தி 4 : சின்னப் பொள்ள கொமரி கெழவி
பேத மில்லாம - புடிச்சு
கொடும யாகக் கெடுத்து வாழ்வச்
சூற யாடுறா

குறத்தி 2: என்ன அநியாயம்....
இதக் கேப்பார் இல்லையா...

குறத்தி 1: கொழந்த கொமர விட்டுப் போட்டு
தாய்மார் சிலரிங்கே - நல்லா
ஒழைக்க எண்டு வெளி நாட்டுக்கு
ஓடிப் போகிறா

குறத்தி 3: போன தாய்மார் ஒழைச்சு அனுப்ப
புருசன் குடிச்சிற்று - பெத்த
பொள்ள யளச் சீரழிச்சு
பொழுது போக்குறா.

குறத்தி 2: ஐயோ பாவம். இப்பிடியுமா...

குறத்தி 5: ஒழச்சு வாழும் வயசில் இளைஞன்
ஊரு சுத்துறான் - படிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கா போகும் சின்னப் பொண்ண
வளைச்சுக் கெடுக்கிறான்

குறத்தி 4 : படிச்ச வங்க கூட இங்கே
குத்தஞ் செய்யிறா - நல்ல
பண்பில் லாம அன்பில் லாம
பலபேர் இருக்குறா

குறத்தி 2: இப்பிடிப் போனா ஒலகம் உருப்படுமா.

குறத்திகள்: அகிலாண்ட ஈஸ்வரரே காக்க வேண்டும் - எங்கும்
அநியாயம் நடக்காம காக்க வேண்டும்.
அகிலாண்ட ஈஸ்வரித்தாய் காக்க வேண்டும் - எல்லா
அக்கிரமச் செயல்களையும் போக்க வேண்டும்

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிட்டக் கிட்ட வந்து கண்ணன்

[நடனம்]

கிட்டக் கிட்ட வந்து கண்ணன்
தொட்டுத் தொட்டுப் பேசுறான்
எட்டி எட்டிப் போனால் கூட
என்னைத் தொட்டு இழுக்கிறான்

(கிட்டக்கிட்டவந்து....)

பட்டுக் கன்னம் தன்னைத் தட்டி
பல்லைக் காட்டிச் சிரிக் கிறான்
எட்டி ஓடக் கால்வைத் தாலும்
இதயம் செல்ல மறுக்குதே

(கிட்டக்கிட்டவந்து....)

கண்ணன் தொட்டால் அங்க மெல்லாம்
களி கொண்டு துள் ளுதே
எண்ண மெல்லாம் தேனாய்ப் பாகாய்
இனித்து என்னை மயக்குதே

(கிட்டக்கிட்ட வந்து....)

பார்வை யாலே என்னுள் பாய்ந்து
பர வசத்தில்ஆழ்த்தி னான்
கூர்மை யான விழிகள் மூலம்
குதூ கலத்தில் வீழ்த்தினான்.

(கிட்டக்கிட்டவந்து....)

குழலால் என்னை மயங்க வைத்து
கூத்தில் மனம் லயிக் கிறான்
அழகால் என்னை வியக்க வைத்து
அருகில் நெருங்கச் செய்கிறான்.

(கிட்டக்கிட்டவந்து....)

புல்லாங் குழலின் இசையைக் கேட்டால்
புதிய இரத்தம் பாயு தே
புல்பூண் டெல்லாம் குளிர்ந்து நிமிர்ந்து
புதிதாய்த் தழைத்துச் செழிக்குதே

(கிட்டக்கிட்டவந்து....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றொரு நாளிலே தோழி....

[நடனம்]

பல்லவி

அன்றொரு நாளிலே தோழி - என்
அனுபவப் புதுமையைச் சொல்லுவேன் கேள்நீ

அனுபல்லவி

என்றினி அவன் வருவானோ - என்
இளமையின் பெருமையை எனக்களிப் பானோ

சரணம்

வண்டுகள் கீதம் இசைத்திடும் சோலை
வானமெல் லாமிருள் சேர்ந்திடும் மாலை
கன்றுகள் தாயுடன் மனைபுகும் வேளை
காத்திருந் தேனவன் வரவுக்காய் பேதை

(வேறு)

சில்வண்டு ராகம் இசைத்திடப் பாம்புகள்
சீறிப் படம் விரித் தாடிடக் கண்டேன்
பல்வகைத் தாள ஜதிகளுக் கமைவாய்
பரவச மாய்மயில் ஆடிடக் கண்டேன்.

(வேறு)

சில்லென வண்டுகள் தேன்குடித் தேகின
சிறுசிறு பறவைகள் சிறகடித் தெழுந்தன
கல்லென அருவிகள் கால்பரந் தோடின
கண்களோ காதலன் வரும்வழி தேடின

(வேறு)

மான்கன்று கள்துள்ளி மகிழ்ந்திடக் கண்டேன்
மரங்களில் மந்திகள் மருவிடக் கண்டேன்
தேன்மலர்ச் சோலையில் தென்றலும் வந்தது.
தேய்பிறை போல்க்கதிர் சென்று மறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு)

கண்களும் பூத்தன கால்களும் சோர்ந்தன
கையறு நிலையோ கனவிது தானோ
எண்ணமுஞ் சலித்திட ஏதுமொன் றறியேன்
இரவுவந் திடிலோ என்னிலை எதுவோ

(வேறு)

சூரியன் பூமியைச் சேர்ந்திட லாச்சு
சூழ்ந்திருள் பரவிடும் நேரமு மாச்சு
காரிருள் மாலையில் கன்னிநான் தனியோ
காமனின் கணைகட்கு வீணேநான் பலியோ

(வேறு)

பாவியெ னுநிற்க லாமோ - இந்தப்
பாவையின் காதலும் பாரினில் பாழோ
ஆவியே நீரெங்கு சென்றீர் - என்னை
அழைத்திங்கு அழவிட்டு ஏனின்று கொன்றீர்

(வேறு)

(புல்லாங்குழல் ஒலி கேட்கிறது)

வேய்ங்குழல் நாதமோ விண்ணவர் அமுதோ
வேதனை தரும்விரக நோய்க்கிது மருந்தோ
தூயஅக் குழலொலி ஒருபுலன் திறந்தது
துண்ணென உடலெங்கும் பரவசம் பரந்தது

(வேறு)

கண்ணனவன் அருகில் வந்தான் - எந்தன்
கைவளை சோர்ந்திடக் கட்டி அணைத்தான்
எண்ணமெல் லாமவன் நிறைந்தான் - எந்தன்
இதயக் கமலத்தில் எங்கும் உறைந்தான்

(வேறு)

ஆனந்த பரவசம் அடைந்தேன் - அவன்
அணைப்பினி லேஇந்த அகிலத்தை மறந்தேன்
தானந்த மிலாப்பெருங்காதல் - உள்ளம்
தகித்திட அவனுடன் இரண்டறக் கலந்தேன்.

இசையமைப்பு :- கலாபூஷணம் திருமதி வதனி ஸ்ரீதரன்
ஆடியவர் :- செல்வி தர்ஷிகா செல்வராஜா, செல்வி பிருந்திகா செல்வராஜா (அரங்கேற்றம்)
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமுதகானமே....

ஆண் : அமுத கானமே அசுர பானமே
அழகு தீபமே அமர வானமே
நிலவில் வாடினேன் கனவை நாடினேன்
நினைவில் உன்முகம் தேடினேன்

பெண் : அழகு மாரனே பருவ வீரனே
அமுத ஊரனே தீரனே

ஆண் : மலரும் வானிலே மதியும் பூவென
பழகும் காதல்கை கூடுமே
பலரும் போற்றிட உலகம் ஏற்றிட
பருவ மாலைதோள் மாற்றுவோம்

பெண் : பறவைகள் போலே உலகினில் நாமே
சிறகுகள் இன்றியே பறந்திடுவோமே
உறவினில் ஆடிடும் உணர்வுகள் கோடியே
உலக இன்பங்கள் தேடிடுவோமே

ஆண் : உனது கால்மடி எனது தாய்மடி
உனது மடியில் நான் பிள்ளையே
எனது கார்முடி உனது கைப்பட
எனது ஆயுள்ஓர் கோடியே

பெண் : உனது மார்பினில் நானோர் மாலையே
உலகம் உருளுதோ இல்லையோ
எனது கைகளில் உருளும் உன்னுடல்
உலகம் உருளுமே காலமும்

ஆண் : வானும் மண்ணுமாய் – அடி
நீயும் நானுமாய்
வளரும் காதலில் மூழ்குவோம்
ஊனும் உருகிட உணர்வும் பெருகிட
உலக போகமே காணுவோம்

பெண் : தேனும் பாலுமாய் தென்றல் மாலையாய்
தேவகீதமே பாடுவோம்

ஆண் : காணும் யாவுமே காதல்ச் சோலையே
கானம் பாடிநாம் ஆடுவோம்

இசையமைப்பு : இசை இளவரசன் கந்தப்பு ஜெயந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவியம் புகழும் காலத்தில்....

பெண் :- காவியம் புகழும் காலத்தில் நாமே
கம்பன் கையில் கவிதைக ளானோம்
ஓவியம் எழுதா உணர்வுகள் கொண்டோம்
உலகில் நாமே உயர்வென வாழ்ந்தோம்

ஆண் :- மோன வெளியிலே முத்துக்கள் போலே
மோகனப் பாடல் பாடி மகிழ்ந்தோம்
வானத்தின் பெரிதென காதலில் கூடி
வளமாய் இளமையின் வாழ்த்துக்கள் பெற்றோம்

பெண் :- வள்ளுவன் பாடிய இன்பத்துப் பாலில்
வளரும் கனவினை நாளும் வளர்த்தோம்
உள்ளம் உருகிட திருப்புகழ் பாடி
உடலும் ஒன்றாய் உருகி மகிழ்ந்தோம்

ஆண் :- திருவா சகத்தினில் ஒருவா சகத்தையும்
தெய்வத் தமிழினில் தேவா ரத்தையும்
மறவா திருந்தோம் மகிழ்வுடன் பாடி
மலர்மேல் வண்டென மயக்கத்தில் ஆழ்ந்தோம்
(மகிழ்ச்சி....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூவுது குயிலொன்று...

கூவுது குயிலொன்று தனியே நின்று - அது
குலவிடத் துணையொன்று இலையே என்று
ஆடிடும் மயிலோடு துணையைக் கண்டு
ஆசையில் அலைமோத ஏக்கங் கொண்டு

(கூவுது......)

தாமரை சூரியன்மேல் காதல் கொள்ளும் - கதிர்
காலையில் தழுவஇதழ் விரிந்து துள்ளும்
சாமரை வீசிவரும் வண்டின் கூட்டம் - மதி
சங்கமஞ் செய்யஅல்லி போடும் ஆட்டம்

(கூவுது......)

பூவிதழ் வண்டோடு மருவும் வேளை - காமன்
பூசையில் அம்புமலர் தூவும் மாலை
ஆவியும் உருகிடவே தனியே நின்று - குயில்
ஆசையில் கூவுதம்மா துயரங் கொண்டு

(கூவுது......)

தென்றலும் வந்துமலர் இதழைத் தீண்டும் - மனம்
தீயினில் வெந்துவிட உருகிச் சோரும்
அன்றிலும் துணையோடு சேரக் கண்டு - இந்த
அகிலத்தில் தான் மட்டும் தனியோ என்று

(கூவுது......)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மாலை நேரம்....

பெண் :பொன் மாலை நேரம்
பூஞ் சோலை ஓரம்
என் ஆசைக் கண்ணன்
ஏன் இன்று இல்லை

(பொன் மாலை ......)

இளந் தென்றல்க் காற்று
இலை களில் நேற்று
சொன் னதைப் போலே
வந் ததே இன்று

(என் ஆசைக் ....)

மலர் களின் வண்டு
வந் ததைக் கண்டு
மனம் வாடு றேனே
மன் னவன் எங்கே

( பொன் மாலை ....)

வா வென்று சொல்லி
கன் னத்தைக் கிள்ளி
சென் றவன் இன்று
சென் றது எங்கே

(பொன் மாலை ....)

மயி லென ஆடி
குயி லெனப் பாடி
மகிழ்ந் ததும் கனவோ
மங்கை என் நினைவோ

(பொன் மாலை ....)

இசை : M.முத்துசாமி
பாடியவர் : சுஜாத்தா அத்த நாயக்கா

இலங்கை வானொலி மெல்லிசைப் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோல்வி அடைந்து விட்டேன்

ஆண் : மல்லிகைத் தோட்டத்திலே - மாலை
மங்கும் வெய்யிலினிலே
மாரன் கணை தொடுத்தான் - இளம்
மங்கை நினைவினிலே

(மல்லிகைத் .....)

**வேறு**

கள்ளை இதழினில்
காட்டி மறைத்ததைக்
காவியம் ஆக்கிவிட்டாள் -நெஞ்சில்
ஓவியம் தீட்டிவிட்டாள்

(மல்லிகைத் .....)

**வேறு**

முல்லைச் சிரிப்பினிலே - நல்ல
முத்தை உதிர்த்துவிட்டு
இல்லை எனுமிடையே - அசைய
இன்றெனை ஏனழைத்தாள்

**வேறு**

வாழை இரண்டென்னை
வாவென் றழைத்திட்ட
வார்த்தைகள் என்னஎன்ன - அவள்
வாயிதழ் சொன்னதென்ன

(மல்லிகைத் .....)

**வேறு**

வில்லைப் புருவத்திலே - வளைத்து
வீழ்த்தி மனத்தினிலே
தொல்லை விளைத்துவிட்டாள் - அதிலே
தோல்வி அடைந்துவிட்டேன்

**வேறு**

அல்லி மலர்களை
அள்ளி முகமென
ஆரத்தி காட்டிநின்றாள் - கத
வோரத்தில் வீட்டில் நின்றாள்

(மல்லிகைத் .....)

இசை : M. முத்துசாமி
பாடியவர் : ஸ்ரனி சிவானந்தன்
இலங்கை வானொலி மெல்லிசைப் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணின் மணி றாஜாவே

காலைப் பனிக் குளித்து
கதிரவன் தனை நினைத்து
காத்திருக்கும் றோஜாவே - எந்தன்
கண்ணின் மணி றாஜாவே

(காலைப் .....)

பிரிவுத் துய ரினிலே
இரவுத் தனி மையிலே
நானுகுத்த கண்ணீரோ - உந்தன்
மேலிருக்கும் பனி நீரோ

(காலைப் .....)

சோலை யிலே மலரெடுத்துச்
சூட்டியே மனம் மகிழ்ந்தார்
ஆலையிலே கரும்பானேன் - இன்று
ஆசையிலே துரும் பானேன்

(காலைப் .....)

தென்ற லும் புயலாச்சு
தேன் மலரும் நெருப்பாச்சு
அன்றிலாய் மகிழ்ந்த தெல்லாம் - பிரிவில்
அத்தனையும் பொய் யாச்சு

(காலைப் .....)

ஆடி யதும் நாடகமோ?
அன்ப தற்கு ஊடகமோ?
காதலும் நடிப் பென்றால் - உலகில்
சாதலன்றி ஏது செய்ய

(காலைப் .....)

இசை : T.V. பிச்சையப்பா
பாடியவர் : யோகராசா
இலங்கை வானொலி மெல்லிசைப் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வா நிலவே வான் நிலவே....

பெண் : வா நிலவே வான் நிலவே - உன்னை
வர வேற்கும் என் மனமே

(வா நிலவே .....)

மா மலர்ச் சோ லையிலே - நான்
வாடி நின்றேன் - உன்னைத்
தேடி நின்றேன்

(வா நிலவே .....)

மாலை இருள் போக்கிடவே
வான் வெளியில்
வா நிலவே - நீ
வந்தால் என்னுயிர்
வந்துவிடும் - நீ
சென்றால் என்னுயிர்
வெந்து விடும்

(வா நிலவே .....)

அந் தியிலே சந்திரனே
வந்த வுடன்
நான் வருவேன்
என்று அவர்
என்னை இங்கு
வந்து நிற்கத்
தூது விட்டார்

துணையு மில்லை
துணிவு மில்லை
தூது சொல்ல
யாரு மில்லை
உனை அழைத்தேன்
உளங் களைத்தேன்
ஓடி இங்கு வா நிலவே

(வா நிலவே .....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கென்று நினைத்தேன்...

பெண் : கிழக்கென்று நினைத்தேன் வெளுக்க வில்லை
கீழ் வானில் உதயம் பிறக்கவில்லை
வழக்கொன்று தொடுத்தேன் முடிக்க வில்லை
வாழ்க்கையின் பயணம் ருசிக்க வில்லை

(கிழக்கென்று .....)

**வேறு**

பனி மழைக் கால மரமாய் நின்று
துளித் துளி யாய்நீர் சொரி கின்றேன்
இனி யொரு வசந்தம் வருமோ அறியேன்
இது தான் விதியின் தொடர் கதையோ

(கிழக்கென்று .....)

**வேறு**

வாழ்வில் சோகம் மூடும் நேரம்
வசந்தம் நீயே என்றிருந்தேன்
உந்தன் நிழலில் எந்தன் பயணம்
தொடரும் என்றே துணிந்திருந்தேன்

(கிழக்கென்று .....)

பாலில் நீராய்ப் பழகிய காலம்
பசுமை நினைவாய்த் துடிக்கிறதே
மானில் ஒன்று பிரிந்தது இன்று
மனதோ காய்ந்து வெடிக்கிறதே

(கிழக்கென்று .....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசும்புல்லில் வேள்வி நடக்கும்

பெண் : குயில் கூவும் இளவேனிற் காலம் - பூங்
குழல் மூடும் புதுமல்லிக் கோலம்
மயில் ஆடும் மாமழை மேகம் - அன்று
மனங் கண்ட தில்லையே சோகம்

(குயில் .....)

பசும் புல்லில் வேள்வி நடக்கும் - இளம்
பரு வங்கள் மந்திரம் ஓதும்
விசும் பன்று நெய்சொரிந் தாற்போல் - பனி
விளை யாட்டாய் சிந்தியே போகும்

(குயில் .....)

இளந் தென்றல் வந்தெனை மோத - குயில்
இசை வந்து மோகனம் பாட
அழ கென்ற தேவதை போலே - நான்
அவர் மார்பில் தூங்கி மகிழ்ந்தேன்

(குயில் ....)

இருள் சூழ்ந்ததே அன்று மாலை
இனி இல்லை இன்பத்தின் சோலை
அருள் இல்லை அவர்மனம் பாலை
அரும் பாதோ புது இளங் காலை

(குயில் .....)

++++++++++++++



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலை மணல்ப் பாழ் வெளியில்

ஆண் : பாலை மணல்ப் பாழ் வெளியில்
பாவை உந்தன் நினை வலையில்
பாடு கின்றேன் ஒரு ராகம்
பாவி நெஞ்சின் அனு ராகம்
(பாலை ....)

பெண் : காலை வரும் மாலை வரும்
காற்று வரும் கூற்று வரும்
காத லனைப் பிரிந்த வர்க்கோ
காலை இல்லை மாலை இல்லை
(காலை ....)

ஆண் : நித்தி ரையில் கனவு வரும்
நீய ருகில் வந்து நிற்பாய்
சொத்தென உன் கரம் பிடிப்பேன்
தூக்க மில்லை கனவு மில்லை
(பாலை .....)

பெண் : கனவு காணும் ஆசை கொண்டு
கண் மூடிப் படுத் திருப்பேன்
கனவு ஏது தூக்கம் இல்லை
கண் சிவக்க விழித் திருப்பேன்
( கனவு .....)

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிமை நெருப்பு

பெண் :

தென்னங் கீற்றின் மீ தினிலே
தென்றல் வந்து மோ திடுதே
தேன்மலர் தன்னை வண் டினமும்
தேடியே வந்து கூ டிடுதே

என்னைத் தேடி ஓடிவர
இன்னும் என்ன தாமதமோ
(தென்னங் ....)

பனியும் மழையும் பக லிரவும்
பௌர்ணமி நிலவும் வசந் தங்களும்
இனியுந் தனிமை நெருப் பினிலே
எரித்து என்னை வதைப் பதுவோ
( என்னைத் தேடி ....)

முன்னை உன்னை எனக் கெனவே
முடித்து வைத்தான் விதி எழுதி
இன்னும் என்னை ஏன் மறந்து
இருக்கின் றாயே என் உயிரே
( என்னைத் தேடி ....)

அன்னை ஆகிப் பகல் முழுதும்
அணைக்கும் துணையாய் இர வினிலும்
விண்ணைத் தழுவும் முகி லேனவே
என்னைத் தழுவ வா உயிரே
( என்னைத் தேடி ....)

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலரும் சமமென உலகமைப்போம்

கஞ்சிக் கில்லாதார் சிறியவராய் - அதைக்
கண்டுகொள் ளாதார் பெரியவராய்
இங்கொரு ராச்சியம் இருக்குதடா - இதை
எண்ணினால் கலகம் பிறக்குதடா

(வேறு)

உழைப்பவர் வாட உண்பவர்ஆட
ஊழ்வினை என்றொரு விதி வகுத்தார்
பிழைப்பிது வானால் பின்னிது என்ன
பெரும்பிழை மனிதா பெரும் பிழையே

(கஞ்சிக் கில்லாதார்.....)

வெயிலிலே எரிந்து மழையிலே குளிர்ந்து
வேதனைத் தீயினில் பலர் வாட
அயலிலே இருப்போர் ஆனந்த மாய்ப்பல
அரிய சுகங்களில் திளைக்கின்றார்.

(கஞ்சிக் கில்லாதார்.....)

உண்ணவும் உடுக்கவும் உறங்கவும் கூட
உழைப்பவன் வழியின்றி உழலு வதோ
கண்ணெனக் கல்வியைக் கற்றவர் பெரியோர்
கவனத்தில் எடுத்திடத் தயங்கு வதோ

(கஞ்சிக் கில்லாதார்.....)

இதுதான் விதியோ இல்லைச் சதியோ
இந்நாட்டு மன்னர்கள் நாம் இல்லையோ
எதுவும் பொதுவாய் இறைவன் படைத்தான்
என்பது எமக்கொரு கண் துடைப்போ

(கஞ்சிக் கில்லாதார்.....)

விதியினை மாற்ற விழித்தெழு தோழா
விடுதலை அதிக தூரம் இல்லை
சதிவலை அறுத்து சரித்திரம் படைப்போம்
சகலரும் சமமென உல கமைப்போம்

(கஞ்சிக் கில்லாதார்.....)

✤✤✤✤✤✤✤✤✤✤✤✤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறள்

**(நடனப் பாடல்)**

**குறள் - 01**

01. **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

எழுத்துக்கள் யாவும் அகரத்தை மூலமாய்
அடிப்படை யாகக் கொண்டே அமைந்தன.
அதுபோல்....
உலகம் இறைவனை அடிப்படையாகக்
கொண்டே அமைந்தது.

**குறள் - 02**

02. **கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்**

இறைவனை வனங்கலே கற்றதன் பயனாம்
இறைவனை வணன்கா விடிற்பயன் இல்லை.

**குறள் - 19**

03. **தானம் தவம் இரண்டும் தங்கா வியன்உலகம்**
**வானம் வழங்காது எனின்**

பிறருக்கு நன்மை செய்தலே தானமாம்.
தனக்கு நன்மை செய்தலே தவமாம்.
வானம் நீரை வழங்காது போனால்
தானமும் இல்லை தவமும் இல்லை.

**குறள் - 50**

04. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

பூமியில் வாழ்வோர் வாழ்ந்திடும் முறையை
பூமியில் வாழ்ந்தோர் வகுத்தே தொகுத்தார்.
முன்னவர் வகுத்த முறைப்படி வாழ்வோர்
மூவுல கும்புகழ் தெய்வங்கள் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறள் - 54

05. **பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின்**

பெண்ணே உலகிற் பெரியதோர் சக்தி
பெண்ணிலும் மேலோர் சக்தியே இல்லை.
பெண்ணின் சக்தியோ ஒழுக்கத்தில் உள்ளது
பேணலும் உறுதியும் பெண்ணின் குணங்களாம்.

கற்பெனும் உறுதி பெண்ணிடம் இருந்தால்
பெண்ணிலும் பெரியதாய் வேறொன்றும் இல்லை.

குறள் - 64

06. **அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்**

மழலைகள் தானே மனையின் செல்வம்
மழலைகள் தானே மகிழ்ச்சியின் உச்சம்.
மழலைகள் கைகளால் அளைந்திட்ட உணவே
அமிழ்தினும் இனிதாம். அமிழ்தினும் இனிதாம்.

குறள் - 66

07. **குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்**

புல்லாங் குழலிசை இனியது என்பார் - அது
பொருந்தாது யாழிசை இனியது என்பார்.
தங்கள் குழந்தையின் மழலை மொழியிசை
கேட்காத மக்களே இவ்வகை சொல்வார்.

எல்லா இசையிலும் இனியது மழலையே
என்பதை அறியார் மழலை இல்லாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறள் - 81

08. **இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

இல் வாழ்க்கையே இந்த உலகினில் இன்பம்
இல் அறம் என்பதே நல் அறமாகும்.
இல்வாழ்வு வாழ்தலின் இலட்சியம், இன்பம்
விருந்தோம்பி உதவலே வேறில்லை அன்றோ.

குறள் - 100

09. **இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று**

வார்த்தையில்இனிமையே
வாழ்க்கையில் இனிமையாம்

இனியவை இருக்க இன்னாத பேசல்
இழுக்கே ஆகும். இதுபிழை ஆகும்.

அமுதெனும் நெல்லிக்கனி
அருகிருக்க யாரும்
காஞ்சூரங் காயினை
உண்ணு வாரோ

அமுதோ உயிர்க்கு உறுதி பயக்கும்.
காஞ்சூரங் காயோ கடு விஷமாகும்.

இனியதைப் பேசுவோம். இனிதாய்ப் பேசுவோம்.
இனியதே நடக்கும் இதுவே வாழ்க்கை.

குறள் - 131

10. **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்**

ஒழுக்கமே சிறப்பாம் ஒழுக்கமேஉயர்வாம்
ஒழுக்கமே மனித குலத்தினை உயர்த்தும்
உயிரினும் மேலாம் ஒழுக்கம் என்பதை
உணர்ந்தால் இந்த மானுடம் சிறக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறள் - 322

11. **பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.**

கற்றவர் பலப்பல கருத்துக்கள் சொன்னார்
கல்வியால் உலகை நிலைபெற வைத்தார்.
அவர்கள் சொன்னதில் அதிகம் சிறந்தது
அனைவர்க்கும் பிரித்துக் கொடுத்துயிர் காப்பதே.

செல்வத்தின் பயனோ ஈதலே ஆகும்
செல்வம் செல்வம் என்றே துடிப்பது.
பல்வேறு உயிர்களும் வாழ்ந்திட நினைந்து
பகுத்துக் கொடுத்தலே பண்பா டாகும்.

குறள் - 969

12. **மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்.**

ஒருமயிர் உதிர்ந்தாலும் உயிர்வாழாக் கவரிமா
உலகத்தில் மானத்தின் உயரிய வடிவம்.
மானத்தில் சிறுகுறை வந்தாலும் வாழார்
மானமே பெரிதென மதிக்கும் மனிதர்.

குறள் - 774

13. **கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
**மெய்வேல் பறியா நகும்.**

அது ஒரு போர்க்களம்.
ஆனைகள் சேனைகள் நிறைந்த அமர்க்களம்.
அங்கொரு வீரன்
தன்னைக் கொல்ல வந்ததோர் யானையைத்
தனியாய் எதிர்த்தான் அப்பெரு வீரன்.

கையிலிருந்த வேலை எறிந்தான் - தும்பிக்
கையுடை யானை பயந்து திரும்பிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு யானை இவனை எதிர்த்தது
இன்னொரு வேல்இவன் கைகளில் இல்லை.

எங்கே வேல்ஒன்று எடுக்கலாம் என்றே
எல்லா இடத்திலும் பார்வையைச் செலுத்தினான்.

யானையோ கோபமாய் அருகில் வந்தது
யாரிடம் வேலினைப் பெறுவது நினைத்தான்.

அப்போது அவனுக்கு ஞாபகம் வந்தது
அவனை நோக்கி எதிரி எறிந்த
அரியதோர் வேல்அவன் உடலில் இருந்தது.
அதனைப் பிடுங்கினான் அழகாய்ச் சிரித்தான்.

குறள் - 1315

14. **இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்**
**கண்ணிறை நீர்கொண் டனள்.**

அன்புத் தோழா! உனக் கொன்று சொல்வேன்.
அன்றொரு நாளில் நடந்ததோர் சம்பவம்.

நானும்அவளும் நம்நிலை மறந்தே
நலமாய் மகிழ்ந்து அருகரு கிருந்தோம்

உன்னைப் பிரியேன். ஒருபோதும் பிரியேன்
என்றவள் தனக்கோர் சத்தியம் செய்து
அவள் மனம் மகிழச் செய்யவே நினைத்து

இந்தப் பிறப்பில் நானும் நீயும்
பிரியவே மாட்டோம். என்றுநான் உரைத்தேன்.

அவளோ மகிழ்ச்சி அடையவே இல்லை.
ஆறாத கவலை கொண்டனள். அழுதாள்.

இந்தப் பிறப்பில் பிரியலாம் என்றால்
அடுத்த பிறப்பில் பிரிந்திடு வோமா
என்றே நினைத்து ஏங்கி அழுதாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறள் - 1244

15. **கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்**
**தின்னும் அவர்க்காணல் உற்று.**

அவனும் அவளும் அன்புடன் இருந்தனர்.
அவர்களின் காதல் முதிர்ந்தது கனியாய்.

"பொருள் கொண்டு வருவேன்
பொறுத்திரு கண்ணே"
என்றவன் சென்றான் இவளோ துடித்தாள்.
நாட்கள் கடந்தன. நலிந்தாள் நங்கை.

அவளின் மனமோ அவனிடம் சென்றது
அவளின் கண்களோ வாசலில் நின்றன.
அவளின் கண்கள் அவனைக் காணாது
அலைந்து துடித்தன. அவளுயிர் குடித்தன.

ஆற்றா மடந்தை மனத்திடம் சொன்னாள்
அவரிடம் செல்கையில் அழைத்துச்செல் கண்களை.

இவைஇங் கிருந்தால் என்னைக் கொன்றிடும்.
கண்ணையும் கொண்டுசெல் நெஞ்சே....

இசையமைப்பு :- திரு.சிவநாதன் பிரதீபன்
நடன அமைப்பு :- நிருத்தியவாணி திருமதி சூரியயாழினி வீரசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடம் வாழ்க
[நடனம்]

### காட்சி - 1
பாடல்

விலங்குக ளோடு விலங்குக ளாக
வீடுகள் மலையின் குகைகளே ஆக
நிலங்களில் வாழும் விலங்குகள் பூச்சிகள்
நீர்வாழ் வனவொடு பறவைகள் ஊர்வன
தினந்தினம் உண்டவன் அன்றைய மனிதன்
தீராப் புலநெறி வாழ்வில் அலைந்தான்

உயிரினம்

பாம்புக ளோடும் யானைக ளோடும்
பாயும் புலிகள் கரடிக ளோடும்
சிங்கம் பன்றி சிலந்தி ஓநாய்
சிறுநரி பெருமரை ஆந்தை கழுகுகள்
காண்டா மிருகம் டைனோசர் இவற்றொடும்
ஆண்டாண் டாக அமர்செய் தழிந்தான்

மானுடன்

இடிமழை மின்னல் இயற்கையின் இன்னலில்
துடிதுடித் தழுந்தித் துணிவொடு எழுந்தான்.
அடிபணிந் தெதனை வணங்குவ தென்றும்
கொடிதென எதனைக் கொல்வது என்றும்
ஆறாம் அறிவின் துணையை நாடினான்
அன்றே தானொரு மானுடன் என்றான்

கல்லைக் கம்பை ஆயுத மாக்கித்
தொல்லை தரும்பகை துரத்தி அடித்தான்.
வில்லை அம்பை வேறுவே றாகும்
பல்வகை ஆயுதம் கண்டு பிடித்தான்.
அல்லல் தரும்இடி மின்னல் மழைபுயல்
ஆண்டவன் என்றே பணிந்து வணங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

விலங்குகள் தம்மை வென்றவன் கொன்றான்
விருந்தாய் அவைகளைத் தின்றவன் நின்றான்.
கலங்கா மனத்தொடு அன்றன் றுழைத்தான்
கருங்கற் தோளால் வாழ்வை அழைத்தான்

**வீடுகள்**

காட்டு விலங்குகள் சிலதைத் தமது
வீடு விலங்காய் மாற்றி வளர்த்தான்
வாட்டும் நோய்குளிர் மழைவெயில் காற்று
தாக்கா திருக்க வீடுகள் அமைத்தான்

**சமூகம்**

குகைகளில் வாழ்ந்தவன் குடிசைகள் அமைத்தான்
குடும்பம் எனுமொரு அமைப்பில் இணைந்தான்
குடும்பம் பலவும் சேர்ந்து கலந்ததால்
கூட்டம் கூட்டமாய் சமூகம் வளர்ந்தது

**நாகரிகம்**

ஆற்றங் கரைகளில் பயிர்வகை செய்து
அறிவால் உயர்ந்தநற் பண்பு வளர்த்தான்
போற்றும் பலவகை நாடுகள் அமைத்துப்
புதுப்புது நாகரி கம்பல கண்டான்

தனியொரு மனிதன் தன்கரு மங்களை
இனிதாற் றிடமுடி யாதென நினைத்தான்.
ஆளுக் கொருதொழில் அமைத்துப் பிரித்தான்
அன்பால் ஒன்றாய்ச் சமூகம் அமைந்தது.

**சாதி**

காவலன் ஒருவன் அரசன் என்றான்
களிப்பொடு பலதொழில் பலரும் இயற்றினர்
ஏற்றத் தாழ்வே இல்லா திருந்தவன்
இன்பமாய் ஒன்றே குலமெனக் கொண்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

ஒற்றுமை யாக ஆதர வாக
ஒன்றாய்ப் பலதொழில் செய்த மனிதனே
வேற்றுமை கண்டான் வேற்றுமை வளர்த்தான்
வீதியில் சாதிச் சண்டையில் வீழ்ந்தான்

சாதிச் சண்டை

வெட்டுங்கள் என்றான் வீழ்த்துங்கள் என்றான்
குத்துங்கள் என்றான் கொல்லுங்கள் என்றான்
கட்டுங்கள் அடியுங்கள் கைகால் முறியுங்கள்
முட்டுங்கள் மோதுங்கள் மொத்துங்கள் உதையுங்கள்
சொத்துக்கள் அழியுங்கள் சுடுநெருப் பெறியுங்கள்
அத்தனை வீடும் அழியட்டும் நெருப்பிலே

தத்தனா தத்தனா தத்தனா தானா
தத்தனா தத்தனா தத்தனா தானா

காட்சி - 2

வாழ்வில் மகிழ்ச்சி மலர்ந்திட என்றே
நாளும் கலைகளில் நாட்டம் செலுத்தினான்
ஆடல் பாடல் இசைக்கரு விகள்பல
சிற்பம் ஓவியம் சிறப்புற அமைத்தான்

அனுபவம் அறிவாய்ச் சிந்தையைத் தூண்ட
அருமையாய் மனிதன் பகைகளை அழித்தான்
இயற்கையை வெல்ல முயன்று முயன்று
எத்தனை கண்டு பிடிப்புகள் செய்தான்

ஒலிவடி வுக்கெலாம் வரிவடி வெடுத்தான்
மொழிகள் தோன்றின அறிவும் வளர்ந்தது.
மொழியை ஆக்கிய மனிதன் உலகின்
முதற்தர உயிரினம் தானே என்றான்.

மொழியே வெறியாய் மாறிய தாலே
மொழிவழி மனிதன் போரில் அழிந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொழிச் சண்டை**

என்மொழி உயர்ந்தது
உன்மொழி தாழ்ந்தது
என்றவன் கூறிப்
பிரிவினை வளர்த்தான்.

மொழியே வெறியாய்
மாறிய தாலே
மொழிவழி மானுடன்
போரில் அழிந்தான்

**காட்சி - 3**

அறிவால் இயற்கையை வென்றுதன் வசமாய்
ஆள முயன்றவன் ஆசையில் வீழ்ந்தான்
ஆசையில் வீழ்ந்த மனிதனின் அறிவு
அழிவுப் பாதையை அன்றே திறந்தது

நாளை பற்றிய சிந்தனை எழுந்தது
நானெனும் முனைப்பும் எழுந்து கிளர்ந்தது
நாளைய வாழ்விற்குச் சேமிக்கத் தொடங்க
நட்பும் பகையும் வளரத் தொடங்கின

நாளைய கவலை மனிதனை வாட்டக்
கோழையாய் மனிதன் குனிவை அடைந்தான்
ஏழை செல்வன் எனும்நிலை தோன்ற
ஏக்கம் பெருமிதம் எல்லாம் வளர்ந்தன

விலங்கினைக் கொல்ல ஆயுதம் செய்தவன்
மனிதனைக் கொல்ல ஆயுதம் செய்தான்
அணுக்குண் டேவு கணையெனப் பலவகை
அழிவா யுதங்களை ஆக்கிக் குவித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகளங்கன்

அறிவை வளர்த்து மானுட வாழ்வை
அமர நிலைக்கு உயர்த்த நினைத்தவன்
அரக்கனாய் மாறி அழிவைச் செய்ய
அறிவே துணையாய் மாறிய தின்று

உயிரை வளர்க்க உடம்பை வளர்க்க
உலகம் செழிக்க உழைத்த விஞ்ஞானம்
உயிரைப் பறிக்கும் கொலைஆ யுதங்களை
ஊரு ராகவே உற்பத்தி செய்ததே

விஞ் ஞானத்தின் விந்தைகள் கண்டு
வியக்கும் நிலையோ வினாடி யிலே
பொய்யாய்ப் போக உலகை அழிக்கும்
புதுப்புதுக் குண்டுகள் கண்டு விட்டோம்

யுத்தம் யுத்தம் யுத்தம் யுத்தம்
எங்கும் யுத்தம் என்றும் யுத்தம்
எப்போதும் யுத்தம்

(கோரதாண்டவம்)

## காட்சி - 4

தனக்கு மேலொரு சக்தி இருப்பதைத்
தானே உணர்ந்து தாள் பணிந்தான்
எனக்கு உனக்கெனும் எண்ணம் நீக்கி
எல்லாம் இறைசெயல் என்று நினைத்தான்

**சமயம்**

கடவுளை நம்பிய மனிதன் வழியே
சமயம் என்பது வளர்ந் ததுவே
ஒன்றா இரண்டா ஒரு நூறாக
இன்றவன் சமயம் வளர்த்து விட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தின் பெயரால் நன்மைகள் விளைந்தது
மானுடம் உயர்ந்தது ஒரு காலம்
மதமாய் அதுவே மனிதனைப் பிடிக்க
மனுக்குலம் அழியுது இக் காலம்

(மதக் கலவரம்)

எங்கள் மதமே சிறந்தது என்றான்
எங்கள் கடவுளே சிறந்தவர் என்றான்
அங்கங் கொன்றாய்த் திரண்ட மனிதன்
அங்கங்கள் அறுத்தே அரும்போர் செய்தான்

சமயம் ஒழுக்க நெறியென அறியான்
சமயப் பெயரில் சண்டைகள் செய்தான்
கடவுளின் பெயரால் கால்கை முறித்தான்
கடவுளின் பெயரால் கடுங்கொலை செய்தான்

### மதக் கலவர நடனம்

### காட்சி - 5

நாடு பிடிக்கப் போர்களைச் செய்தான்
நல்லோர் பலரைக் கொன்று குவித்தான்
பாடுபட் டுழைப்போர் பசியால் வாடப்
பாராண் டவனோ பகட்டில் மிதந்தான்.

(நாடு பிடிக்கும் சண்டைக் காட்சி)

### காட்சி - 6

குகையில் பதுங்கி குந்தி இருந்தவன்
வகைவகை யான வீட்டில் வாழ்கிறான்
காட்டில் மிருகமாய் அலைந்து திரிந்தவன்
கணினி மயமாய் உலகை ஆக்கினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

எத்தனை மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும்
என்ன பயன்இதில் மனிதா
அத்தனை மாற்றமும் ஏமாற் றங்களே
அன்பிலா மானுடம் இனிதா

வேறு

இன்றே நாமொரு சூளுரை செய்வோம்
இனிதே மானுடப் பண்பு வளர்ப்போம்
கொன்றே மனிதனை மனிதன் வாழ்வதைக்
கொடுமை எனவிடுத் துலகைக் காப்போம்

புறத்தில் நிகழும் முன்னேற் றங்களை
நிறுத்தி முதலில் மானுடம் காப்போம்
மனிதனை முதலில் மனிதனாய் மாற்றி
மானுட உலகை நாம் படைப்போம்

மனிதர்கள் யாவரும் ஒருதாய் மக்களாய்
வாழும் வழிவகை கண்டு பிடிப்போம்
இனியொரு மனிதன் மனிதனைக் கொல்லாது
இருக்கும் உலகை நாம் படைப்போம்

முடிவு

இதுவா வாழ்க்கை இதுவா மானுடம்
இன்றே எழுவோம் கை கோர்ப்பீர்
எதுவா யிருந்த போதும் உலகைப்
பொதுவாய் ஆக்கிப் புகழ் சேர்ப்போம்.

அவன் இவன் அது இது
அனைத்திற்கும் வாழ்வை ஆக்கி வைப்போம்
நவயுகம் இதுவென நாமொரு சூளுரை
செய்தே நாமினித் தலை நிமிர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடனே உன் வாழ்விதுதானா
மானுடம் இதுதானா
ஊனுடம் பெடுத்த உயிர்வகைதனிலே
உயர்ந்தவன் நீதானா

அன்பால் உலகை ஆக்கலை விடுத்து
அழிவைச் செய்திடும் மானுடனே
அன்பிலா மானுடம் வளர்ந்த வழிதனை
அறிந்தொரு வழிகாண் மானுடனே

**வேறு**

எழுக எங்கள் தோழர்களே
தோழியர் வருக துணைதருக
மானுடம் வாழ வழிசமைப்போம்
மானுடம் வெல்லும் வழிசமைப்போம்

வாழ்க.... வாழ்க....
மானுடம் வாழ்க! மாநிலம் வாழ்க!
மனிதர்கள் யாவரும் சமனென வாழ்க
வாழ்க.... வாழ்க....

**விருத்தம்**

உயிர்வகை தனிலே நாமே
உயர்வெனப் பெருமை கொண்டாய்
அயர்வினை வென்று இந்த
அகிலத்தை ஆட்டி வைத்தாய்
துயர்தனில் உலகை வீழ்த்தித்
துடித்திடும் நிலையைக் காணும்
செயல்தனைச் செய்தல் நன்றா
சிந்திப்பாய் மனிதா நன்றாய்

நடன அமைப்பு :செல்வி சண்முகப்பிரியா குலேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்குளம் மகாவித்தியாலய நூற்றாண்டுவிழா

**பல்லவி**

ஆண்டுகள் நூறு கடந்ததே - எங்கள்
ஆலய மாம்வித்தி யாலயத் தாய்க்கு
(ஆண்டுகள் நூறு....)

**அனுபல்லவி**

நீண்டிடு புகழ்பெறு நித்தில மாம் வன்னி
பூண்டிடு மாலை புதுக்குளம் தன்னில்
(ஆண்டுகள்நூறு.... )

**சரணம்**

அடங்காப் பற்றாய்த் திகழ்ந்தநம் மண்ணில்
அன்னியர் தமைஎதிர் வன்னியர் மண்ணில்
புடமிடு பொன்னாய் ஜொலித்திடும் எங்கள்
புதுக்குளம் மகா வித்தி யாலயத் தாய்க்கு
(ஆண்டுகள் நூறு....)

பண்டார வன்னியன் ஆண்டநம் பூமி
பாலை முதிரை வனம்நிறை பூமி
கண்டார் மனங்கவர் கனிமரம் பசுமான்
காட்டு விலங்குகள் மயில்குயில் பெருகிடும்
(அடங்காப் பற்றாய்த் .....)

வந்தாரை வாழ்விக்கும் வவுனியா மேற்கில்
வளமெல்லாம் நிறையும் புதுக்குளம் பதியில்
செந்தா மரைக்குளம் செந்நெல் வயல்நிலம்
செறிந்திடும் பதிவாழ் செல்வமாய் ஒளிரும்
(அடங்காப்பற்றாய்த் .... )

அறிவே ஒளிஎனும் அரியதோர் மகுடம்
ஆளுமை மிக்கதோர் புதியநற் சமூகம்
செறிவுறு நெற்கதிர் சேர்ந்ததோர் தாமரை
சிலிர்த்தெழு சூரியன் ஏடுகொள் சின்னம்

சித்தி விநாயகர் சிவபுரத் தீசர்
சேர்ந்தருள் செய்திட சிறந்திடும் தாயே
எத்திசை யும்புகழ் ஏற்றியே வாழ்க
எழுச்சி மிகுந்திடப் போற்றினோம் நாமே.
(ஆண்டுகள் நூறு ....)

இசையமைப்பு : திரு.சோ.ஜெயச்சந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்யா விநாயகனே சரணம்

**பல்லவி**

விநாயகனே சரணம் - வித்யா
விநாயகனே சரணம்

**அனுபல்லவி**

வவுனியா தமிழ் மத்ய மகாவித்தி யா லயத்தில்
கவினுற வே இருந்து கருணை செய்யும் எங்கள்
(விநாயகனே.....)

**சரணம்**

கருவண்டு யாழ்இசைக்கக் கருமுகில் தவில் இசைக்க
அருகமர்ந்தே குயில்கள் அற்புதப் பண் இசைக்க
பெருமையுடன் மயில்கள் பதம் பிடித்தே ஆடும்
அருமைமிகு வன்னியில் அமைந்தைகல் லூரியில் வாழ்
(விநாயகனே.....)

வாசலில் கீதாசாரம் வரவேற்கச் சுவர் களிலே
தோரண மாய்க்குறள்கள் தோகை மயில் தமிழணங்கு
பாரதி வள்ளுவரும் பலவித அறக் கருத்தும்
ஊரதிர விளங்க ஓங்கி உயர்ந் திருக்கும்
(விநாயகனே.....)

ஐயாத் துரைஅரங்கும் அழகிய நூ லகமும்
விஞ்ஞான கூடங்களும் வீதிமை தானங் களும்
மாணவர் விடுதியொடு ஆசிரிய விடுதி களும்
அஞ்ஞான இருள்அகற்றும் அகல் விளக்குகள் நிறைந்த
( வவுனியா .....)

இசையமைப்பு : கலாபூஷணம் திருமதி. தேவிமனோகரி நாகேஸ்பரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பக்தர்களைக்காத்தருளும் பம்பைமடு வைரவா

பம்பை மடுக் குளத் தருகே
பாலை மர நிழ லிருந்து
பக்தர்களைக் காத்தருளும் வைரவா - எங்கள்
பரம் பரையைக் காத்தகுல வைரவா
(பம்பைமடு.....)

நம்பி வரும் அடிய வர்க்கு
நல்ல ருளைத் தரு பவரே
அம்மாள்பிள்ளை யாருடனே அமர்ந்தருளி - எங்கள்
அல்லல் களைப் போக்குமெங்கள் வைரவா
(பம்பைமடு.....)

சூல வடி வா யிருந்து
சுற்றங் களைக் காப்ப வரே
ஆலகண்டன் திருவடிவே அனைவருக்கும் - உந்தன்
அருள்வழங்கிக் காத்திடுவாய் அருளாளா
(பம்பைமடு.....)

காவல்த் தெய்வம் நீ அல்லவோ
காப்ப துந்தன் கடன் அல்லவோ
ஆவலோடு உனைவணங்கும் அடியவர்க்கு - நீ
அருள் மழையைப் பொழியவேண்டும் அதிதீரா
(பம்பைமடு.....)

செருக் கினை அடக்க வந்தாய்
சிர மொன்றைக் கொய் தெடுத்தாய்
கருத்துடனே பிரமதேவன் கபாலத்திலே - தேவர்
குருதியும் அகந்தையுமாய் பலியும் பெற்றாய்
(பம்பைமடு.....)

நாயி னைப் போலஎம்மை அருகில்
நல் லருளி னோ டிருத்தி
நலம்பெறநீ வாழவைப்பாய் வடுகதேவா - என்றும்
நாமுன்னை வணங்கிடுவோம் நலந் தருவாய்
(பம்பைமடு.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகளங்கன்



அகளங்கன் என்னும் புனை பெயரில் எழுதிவரும் திரு.நாகலிங்கம் தர்மராஜா வவுனியா பம்பைமடு பெற்றெடுத்த இலக்கிய நட்சத்திரம்.

மரபு வழிப்பட்ட இலக்கியங்களை ஆழ்ந்து படித்தவர். மரபுக் கவிதை, ஆக்குவதிலும் வித்தகர். புதுமைகள் கைவந்த கலைஞர்.

பல்வகை நாடகங்கள், புனைகதைகன், சிறுவர் இலக்கியம், கட்டுரைகள் என பல்துறைப் படைப்பாற்றல் மிக்கவர். ஒய்வு நிலைக் கணித ஆசிரியர். மாருதம் உட்பட பல மலர்களின் ஆசிரியர்.

இளைஞர்களும் போற்றும் தமிழறிஞர். மேடைப் பேச்சிலும், விவாத அரங்கிலும், விமர்சனத் துறையிலும் ஆற்றல் காட்டி நிற்கும் நம் தமிழ் உறவுக் காரர். இலக்கிய விருதுகளின் சொந்தக் காரர்.

இசை நடனப் பாடல்களில் இலக்கிய நயம் சொட்டும் வித்தையை இந்த நூலில் இலக்கிய நெஞ்சங்கள் இரசிக்கலாம்.

**கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை
யாழ்ப் பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை

ISBN : 978-624-6141-00-4
9 786246 141004

விலை : 1000/-

வாணி கணனிப் பதிப்பகம். தொ.பே: 024 2223658

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org